# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2509 - 2026 ඔක්තෝබර් මස 02 වැනි සිකුරාදා - 2026.10.02

2509 ஆம் இலக்கம் - 2026 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 02 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (IIஅ) – விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 3390 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 3405 |


**கவனிக்க.-** (i) குடிவரவு சட்டமூலம் 2026.09.25 ஆந் திகதிய, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குரிய குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

(ii) வெளிநாட்டுப் பயங்கரவாதிப் போராளிகளைத் தடுத்தல் சட்டமூலம் 2026.09.25 ஆந் திகதிய, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குரிய குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

(iii) இலங்கைக் கிரிக்கெட் சட்டமூலம் 2026.09.25 ஆந் திகதிய, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குரிய குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2026, ஒற்றோபர் மாதம் 23 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2026, ஒற்றோபர் மாதம் 09 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**பிரசன்ன ஜயரத்ன**,
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2026 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 02 ஆந் திகதி.

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

3387 - B 82835 (2026/10)

SINCE 2014 Gazette.lk AMBITIONS REALIZED

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

1. **வேண்டப்படும் பொதுத் தகைமைகள்** :

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிற பதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகாண் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

2. **சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரசாங்க சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர்; தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

3. **நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள்** :

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்க வேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகாண் நிலையிலேயே இருக்கும். தகுதிகாண் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகாண் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுரத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/ 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரசாங்க சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரசாங்க சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகாண் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரசாங்க சேவையில் ஏற்கனவே நிரந்தர/ தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

4. **பணிக்கமர்த்தும் நியதிகள்** :

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரசாங்க சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிச் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரசாங்க சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரசாங்க சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

5. **யுத்த சேவைச் சலுகை** :

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

6. **அரசாங்க சேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள்** :

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரசாங்க சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவு செய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமையபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

7. **தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை** :

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம், படி முதலியன சேர்ந்திருக்கா.

8. **ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை** :

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/ 90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

SINCE 2014 Gazette.lk AMBITIONS REALIZED

## பரீட்சார்த்திகளுக்கான விதிகளும் அறிவுறுத்தல்களும்

1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கத் திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் காலத்துக்குக்காலம் வெளியிடப்படுகின்ற சட்டங்களுக்கும் ஒழுங்குமுறைகளுக்கும் ஏற்ப ஒழுகுவதற்கு சகல பரீட்சார்த்திகளும் கட்டுப்பட்டவர்களாவர்.

1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கத் திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் 20 ஆம் வாசகத்தின் மூலம் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்துக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய கீழ்க் குறிப்பிடப்படும் நிபந்தனைகள் மற்றும் கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன.

அனைத்துப் பரீட்சார்த்திகளும், கீழ்க் குறிப்பிடப்படும் விதிகளுக்கு கட்டுப்பட வேண்டும் என்பதுடன் இவ் விதிகளில் எவற்றையேனும் மீறும் பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் தீர்மானத்துக்கு அமைய கீழ்க் குறிப்பிடப்படும் தண்டனைகளில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட தண்டனைகளுக்கு உட்படுத்தப்படுவார்.

I. விசாரணைக்கு உட்படுத்தப்படுகின்ற முழுப் பரீட்சைக்கும் அல்லது அதன் ஒரு பகுதிக்கு தோற்றுவதற்குத் தடை விதித்தல்;
II. விசாரணைக்கு உட்படுத்தப்படும் பரீட்சையின் ஒரு பாடத்திற்கு அல்லது மொத்தப் பரீட்சைக்கும் தகுதியற்றவர் ஆக்குதல்;
III. இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படுகின்ற அனைத்துப் பரீட்சை களுக்கும் தோற்றுவதற்கு வாழ்நாள் தடை விதித்தல்;
IV. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படுகின்ற பரீட்சைகளில் தோற்றுவதற்குத் தடை விதித்தல்;
V. இடைநிறுத்தப்பட்ட, பரீட்சைக்கான தடை உடன் கடிதம் ஒன்றை வழங்குதல்;
VI. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு சான்றிதழ் தடை செய்யப்படல்;
VII. பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் கீழ் குற்றவியல் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்வதற்காக பரீட்சார்த்தியை காவற்றுறையிடம் ஒப்படைத்தல் அல்லது அக்குறித்த செயற்பாடு தொடர்பாக காவற்றுறையில் புகார் செய்தல்;
VIII. பரீட்சார்த்தி அரசாங்க ஊழியராக அமையும் சந்தர்ப்பத்தில் குறித்த பரீட்சார்த்தியின் செயற்பாடு தொடர்பாக (ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக) குறித்த பரீட்சார்த்தியின் நியமன அதிகாரிக்கு அறிவித்தல்.

பரீட்சைக்கு முன்பு, பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது அல்லது பரீட்சைக்கு பின்பு அல்லது வேறு எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் அவ்வாறான பரீட்சார்த்தி தொடர்பாக நடவடிக்கை எடுக்கும் அதிகாரத்தை பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், தம்வசம் கொண்டவர் ஆவார். இது தொடர்பாக அவரால் மேற்கொள்ளப்படும் தீர்மானம் இறுதியானதாகும்.

1. சகல பரீட்சார்த்திகளும் பரீட்சை மண்டபத்தினுள் மற்றும் பரீட்சை நடைபெறும் வளாகத்தினுள் பரீட்சை மேற்பார்வையாளருக்கு அவரது பணிக் குழாமுக்கு, அதே போன்று ஏனைய பரீட்சார்த்திகளுக்கு இடையூறு அல்லது தடங்கல்கள் ஏற்படாத வகையில் நடந்துகொள்ள வேண்டும். பரீட்சார்த்திகள் பரீட்சை வளாகத்தின் சொத்துகளுக்கு அல்லது பரீட்சை ஊழியர்களின் தனிப்பட்ட சொத்துகளுக்கு சேதம் ஏற்படுத்துதல் கூடாது.
2. பரீட்சார்த்திகள் பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் காலப் பகுதியிலும் பரீட்சை ஆரம்பிப்பதற்கு முன்பும் அதே போன்று பரீட்சை நடைபெற்று முடிவடைந்தவுடனும் பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழுவின் அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப நடந்து கொள்ளல் வேண்டும்.
3. பரீட்சையின் போது வினாப்பத்திரத்திற்கு விடையளிப்பது ஆரம்பிக்கப்பட்டு அரை மணித்தியாலம் கழிந்த பின்னர் எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திற்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும் பரீட்சை முடிவடையும் வரை எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கும் இடமளிக்கப்பட மாட்டாது. செயன்முறைப் பரீட்சைகள் அல்லது வாய்மொழி மூலமான பரீட்சைகளுக்கு உரிய நேரத்திற்கு சமுகம் அளிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
4. சகல பரீட்சார்த்திகளும் தமது சுட்டெண்ணுக்குரிய ஆசனம் தவிர்ந்த வேறு எந்த இடத்திலும் அமர்தல் கூடாது. பரீட்சை மேற்பார்வையாளரின் விசேட அனுமதி இன்றி தன்னுடைய இடத்தை மாற்றக் கூடாது. தனக்கு ஒதுக்கப்பட்ட ஆசனத்தைத் தவிர வேறு இடத்தில் அமர்தல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்பட நேரிடும்.
5. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி பேணப்பட வேண்டும். எக் காரணம் கொண்டும் பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சை மேற்பார்வை பணிக்குழுவில் உள்ள ஒருவரைத் தவிர பரீட்சை மண்டபத்தினுள் அல்லது வெளியே இருக்கும் எவர் ஒருவருடனும் எந்தவித காரணத்திற்காகவும் கதைத்தல் அல்லது தகவல் பரிமாறல் அல்லது வேறு எந்தவிதமான கொடுக்கல் வாங்கலிலும் ஈடுபடுதல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.
6. பரீட்சை சுட்டெண்ணை மட்டும் கொண்டே பரீட்சார்த்தியின் விடைத்தாள்கள் இனங்காணப்படுகின்றமையால் விடைத்தாளில் தன்னுடைய பெயரை எழுதுதல், விடைத்தாளை இனங்கண்டு கொள்ளக்கூடிய வகையில் ஏதேனும் குறியீடு அல்லது குறிப்பு இடுதல், விடைத்தாளில் அநாகரிகமான அல்லது அவசியமற்ற விடயங்களை எழுதுதல், விடைத்தாளுடன் நாணயத்தாள்களை இணைத்தல் ஆகியவை முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளன. மேலும் வேறு எவரேனும் பரீட்சார்த்தியின் சுட்டெண்ணை தன்னுடைய விடைத்தாளில் எழுதுதலும் மோசடி நடவடிக்கை ஒன்றைச் செய்வதற்கு முயன்றதாகக் கருதப்படும். இனங்கண்டு கொள்ள முடியாத வகையில் சுட்டெண் எழுதப்பட்ட விடைத்தாள்களும் நிராகரிக்கப்படும்;
7. உமக்கு பரீட்சை மண்டபத்தினுள் வழங்கப்படும் தாள்கள் (பரீட்சை நடைபெறும் திகதிக்குரிய நோக்குனரின் குறுகிய கையொப்பம் மற்றும் திகதி இடப்பட்ட விடை எழுதும் தாள்கள்) தவிர வினாத்தாளிலோ அல்லது மேசையிலோ அல்லது வேறு ஏதேனும் இடத்திலோ எவற்றையும் எழுதுதல் கூடாது. இந்த அறிவுறுத்தல்களுக்கு மாறாக செயற்படுதல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்படும்.
8. பரீட்சார்த்திக்கு வழங்கப்படுகின்ற தாள்களை அல்லது விடை எழுதும் புத்தகத்தை கிழித்தல் அல்லது கசக்குதல் கூடாது. பரும்படி வேலைகளை செய்து பார்ப்பதற்காக உபயோகிக்கும் சகல தாள்களையும் தெளிவாக குறுக்காக கோடிட்டு விடைத்தாளுடன் இணைத்தல் அல்லது விடைத்தாளுடன் கையளித்தல் அல்லது வழங்கப்படுகின்ற அறிவுறுத்தலின் படி செய்தல் வேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதப்பட்ட எதனையும் வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. ஒரே வினாவிற்கான விடை இரு இடங்களில் எழுதப்பட்டிருப்பின் அவசியமற்ற விடையைத் தெளிவாக வெட்டி விட வேண்டும்.
9. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக உமக்கு வழங்கப்படுகின்ற தாள்கள் மற்றும் வேறு பொருட்களை பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. இவ்வாறான அனைத்துப் பொருட்களும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திற்கு சொந்தமானதுடன் இவ் விதியினை மீறுதல் ஒரு தண்டனைக்குரிய செயற்பாடாகக் கருதப்படும்.
10. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக தனக்கு வழங்கப்படுகின்ற காகிதாதிகள் ஒவ்வொரு பரீட்சையின் போதும் தனதருகே வைத்துக் கொள்ளக்கூடிய எழுத்து மூலமான அனுமதியுள்ள பொருட்கள் தவிர்ந்த ஏனைய குறிப்புப் புத்தகங்கள், குறிப்புகள் உள்ளடங்கிய தாள்கள் அல்லது கடதாசித்துண்டுகள் போன்றவை பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சைக்குத் தோற்றும் சந்தர்ப்பத்தில் தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் கூடாது. அது போன்றே பரீட்சை மண்டபத்தினுள் கையடக்கத் தொலைபேசி, இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் (Electronic Communication Instruments/ Devices) தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் மற்றும் அந்த சாதனங்கள்/கருவிகளை உபயோகித்து வெளி நபர்களின் உதவிகளைப் பெற்றுக் கொள்ளல் மற்றும் பரீட்சை நடைபெறும் போது வேறு நபர்களுக்கு மற்றும் சமூக ஊடகங்களுக்கு தகவல் அனுப்புதல் மோசடிச் செயற்பாடு என்பதுடன் தண்டனைக்குரிய குற்றமாகும்.
11. இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் மேற்குறிப்பிட்ட 10ஆவது பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள செயற்பாடுகள் தொடர்பாக உபயோகிக்கப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டால் அச் சாதனங்கள்/கருவிகள் உரிய விசாரணை நடவடிக்கைகள் முடிவடையும் வரை பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் வசம் எடுக்கப்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
12. பரீட்சை மண்டபத்தில் அமர்ந்த பின்னர், பரீட்சைக்கு முன் அல்லது பரீட்சை நடைபெறும் சந்தர்ப்பத்தில் எந்தவொரு பரீட்சார்த்தியும் தன் அருகே பரீட்சைக்காக கொண்டு வருவதற்கு அனுமதிக்கப்படாத எந்தவொரு பொருளையும் அல்லது உபகரணத்தையும் வைத்திருத்தல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழாம் கட்டளையிட்டால் சகல பரீட்சார்த்திகளும் தன் வசம் உள்ளவற்றை வெளிப்படுத்துவதற்கும் மற்றும் பரிசோதிப்பதற்கும் கட்டுப்படுவதுடன் இவ்வாறான தேவைப்பாட்டினை மீறுவது மோசடியான செயற்பாட்டை செய்வதற்கு முயற்சித்ததாகக் கருதப்படும்.
13. எவரேனும் ஒரு பரீட்சார்த்தி வேறு ஒரு பரீட்சார்த்தியின் விடைத்தாளிலிருந்து அல்லது புத்தகத்திலிருந்து அல்லது தாளிலிருந்து அல்லது குறிப்பெழுதிய தாள்களிலிருந்து அல்லது சமிக்ஞைகள் மூலம் அல்லது வேறு ஏதேனும் ஒன்றிலிருந்து பார்த்து எழுதுதல் அல்லது பார்த்து எழுத முயற்சித்தல் அல்லது மோசடியாக நடந்து கொள்ளல் என்பன குற்றமாகும். வேறு பரீட்சார்த்திக்கு உதவி செய்தல், வேறு பரீட்சார்த்தியிடமிருந்து அல்லது நபரிடமிருந்து அல்லது பரீட்சை பணிக் குழுவினரிடமிருந்து உதவி பெறுதல் குற்றம் என்பதுடன் விடையளித்து முடிந்த சகல தாள்களையும் எழுதிக் கொண்டிருக்கும் தாளுக்குக் கீழே வைத்து விடையளித்தல் வேண்டும். எழுதுகின்ற தாள்களை மேசையின் மேல் பரப்பி வைத்திருத்தல் கூடாது.
14. பரீட்சை ஆரம்பிக்கப்பட்டு வினாத்தாளுக்கு விடையளிக்கும் போது எக்காரணம் கொண்டும் குறுகிய நேரத்திற்குக் கூட பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கு எந்தவொரு பரீட்சார்த்திக்கும் இடமளிக்கப்பட மாட்டாது. எனினும், ஒரு பரீட்சார்த்திக்கு மலசலகூடத்திற்கு செல்வதற்காக பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டால் பரீட்சை மேற்பார்வையாளரின் உதவி பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரின் கண்காணிப்பின் கீழ் பரீட்சார்த்திக்கு சிறிது நேரம் வெளியே செல்வதற்கு அனுமதிக்கப்படுவார். அவ்வாறு வெளியே செல்லும் முன்பும், மீண்டும் பரீட்சை மண்டபத்திற்குள் வரும் போதும் அவர் சோதனைக்கு உட்படுத்தப்படல் வேண்டும்.
15. பரீட்சை மண்டபத்தில் விடையளிக்கத் தொடங்குவதற்கு முன் அல்லது பின் உரிய பரீட்சார்த்திக்குப் பதிலாக போலிப் பரீட்சார்த்தி ஒருவர் தோற்றுதல் தண்டனைக்கு உள்ளாகக்கூடிய செயற்பாடாகும். ஆளடையாள அட்டையை மாற்றுதல் அல்லது போலி அடையாள அட்டையைச் சமர்ப்பித்தல் ஒரு மோசடிச் செயற்பாடாகக் கருதப்படும்.
16. பரீட்சார்த்தி ஒருவர் அல்லது பரீட்சார்த்தி அல்லாத ஒருவர் எந்தவொரு பரீட்சார்த்திக்கும் தவறான முறையில், மோசடி செய்யும் வகையில் உதவி செய்தல் ஒரு பாரிய குற்றமாக கருதப்படும்.
17. பரீட்சார்த்தி ஒருவர் கீழ்க் குறிப்பிடப்படும் அறிவுறுத்தல்களுக்கமைய செயற்படல் வேண்டும்:
    (i) சகல பரீட்சார்த்திகளும் தனது அனுமதிப்பத்திரத்தில் கையொப்பத்தினை உறுதி செய்து கொள்வதும், விண்ணப்பிக்கப்பட்ட பாடங்கள் மற்றும் அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள பாடங்களுக்கிடையில் பொருந்தாத தன்மை காணப்படின் பரீட்சைத் திணைக்களத்தில் விசாரித்து பரீட்சைக்கு முன் அதைத் திருத்திக் கொள்வதும் மேற்கொள்ளப்பட வேண்டும்;
    (ii) பரீட்சை ஆரம்பிப்பதற்கு அரை (1/2) மணித்தியாலத்திற்கு முன்னர் பரீட்சை மண்டபத்திற்கு சமுகமளித்தல் உசிதமானது என்பதுடன், பரீட்சை மண்டபம் நிச்சயமாகத் தெரியாதவிடத்து பரீட்சை ஆரம்பிக்கும் தினத்திற்கு முன்னரே அது குறித்து விசாரித்து பரீட்சை மண்டபத்தை சரியாக இனங்காணல் சிறந்தது;
    (iii) பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்தி ஒவ்வொரு பாடங்களுக்குத் தோற்றும் போதும் தனது ஆள் அடையாள அட்டையை வழங்கி தனது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.
        (a) ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்தில் சமர்ப்பிக்காவிடின், பரீட்சார்த்தியாய் இருத்தல் இரத்துச் செய்யப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன், ஏதேனும் காரணத்தால் அதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்திற்கு கொண்டு வர மறந்திருப்பின் அதனைப் பற்றி பரீட்சை மேற்பார்வையாளருக்கு அறிவித்து பரீட்சை முடிவடைவதற்கு முன்னர் அவற்றைச் சமர்ப்பிப்பதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
        (b) சகல பரீட்சார்த்திகளும் தனது ஆள் அடையாளம் தெளிவாக வெளிப்படுத்தும் வகையில், முழு முகத்தையும் நன்றாக அடையாளம் காணக்கூடிய வகையில் பரீட்சை நடைபெறும் கால எல்லையில் பரீட்சை மண்டபத்தில் இருக்க வேண்டும்.
    (iv) பரீட்சார்த்தி புளூடூத் (Bluetooth) போன்ற இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகளை (Electronic Communication Devices) உபயோகிக்கவில்லை என்பதனை உறுதி செய்து கொள்வதற்காக பரீட்சை மண்டபத்தில் தனது இரு காதுகளையும் தெளிவாகத் தெரியும் வகையில் வைத்திருத்தல் வேண்டும்;
    (v) பரீட்சை மண்டபத்தில் உமக்கு வழங்கப்படுகின்ற தாள்களை விடுத்து வேறு எவ்வித கடதாசிகளையும் விடையளிப்பதற்கு உபயோகிக்கக் கூடாது. எஞ்சிய கடதாசிகளை மற்றும் வேறு பொருட்களை அசுத்தப்படுத்தாது மீண்டும் உபயோகிக்கக்கூடிய வகையில் உமது மேசையின் மேல் வைக்க வேண்டும்;
    (vi) பரீட்சார்த்திகள் தங்களது பேனா, பென்சில், அழிறப்பர், அடிமட்டம், கேத்திரகணித உபகரணங்கள், வர்ணப் பென்சில் பெட்டி, வர்ண சோக் பெட்டி போன்றவற்றைக் கொண்டு வருதல் வேண்டும்;
    (vii) நீங்கள் உபயோகிக்கும் விடையளிக்கும் புத்தகம் மற்றும் சகல தாள்களிலும் விடையெழுத தொடங்கும் போது உடனடியாக சுட்டெண்ணைத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். விடைத்தாள்களின் இருபுறமும் தெளிவாக, சுத்தமாக விடையெழுத வேண்டும். வினாவொன்றின் ஒரு பகுதிக்கு விடையெழுதிய பின் அவ் வினாவின் மற்றைய பகுதியை ஆரம்பிப்பதற்கு முன் ஒரு வரியையாவது வெறுமையாக விடுதல் வேண்டும். ஒவ்வொரு வினாக்களுக்குமான விடையினைப் புதிய பக்கத்தில் ஆரம்பித்தல் வேண்டும்;
    (viii) விடையளிக்கும் தாளின் இடதுபுற விளிம்புக்கோடு காணப்படுவது வினாக்களின் இலக்கங்களை எழுதுவதற்காகும். வலதுபுற விளிம்புக்கோடு ஒதுக்கப்பட்டிருப்பது மதிப்பிடுபவரின் உபயோகத்திற்காகும். அதனால் அவற்றில் எதுவும் எழுதுதலாகாது. உம்மால் விடையளிக்கப்பட்ட வினாக்களின் இலக்கங்களைப் பிழையாக இடுவது குழப்பத்திற்குக் காரணமாக அமையும் என்பதனால் வினா இலக்கத்தைச் சரியாக எழுதுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்;
    (ix) கணித வினாக்களுக்கு விடையளிக்கும் போது கணக்குச் செய்முறைகள் பார்த்த மற்றும் பரும்படி வேலைகள் அந்தந்த ஒழுங்கில் கணக்கிற்கான விடையைக் கண்டு பிடித்ததன் ஒரு பகுதியாகக் காட்டப்பட வேண்டும். அவசியமான இடங்களில் வரையப்படும் வரிப்படங்கள் மற்றும் படங்கள் சரியானவையாகவும் குறிப்பிடத்தக்க அளவு பெரிதானதாகவும் இருத்தல் வேண்டும்;
    (x) கட்டாயமான வினா மற்றும் தெரிவு செய்யப்பட வேண்டிய ஏனைய வினாக்கள் தொடர்பாக வினாப்பத்திரத்தில் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்தல் வேண்டும். வினாப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப விடையளிக்கப்படாத சந்தர்ப்பங்களில் புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது;
    (xi) ஒவ்வொரு வினாவிற்கும் விடையளித்து முடிந்த பின் விடையளித்த புத்தகத்திற்கு மேலதிகமாக எழுதிய தாள்களை பக்க இலக்கங்களின் ஒழுங்கில் இணைத்து இடதுபுற மேல்மூலையில் கழறாத வகையில் கட்டுதல்/இணைத்தல் வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளிக்கும் முன் சகல விடைத்தாள்களும் இணைக்கப்பட்டுள்ளனவா என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளித்த பின் பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லப்பட்ட எந்தவொரு விடை எழுதிய தாளும் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட மாட்டாது;
    (xii) உங்கள் விடைத்தாளை பரீட்சை மேற்பார்வையாளரிடம் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரிடம் கையளித்தல் வேண்டும். விடைப்பத்திரங்களை சேகரிக்கும் வரை உங்களது ஆசனத்தில் அமர்ந்திருத்தல் வேண்டும். அவ்வாறு செய்வதற்குத் தவறுவதானது, சிலவேளை உமது விடைப்பத்திரம் காணாமல் போவதற்கும் நீர் ஏதாவது பாடத்திற்கு சமுகமளிக்கவில்லை என்று கருதுவதற்கும் காரணமாக அமையும்;
    (xiii) ஏதாவது காரணத்துக்காக பரீட்சை மேற்பார்வையாளருடன் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவருடன் கதைக்க வேண்டிய அவசியம் ஏற்படின், ஏனையவர்களுக்கு இடையூறு ஏற்படாத வகையில் மேசையில் இருமுறை தட்டுவதன் மூலம் சமிக்ஞை செய்தல் வேண்டும்.

**பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்.**

இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

Gazette.lk

# பதவிகள் - வெற்றிடம்

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

### முஸ்லிம் / மேலதிக முஸ்லிம் விவாக பதிவாளர் பதவி – (சிங்களம்) மாத்தறை மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்ட பிரிவுகளுக்குரிய முஸ்லிம் / மேலதிக முஸ்லிம் விவாகம் பதிவு செய்தல் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர் உரிய முஸ்லிம் விவாகம் பதிவு செய்தல் பிரிவினுள் நிரந்தர வதிவிடதாரியாகவும் மற்றும் போதியளவான ஆதனத்திற்கு உரித்தான பிரதேசவாசிகளின் மதிப்பினைப் பெறும் ஆளுமையுடையவராகவும் இருத்தல் வேண்டும்.

2. இந்தப் பதவி ஊதியம் வழங்கப்படாத சேவையாவதுடன் இதற்காக ஆண்/ பெண் இருபாலாரும் விண்ணப்பிக்க இயலும்.

3. விண்ணப்பம் கோரப்படும் இறுதித் தினம், விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்கு குறையாதிருத்தல் வேண்டும் என்பதுடன் 55 வருடங்களுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும்.

4. இளைப்பாற்றும் உச்ச வயதெல்லை 65 ஆண்டுகள் ஆவதுடன் வயது 65 தொடக்கம் 70 வரை, பதிவாளரினால் மேற்கொள்ளப்படும் சேவையின் திருப்தித்தன்மை மற்றும் உடல், மன உறுதி ஆகியவற்றிற்கு அமைய ஆண்டுதோறும் சேவைக்காலம் நீடிக்கப்படும் அவ்வாறு சேவைக் காலம் நீடிக்கப்படாத எந்தவொரு சந்தர்ப்பத்திலும் குறித்த பதிவாளரின் சேவை முடிவுறுத்தப்படும்.

5. முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பிப்பவர்கள் விவாகமானவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் தாரமிழந்தவர் அல்லது விவாகரத்தானவராக இருத்தல் கூடாது.

6. பிரிவில் மக்களின் மொழித் தேவைக்கிணங்க இரண்டாம் மொழியில் கடமையினை மேற்கொள்ளும் இயலுமையுடன் இரண்டுக்கு மேற்படாத தவணைகளில் சிங்களம்/தமிழ் மொழிக்காக (பதவிக்குரிய மொழிமூலம்) சிறப்பு சித்திகள் உட்பட க. பொ. த. (சா./த.) பரீட்சையில் குறைந்தது சிறப்புச் சித்திகள் இரண்டுடன் (02) ஆறு பாடங்களில் (06) சித்தி பெற்றிருத்தல் வேண்டும் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

**கருத்திற் கொள்ளவும்**.- க. பொ. த. (சா./த.) அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் ஒரு பாடம் இரண்டு பகுதிகளாக சித்தியடைந்திருக்கும் சந்தர்ப்பங்களில், அது ஒரு பாடமாக கருதப்படல் வேண்டும். அந்த பாடப் பகுதிகள் இரண்டும் சித்தியடைந்திருந்தால் மாத்திரமே அந்தப் பாடம் சித்தியடைந்ததாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.மௌலவி சான்றிதழ் அல்லது அராபி டிப்ளோமா சான்றிதழ் பெற்றிருத்தல், மேற்குறிப்பிடப்பட்ட அடிப்படைத் தகைமைகளினைப் பூர்த்தி செய்திருத்தலாக கருதப்படும்.

7. பிரிவில் அனைவருக்கும் அல்லது அநேகமானவர்களுக்கு இலகுவாக நெருங்கக்கூடிய பிரிவின் மத்திய இடமொன்றில் அமைந்த பதவியின் கௌரவத்தினை பாதுகாக்கும் விதத்திலான கட்டிடத்தில் அலுவலகத்தினை அமைப்பதற்கு இயலுமாயிருத்தல் வேண்டும்.

8. விண்ணப்பம் கோரப்படும் முஸ்லிம் விவாகம் பதிவு செய்தல் பிரிவுக்கு உட்புகுத்தப்படும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவு, கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் ஆகிய மேலதிக விபரங்கள் கீழ்க் குறிப்பிடப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட மாவட்டச் செயலகம், பிரதேச செயலகம் அல்லது உரிய காணி மற்றும் மாவட்டச் செயலகம், கிராம அலுவலர் அலுவலகம், சமுர்த்தி அபிவிருத்திச் சங்க அலுவலகம் மற்றும் தபால் அலுவலகம் ஆகிய பிரிவின் பிரசித்தமான இடங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள அறிவித்தல்களில் பார்த்துக்கொள்ள இயலும்.

SINCE 2014 Gazette.lk AMBITIONS REALIZED

9. இதற்குத் தேவையான விண்ணப்பங்கள் மற்றும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவுகள் உள்ளடங்கிய "இணைப்பு I" உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர், (அரசாங்க அதிபர்) அலுவலகத்தில் மற்றும் உரிய காணி மற்றும் மாவட்டப் பதிவகத்தில் அல்லது பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ள இயலும். விண்ணப்பம் பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் இணையத் தளத்திலும் (www.rgd.gov.lk) பெற்றுக்கொள்ள இயலும்.

10. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2026, நவெம்பர் மாதம் 02 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னதாக அட்டவணையில் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

ச. ஜலதீபன்,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2026, செத்தெம்பர் 15.

**அட்டவணை**

| *மாவட்டம்* | *பிரதேச செயலகப் பிரிவு* | *விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும்* | *விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய முகவரி* |
|---|---|---|---|
| மாத்தறை | ஹக்மன | கந்தபட பத்துவ மீஎல்ல பிரதேசத்திற்கான முஸ்லிம் திருமணப் பதிவாளர் பதவி. | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், மாத்தறை |
| மாத்தறை | மாத்தறை | கல்பொக்க பிரிவிற்கான முஸ்லிம் திருமணப் பதிவாளர் பதவி. | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், மாத்தறை |

10 - 380

---

**பதிவாளர் நாயகம் திணைக்களம்**

**தமிழ்மொழி பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/ மேலதிக விவாகம் (பொது) பதிவாளர் பதவி - காலி மாவட்டம்**

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்ட பிரிவில் உள்ள பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/ மேலதிக விவாகம் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர் உரிய பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/மேலதிக விவாகம் பிரிவினுள் நிரந்தர வதிவிடதாரியாகவும் மற்றும் போதியளவான ஆதனத்திற்கு உரித்தான பிரதேசவாசிகளின் மதிப்பினைப் பெறும் ஆளுமையுடையவராக இருத்தல் வேண்டும்.

2. இந்தப் பதவி ஊதியம் வழங்கப்படாத சேவையாவதுடன் இதற்காக ஆண்/ பெண் இருபாலாரும் விண்ணப்பிக்க இயலும்.

3. விண்ணப்பம் கோரப்படும் இறுதித்தினம், விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்கு குறையாதிருத்தல் வேண்டும் என்பதுடன், 55 வருடங்களுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும்.

SINCE 2014 Gazette.lk AMBITIONS REALIZED

4. இளைப்பாற்றும் உச்ச வயதெல்லை 65 ஆண்டுகள் ஆவதுடன் வயது 65 தொடக்கம் 70 வரை, பதிவாளரினால் மேற்கொள்ளப்படும் சேவையின் திருப்தித்தன்மை மற்றும் உடல், மன உறுதி ஆகியவற்றிற்கு அமைய ஆண்டுதோறும் சேவைக்காலம் நீடிக்கப்படும். அவ்வாறு சேவைக் காலம் நீடிக்கப்படாத எந்தவொரு சந்தர்ப்பத்திலும் குறித்த பதிவாளரின் சேவை முடிவுறுத்தப்படும்.

5. விவாகப் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பிப்பவர்கள் விவாகமானவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் தாரமிழந்தவர் அல்லது விவாகரத்தானவராக இருத்தல் கூடாது.

6. பிரிவில் மக்களின் மொழித் தேவைக்கிணங்க இரண்டாம் மொழியில் கடமையினை மேற்கொள்ளும் இயலுமையுடன் இரண்டுக்கு மேற்படாத தவணைகளில் சிங்கள மொழிக்கான சிறப்பு சித்தி உட்பட க. பொ. த. (சா./த.) பரீட்சையில் குறைந்தது சிறப்புச் சித்திகள் இரண்டுடன் (02) ஆறு பாடங்களில் (06) சித்தி பெற்றிருத்தல் வேண்டும் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

**கருத்திற் கொள்ளவும்**.- க. பொ. த. (சா./த.) அல்லது அதற்கு சமமான பரீட்சையில் ஒரு விடயம் இரண்டு பகுதிகளாக சித்தியடைந்திருக்கும் சந்தர்ப்பங்களில், அது ஒரு விடயமாக கருதப்படல் வேண்டும். அந்த விடயப் பகுதிகள் இரண்டும் சித்தியடைந்திருந்தால் மாத்திரமே அவ்விடயம் சித்தியடைந்ததாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

7. பிரிவில் அனைவருக்கும் அல்லது அநேகமானவர்களுக்கு இலகுவாக நெருங்கக்கூடிய பிரிவின் மத்திய இடமொன்றில் அமைந்த பதவியின் கௌரவத்தினை பாதுகாக்கும் விதத்திலான கட்டிடத்தில் அலுவலகத்தினை அமைப்பதற்கு இயலுமாயிருத்தல் வேண்டும்.

8. விண்ணப்பம் கோரப்படும் பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/மேலதிக விவாகம் பதிவு செய்தல் பிரிவிற்கு உட்புகுத்தப்படும் கிராம பட்டியல்கள்/கிராம அலுவலர் பிரிவு, கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் ஆகிய மேலதிக விபரங்கள் கீழ்க் குறிப்பிடப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட மாவட்டச் செயலகம், பிரதேச செயலகம் அல்லது உரிய காணி மற்றும் மாவட்டச் செயலகம், கிராம அலுவலர் அலுவலகம், சமுர்த்தி அபிவிருத்திச் சங்க அலுவலகம் மற்றும் தபால் அலுவலகம் ஆகிய பிரிவின் பிரசித்தமான இடங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள அறிவித்தல்களில் பார்த்துக்கொள்ள இயலும்.

9. இதற்குத் தேவையான விண்ணப்பங்கள் மற்றும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவுகள் உள்ளடங்கிய "இணைப்பு I" உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்தில் மற்றும் உரிய காணி மற்றும் மாவட்டப் பதிவகத்தில் அல்லது பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ள இயலும். விண்ணப்பம் பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் இணையத் தளத்திலும் (www.rgd.gov.lk) பெற்றுக்கொள்ள இயலும்.

10. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2026, நவெம்பர் மாதம் 02 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னதாக அட்டவணையில் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

எஸ். ஜலதீபன்,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2026, செத்தெம்பர் 23.

**அட்டவணை**

| *மாவட்டம்* | *பிரதேச செயலகப் பிரிவு* | *விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும்* | *விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய முகவரி* |
|---|---|---|---|
| காலி | இமதுவ | அங்குளுகஹ பிரிவின் பிறப்பு, இறப்பு மற்றும் தல்பேபத்துவ பிரிவின் (பொது) பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், காலி |
| காலி | நியாகம | வத்தஹேன பிரிவின் பிறப்பு, இறப்பு மற்றும் பெந்தர வலல்லாவிட்ட கோரளை பிரிவின் திருமண (பொது) பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், காலி |

Gazette.lk SINCE 2014 AMBITIONS REALIZED

| *மாவட்டம்* | *பிரதேச செயலகப் பிரிவு* | *விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும்* | *விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய முகவரி* |
|---|---|---|---|
| காலி | நாகொட | நாகொட பிரிவின் பிறப்பு, இறப்பு மற்றும் கங்கபடபத்துவ பிரிவின் திருமண (பொது) பதிவாளர் பதவி கங்கபடபத்துவ | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், காலி |
| காலி | அம்பலாங்கொட | வெல்லபட பத்துவ பிரிவின் (அம்பலாங் கொட) திருமண (பொது) பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், காலி |
| காலி | அம்பலாங்கொட | வெல்லபட பத்துவ அம்பலாங்கொடை மேலதிக திருமண (பொது) பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், காலி |

10-381

---

## கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு

## தொழிற் கல்விப் பிரிவு

## தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களம்

## தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களத்தின் தொழிற்கல்விப் பிரிவின் ஆரம்பமட்டம் - தொழில்நுட்பம் அல்லாத சேவைப் பிரிவு III இல் கள உதவியாளர் (தொழிலாளி) பதவிக்கான திறந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்தல் - 2026

கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சின் கீழ் உள்ள தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களத்தில் ஆரம்பமட்ட - தொழில்நுட்பம் அல்லாத சேவைப் பிரிவின் (மூன்றாம்) III ஆம் தரத்தில் உள்ள கள உதவியாளர் (தொழிலாளி)பதவியில் உள்ள வெற்றிடமாகவுள்ள (99) பணி இடங்களை நிரப்புவதற்காக, இந்த விளம்பரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தகுதிகளைப் பூர்த்தி செய்யும் இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| *பதவி* | *நிரப்பப்பட வேண்டிய வெற்றிடமாகவுள்ள பணி இடங்களின் எண்ணிக்கை* |
|---|---|
| கள உதவியாளர் (தொழிலாளி) | 99 |

01. **சேவைப் பிரிவின் விவரங்கள் :**

1. நிர்வாக மற்றும் நிறுவனப் பணிகளுக்குத் தேவை யான சேவைகளை ஆற்றுதல் மற்றும் வளாகத்தை முறையாகப் பாரமரித்தல், பராமரிக்கப்படும் தொழில் நுட்பக் கல்லூரிகளின் பண்ணைகளில் தொழிலாளர் பணிகளை முறையாக நடத்துவதற்குத் தேவையான சேவைகளை வழங்குதல் தொழில்நுட்பக் கல்லூரிகளின் தோட்ட வளாகங்களில் தூய்மை மற்றும் பராமரிப்பு பணிகளை ஆற்றுதல், மற்றும் பண்ணை நடவடிக்கைகள் தொடர்பான தொழிலாளர் களப் பணிகளைச் செய்தல்.
2. பதவி தொடர்பாக நிறுவனத் தலைவரால் ஒதுக்கப் படும் வேறு கடமைகள்.

02. **ஆட்சேர்ப்பு மேற்கொள்ளும் முறை :**

அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள அடிப்படைத் தகுதி களைப் பூர்த்தி செய்த விண்ணப்பதாரர்களில் இருந்து தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களத்தில் பணிப்பாளர் நாயகத்தினால் நியமிக்கப்பட்ட திறன் மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சை சபையால் நடாத்தப்படும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையின் முடிவுகளின் அடிப்படையில் அதிக மதிப்பெண்களைப் பெறும் விண்ணப்பதாரர்கள் வெற்றிடமாகவுள்ள பணி இடங் களுக்குத் தெரிவு செய்யப்படுவார்கள்.

| *தொழில்நுட்பவியல்/ தொழில்நுட்பக் கல்லூரிகளின் பெயர்* | *ஆட்சேர்ப்புச் செய்ய வேண்டிய நபர்களின் எண்ணிக்கை* |
|---|---|
| அநுராதபுரம் தொழில்நுட்பவியல் கல்லூரி | 4 |
| பதுளை தொழில்நுட்பவியல் கல்லூரி | 4 |

Gazette.lk SINCE 2014 AMBITIONS REALIZED

| *தொழில்நுட்பவியல்/ தொழில்நுட்பக் கல்லூரிகளின் பெயர்* | *ஆட்சேர்ப்புச் செய்ய வேண்டிய நபர்களின் எண்ணிக்கை* |
|---|---|
| யாழ்ப்பாணம் தொழில்நுட்பவியல் கல்லூரி | 2 |
| கண்டி தொழில்நுட்பவியல் கல்லூரி | 4 |
| குருநாகல் தொழில்நுட்பவியல் கல்லூரி | 8 |
| மருதானை தொழில்நுட்பவியல் கல்லூரி | 4 |
| இரத்தினபுரி தொழில்நுட்பவியல் கல்லூரி | 4 |
| ஆணமடுவ தொழில்நுட்பவியல் கல்லூரி | 4 |
| பண்டாரவளை தொழில்நுட்பக் கல்லூரி | 5 |
| தம்புள்ளை தொழில்நுட்பக் கல்லூரி | 8 |
| தெஹியத்தகண்டி தொழில்நுட்பக் கல்லூரி | 8 |
| கம்பஹா தொழில்நுட்பக் கல்லூரி | 5 |
| ஹசலக தொழில்நுட்பக் கல்லூரி | 5 |
| ஹோமாகம தொழில்நுட்பக் கல்லூரி | 2 |
| கேகாலை தொழில்நுட்பக் கல்லூரி | 4 |
| மன்னார் தொழில்நுட்பக் கல்லூரி | 2 |
| மாத்தளை தொழில்நுட்பக் கல்லூரி | 2 |
| மொனராகல தொழிநுட்பக் கல்லூரி | 5 |
| நுவரெலியா தொழில்நுட்பக் கல்லூரி | 3 |
| இரத்மலானை தொழில்நுட்பக் கல்லூரி | 2 |
| திருகோணமலை தொழில்நுட்பக் கல்லூரி | 2 |
| வவுனியா தொழில்நுட்பக் கல்லூரி | 5 |
| வறக்காப்பொல தொழில்நுட்பக் கல்லூரி | 3 |
| வாரியபொல தொழில்நுட்பக் கல்லூரி | 2 |
| வீரவில தொழில்நுட்பக் கல்லூரி | 2 |
| மொத்த தொகை | 99 |

03. **தேவையான தகைமைகள் :**

3.1 **கல்வித் தகைமைகள்** :

க.பொ.த. (சா.த.) பரீட்சையில் இரண்டு அமர்வுக்கு மேற்படாமல் ஆறு (06) பாடங்களில் இரண்டு பாடத்தில் திறமைச் சித்தி பெற்றிருக்க வேண்டும்.

3.2 **தொழில் முறைத் தகைமைகள் :**

பதவியின் கடமைகளுக்கு பொருத்தமான தொழில் முறைத் தகைமைகள் விசேட தகுதியாக கருதப்படும்.

3.3 **அனுபவம்:**

பதவியின் கடமைகளுக்கு பொருத்தமான அனுபவம் விசேட தகுதியாகக் கருதப்படும்.

3.4 **உடல் தகுதி :**

ஒவ்வொரு விண்ணப்பதாரரும் இலங்கையின் எந்தப் பகுதியிலும் பணியாற்றுவதற்கும் பதவியின் கடமைகளை ஆற்றுவதற்கும் உடல் ரீதியாகவும் மன ரீதியாகவும் தகுதியுடன் இருக்க வேண்டும்.

3.5 **வேறு தகைமைகள் :**

* இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.
* விண்ணப்பதாரர்கள் விசேட நன்நடத்தை உடைய வர்களாக இருத்தல் வேண்டும்.
* விண்ணப்பங்கள் சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதிக்குள் இப்பதவிக்கான ஆட்சேர்ப்புக்குத் தேவையான மேற்குறிப்பிடப்பட்ட அனைத்து தகுதிகளையும் பூர்த்தி செய்திருக்க வேண்டும்.

04. **வேலைவாய்ப்பு விதிமுறைகள் மற்றும் சேவை நிபந் தனைகள்:**

I. இந்தப் பதவி நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித் துடையதுமாகும் தங்களுக்கு உரிமையுள்ள ஓய்வூதியத் திட்டம் தொடர்பாக எதிர்காலத்தில் அரசாங்கம் எடுக்கும் கொள்கை முடிவுகளுக்கு

Gazette.lk SINCE 2014 AMBITIONS REALIZED

தாங்கள் உட்பட்டிருப்பீர்கள். தாங்கள் விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்குப் பங்களிக்க வேண்டியிருக்கும் அரசாங்கத்தால் அவ்வப்போது பரிந்துரைக்கப்படும் பங்களிப்புகளை தாங்கள் செலுத்த வேண்டியிருக்கும்.

II. இந்த நியமனம் 03 வருட தகுதிகாண் காலத்திற்கு உட்பட்டது. பதவி ஆட்சேப்புச் செய்யப்பட்ட 03 வருடங்களுக்குள், ஆட்சேர்ப்பு நடைமுறையில் குறிப்பிடப்பட்டுள்ள படி முதலாவது வினைத்திறமைகாண் தடைதாண்டல் பரீட்சையில் தேர்ச்சிபெற வேண்டும்.

III. 2020.10.16 ஆந் திகதியிடப்பட்ட அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 18/2020 இவ்விதிமுறைகளின் படி பரிந்துரைக்கப்பட்ட மற்றும் அலுவல் மொழிகளில் புலமை பெற்றிருக்க வேண்டும்.

IV. தாங்கள் பொதுச் சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகளுக்கும், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவை, அரசாங்க நிதி விதிமுறைகள் ஏனைய வேறு அரசாங்க விதி முறைகள், சுற்றறிக்கைகள் மற்றும் அறிவுறுத்தல்கள் மற்றும் அத்துடன் அல்வப்போது வெளியிடப்படும் அவற்றின் திருத்தங்கள் ஆகியவற்றிற்கு உட்பட்டிருப்பீர்கள்.

V. விண்ணப்பித்த மொழிமூலத்தினை மாற்ற அனுமதிக் கப்படமாட்டாது மேலும் தங்கள் விண்ணப்பத்தில் தாங்கள் குறிப்பிடும் மொழிமூலமாகவே நியமனம் பெற தாங்கள் தகுதி பெறுவீர்கள்.

VI. தீவிஸ் எப்பகுதியிலாவது தங்களுக்கு பணிபுரிய நியமிக்கப்படும் எந்தப் பகுதியிலும் இந்தப் பதவியின் கடமைகளை ஆற்றுவதற்குக் கட்டுப்பட்டுள்ளீர்கள்.

05. **உச்ச வயது எல்லை:**

விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதியில் 18 வயதுக்கு குறையாமலும், 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

06. **சம்பள அளவீடு:**

2025.03.25 ஆந் திகதியிடப்பட்ட பொது நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 10/2025 இன் அட்டவணை II இன் படி, இந்தப் பதவிக்கு (PL1-2025) ரூபா 40,000 - 450 × 10 - 490 x 10 - 540 x 10 - 12 x 590 - ரூ. 61,880.00 ஆகும்.

07. கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கு பின்வரும் மதிப்பென் முறை பயன்படுத்தப்படும்.

| *மதிப்பெண்கள் வழங்கப்படும் முக்கிய தலைப்புக்கள்* | *அதிகபட்ச மதிப்பெண்கள்* |
|---|---|
| மேலதிக கல்வித் தகைமைகள் | 20 |
| தொழில் முறைத் தகைமைகள் | 20 |
| பதவிக்கு தொடர்புடைய அனுபவம் | 40 |
| இணை பாடவிதானச் செயற்பாடுகள் | 15 |
| நேர்முகப் பரீட்சையில் வெளிப்படுத்தப்படும் திறன்கள் | 05 |
| மொத்தம் | 100 |

08. **விண்ணப்பதாரர்களின் ஆளடையாளம்** :

* அனைத்து வகையிலும் முழுமையான விண்ணப் பங்களை சமர்ப்பித்த விண்ணப்பதாரர்கள் மட்டுமே நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள்.

* நேர்முகப் பரீட்சையின் போது விண்ணப்பதாரர்கள் சான்றிதழ்களின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதி களுடன் மூலச் சான்றிதழ்களையும் சமர்ப்பித்தல் வேண்டும்.

* முறையான நேர்முகப் பரீட்சையின் போது ஆளடையாளத்தைச் சரிபார்ப்பதற்காக / உறுதிப்படுத் துவதற்காக பின்வரும் அடையாள ஆவணங்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.

  I. ஆட்பதிவுத் திணைக்கள ஆணையாளர் நாயகத் தினால் வழங்கப்பட்ட தேசிய ஆளடையாள அட்டை;
  II. செல்லுபடியாகும் கடவுச் சீட்டு.

09. **விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கும் முறை :**

I. இந்த அறிவிப்பின் இறுதியில் ஒரு மாதிரி விண் ணப்பப்படிவம் வழங்கப்பட்டுள்ளது. விண்ணப்ப தாரர்கள், A4 அளவுத் தாளில் தயாரிக்கப்பட்ட தங்கள் விண்ணப்பங்களை பதிவுத் தபால் மூலம் "பணிப்பாளர் நாயகம் தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களம், த. பெ. இலக்கம். 557, ஒல்கொட் மாவத்தை கொழும்பு -10" என்ற முகவரிக்கு 2026.10.30 ஆம் திகதிக்குள் சமர்ப்பிக்க வேண்டும். அந்த திகதிக்குப் பின்னர் பெறப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

II. விண்ணப்பம் அடங்கிய உறையின் இடது பக்க மேல் மூலையில் "கள உதவியாளர் (தொழிலாளர்) பதவிக்கான ஆட்சேர்ப்பு - 2026" எனத் தெளிவாக குறிப்பிடப்பட வேண்டும்.

III. தற்போது அரசாங்க சேவையிலோ அல்லது மாகாண அரசாங்க சேவையிலோ கடமையாற்றும் அதிகாரிகள், தாங்கள் பணிபுரியும் திணைக்களத்தின் திணைக்களத் தலைவர் மூலமாகத் தங்கள் விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

Gazette.lk SINCE 2014 AMBITIONS REALIZED

IV. இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு இணங்காத விண்ணப்பங்கள், முழுமையற்ற தகவல்களைக் கொண்ட விண்ணப்பங்கள், மற்றும் இறுதித் திகதிக்குப் பின்னர் பெறப்படும் விண்ணப்பங்கள் ஆகியவை எவ்வித முன்னறிவிப்பும் இன்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பங்கள் தொலைந்து போவது அல்லது தாமதமாவது தொடர்பான எந்தப் புகாரும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

V. விண்ணப்பப்படிவத்தில் உள்ள விண்ணப்பதாரரின் கையொப்பமானது, பின்வருபவர்களில் ஒருவரால் சான்றளிக்கப்பட வேண்டும். அரசாங்க பாடசாலை அதிபர்/ சமாதான நீதவான் (ஆணையாளர்/ வழக்கறிஞர், ஆயுதப்படைகளின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அல்லது ரூ. 47,615.00 அதற்கு மேற்பட்ட அரசாங்க / மாகாண பொதுச் சேவையில் நிரந்தர பதவியில் உள்ள அதிகாரியால் சான்றளிக்கப்பட வேண்டும்.

10. **தவறான தகவல்களை வழங்குதல் :**

சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பபடிவத்தில் உள்ள ஏதேனும் தகவல் பணி நியமனத்திற்கு முன்பாகவே தவறானது அல்லது சரியற்றது எனத் தெரியவந்தால், தங்கள் விண்ணப்பம் இரத்து செய்யப்படும். பணி நியமனத்திற்கு பின்னர் அத்தகைய தவறான அல்லது பிழையான விடயங்கள் கண்டறியப்பட்டால், உரிய நடைமுறைகளின் படி தங்களை பணியிலிருந்து நீக்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்.

11. தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம், வெற்றிடமுள்ள இடங்களை நிரப்புவது அல்லது விடுவது தொடர்பான தீர்மானிக்கும் அதிகாரத்தைக் கொண்டுள்ளார்.

12. இந்த வர்த்தமானி அறிவித்தலில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிக் கருத்துக்களில் ஏதேனும் முரண்பாடுகள் தோன்றின் அவ்வேளை சிங்கள் மொழி வாசகம் மேலோங்கி நிற்கும்.

டி. வத்சலா மரம்பகே,
பணிப்பாளர் நாயகம்.

தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களம்,
த. பெ. இலக்கம். 557,
ஒல்கொட் மாவத்தை,
கொழும்பு - 10.

மாதிரி விண்ணப்பப்படிவம்

☐

அலுவலக பயன்பாட்டிற்கு மட்டும்

தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களத்தின் தொழிற்கல்விப் பிரிவின் ஆரம்ப தொழில்நுட்பம் அல்லாத சேவைப் பிரிவு III இல் கள உதவியாளர் (தொழிலாளி) பதவிக்கான திறந்தநிலை அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்தல் - 2026

விண்ணப்பிக்கப்பட்ட பயிற்றும் மொழி

சிங்களம் - 1
தமிழ் - 2 ☐

**குறிப்பு :** விண்ணப்பிக்கப்பட்ட மொழி ஊடகத்தை பின்னர் மாற்ற இயலாது.

---

1. 1.1 முழுப் பெயர்(திரு./திருமதி/ செல்வி) : ..............................................................................................

(சிங்களம்/தமிழ்)

1.2 முழுப் பெயர்: ..............................................................................................

(ஆங்கில பெரிய எழுத்துக்களில்) ..............................................................................................

1.3 முதலெழுத்துக்களுடன் பெயர் (திரு./திருமதி/செல்வி) : ..............................................................................................

(சிங்களம் /தமிழில்) உதாரணம்:ஏ.எஸ்.டி.கே.எஸ்.பெரேரா

1.4 முதல் எழுத்துக்களுடன் பெயர் : ..........................................................................................................................

(ஆங்கில பெரிய எழுத்துக்களில்)

2, 2.1 தனிப்பட்ட முகவரி : ..........................................................................................................................................

(சிங்களம் /தமிழில்)

3. 3.1 நிரந்தர வசிப்பிட மாவட்டம் : ..............................................................................................................................

3.2 பிரதேச செயலகப் பிரிவு : .....................................................................................................................................

3.3 கிராம அலுவலர் பிரிவு : .........................................................................................................................

04. பிறந்த திகதி :வருடம் : ................... மாதம் : ................... திகதி : ...................

05. விண்ணப்பம் முடிவுத் திகதியன்று வயது : வருடங்கள் : .......................... மாதங்கள் :...................... நாட்கள் :.................

06. தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் : ...................................................................................................................

07. தொலைபேசி இலக்கம் : ........................................................................................................................................

08. பால் : ஆண்/ பெண் : ☐ ஆண் ☐ பெண் (பொருத்தமான கட்டத்தில் குறிப்பிடவும்.)

09. சமூக அந்தஸ்து : ..........................................................................................................................................

10. கல்வித் தகைமைகள்:

10.1 கல்விச் சான்றிதழ் க.பொ.த.(சா.த.) பரீட்சை

முதல் முறை

1. வருடம் : .......................................... பரீட்சையின் சுட்டிலக்கம் : ..........................................

| | *விடயம்* | *தரம்* |
|---|---|---|
| | | |

கல்விச் சான்றிதழ் க.பொ.த.(சா.த.) பரீட்சை

இரண்டாம் முறை

1. வருடம் : .......................................... பரீட்சையின் சுட்டிலக்கம் : ..........................................

| | *விடயம்* | *தரம்* |
|---|---|---|
| | | |

Gazette.lk SINCE 2014 AMBITIONS REALIZED

10.2 கல்விச் சான்றிதழ் க.பொ.த.(உ.த.) (இருந்தால் மட்டும்)

1. வருடம் : .......................................... பரீட்சையின் சுட்டிலக்கம் : ..........................................

| | *விடயம்* | *தரம்* |
|---|---|---|
| | | |

10.3 மேலதிக கல்வித் தகைமைகள் :

| | *பாடநெறி/ சான்றிதழ்* | *நிறுவனம்* | *பாடநெறியின் கால அளவு* |
|---|---|---|---|
| | | | |

10.4 தகுதிகள் :

| | *பாடநெறி/ சான்றிதழ்* | *நிறுவனம்* | *பாடநெறியின் கால அளவு* |
|---|---|---|---|
| | | | |

10.5 சேவையின் அனுபவம் :

| | *நிறுவனம்* | *பதவி* | *கால அளவு* |
|---|---|---|---|
| | | | |

10.6 இணைப்பாடவிதானச் செயற்பாடுகளின் விபரம் :

................................................................................................................................................................

................................................................................................................................................................

11. நீங்கள் எப்போதாவது அரசாங்க பதவியை வகித்ததிலிருந்து பணிநீக்கம் செய்யப்பட்டிருக்கிறீர்களா?

ஆம் ☐ இல்லை ☐

11.1 ஆம் எனில் தயவு செய்து விவரங்களை வழங்கவும் :..............................................................

12. நீங்கள் ஏற்கனவே அரசாங்க பணியில் இருந்தால் உங்கள் மீது ஏதேனும் திணைக்களத்திலான ஒழுங்கு நடவடிக்கை விசாரணைகள் நிலுவையில் உள்ளனவா?

ஆம் ☐ இல்லை ☐

12.1 ஆம் எனில் தயவு செய்து விவரங்களை வழங்கவும் :..............................................................

Gazette.lk SINCE 2014 AMBITIONS REALIZED

13. நீதி மன்றத்தால் ஏதேனும் குற்றச்சாட்டின் பேரில் நீங்கள் எப்போதாவது குற்றவாளிக தீர்ப்பளிக்கப்பட்டுள்ளீர்களா?

ஆம் : ☐ இல்லை : ☐

13.1 ஆம் எனில் தயவு செய்து விவரங்களை வழங்கவும் :.............................................................

14. விண்ணப்பதாரரின் உறுதிமொழி :

இந்த விண்ணப்பப்படிவத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் யாவும் சரியானவையும் உண்மையானவையும் என்றும் இதில் உள்ள அனைத்துப் பகுதிகளும் முறையாகப் பூர்த்தி செய்யபட்டுள்ளன என்றும் உறுதிப்படுத்துகின்றேன். வழங்கப்பட்டுள்ள தகவல் ஏதும் போலியானவை அல்லது பிழையானவை எனத் தெரியவந்தால் நியமனத்திற்கு முன்னர் தகுதி நீக்கப்படுவதற்கோ நியமனத்தின் பின்னர் எவ்வித இழப்பீடும் இன்றி பணிநீக்கம் செய்யப்படவோ முடியும் என்பதையும் நான் அறிவேன் என்றும், மேலும் அனைத்து விதிமுறைகள் மற்றும் கட்டுப்பாடுகளுக்கு நான் கட்டுப்பட்டு நடப்பேன் என்றும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

.........................................,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி:...........................

15. விண்ணப்பதாரரின் கையொப்பத்தினை உறுதிப்படுத்துதல் :

இந்த விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் திரு./ திருமதி/ செல்வி ............................................................... என்பவரை நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் என்றும் அவருடைய கையொப்பம் .......................... அன்று என் முன்னிலையில் அவர் தனது கையொப்பத்தை இட்டார் என்றும் உறுதிப்படுத்துகின்றேன்.

.........................................,
கையொப்பத்தை உறுதிப்படுத்தும் அதிகாரியின்
கையொப்பம்.

முழுப் பெயர் :....................................................

பதிவி :.............................................................

திகதி :.............................................................

(அலுவலக பதவி முத்திரையை இணைக்கவும்)

16. திணைக்களத் தலைவர்/ நிறுவனத் தலைவரின் சான்றிதழ் (அரசாங்க பணி அதிகாரிகளுக்கு மட்டும்)

தற்போது இவ் அமைச்சு/ திணைக்களம்/ நிறுவனத்தில் பணியாற்றிவரும் திரு./ திருமதி/ செல்வி .................................... .......................... அவர்கள் இந்த நிறுவனத்தில பணியாற்றி வருவதையும் அவரது பணி மற்றும் நடத்தை திருப்திகரமாக இருப்பதையும், அவர் மீது எவ்வித ஒழுங்கு நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை என்பதையும் இது தொடர்பாக எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளத் திட்டமிடப்படவில்லை என்பதையும் இத்தால் உறுதிப்படுத்துகிறேன். இப்பணிக்கு அவர் தேர்ந்தெடுக்கப்பட்டால் அவரைப் பணியிலிருந்து விடுவிக்க முடியும்/ விடுவிக்க முடியாது.

.........................................,
திணைக்களத் தலைவர்/ நிறுவனத் தலைவர்/
அங்கீகாரம் அளிக்கப்பட்ட அதிகாரியின் கையொப்பம்.

முழுப் பெயர் :....................................................

பதிவி :.............................................................

திகதி :.............................................................

(அலுவலக பதவி முத்திரையை இணைக்கவும்)

10-342

SINCE 2014 Gazette.lk AMBITIONS REALIZED

**இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துரைகளைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் உறுப்பினர் பதவிக்கான விதப்புரை**

2023 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, திருத்தப்பட்டவாறான ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் 8 (1) ஆம் பிரிவு மற்றும் அதற்கான காப்பு வாசகம் ஆகியவற்றின் நியதிகளுக்கமைய, இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துரைகளைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் உறுப்பினர் பதவியில் 2027.01.01 அன்று முதல் ஏற்படவுள்ள ஒரு வெற்றிடத்திற்கான நியமனத்திற்குத் தனது விதப்புரையை மேற்கொள்வதற்காகப் பேரவையின் பரிசீலனைக்கு, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 41 (ஆ) உறுப்புரை மற்றும் ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் பொருத்தமான தனிநபர்களிடமிருந்து அரசியலமைப்புப் பேரவை விண்ணப்பங்களைக் கோருகிறது.

விண்ணப்பதாரிகள் பின்வரும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட துறைகளில் நிபுணத்துவம் கொண்டவர்களும், மேன்மையடைந்தவர்களும் மற்றும் ஆகக் குறைந்தது இருபதாண்டுகளைக் (20) கொண்ட அனுபவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும் :-

i. சட்டம்
ii. குற்றப்புலனாய்வு மற்றும் சட்டவலுவுறுத்தல் ;
iii. சட்ட - மருத்துவக் கணக்காய்வு;
iv. சட்ட - மருத்துவக் கணக்கியல்;
v. பொறியியல்:
vi. சர்வதேசத் தொடர்புகளும் இராஜதந்திரச் சேவைகளும்;
vii. பகிரங்க அலுவல்களின் முகாமை; அல்லது
viii. பொது நிருவாகம்

ஏற்புடைய தகைமைகள் மற்றும் தகைமையீனங்கள் தொடர்பான, திருத்தப்பட்டவாறான 2023 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் ஏற்பாடுகள் குறித்து விண்ணப்பதாரிகளால் உரிய கவனம் செலுத்தப்படல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் இணையத்தளத்தில் (www.parliament.lk) "துரித அணுகல்" என்பதன் கீழ் உள்ள "இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துரைகளைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு உறுப்பினர் பதவிக்கான விதப்புரை" எனும் இணைப்பின் மூலம் பெற்றுக்கொள்ளக்கூடிய மாதிரிப் படிவத்திற்கு அமைவாக விண்ணப்பங்கள் தயாரிக்கப்படல் வேண்டும், அத்துடன் உரியவாறு பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

அரசியலமைப்புப் பேரவையின் பதில் செயலாளர் நாயகம்,
அரசியலமைப்புப் பேரவை - அலுவலகம்,
இலங்கைப் பாராளுமன்றம்,
ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டே.

2026, ஒற்றோபர் 16 ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ பதிவுத் தபாலிலோ அல்லது constitutionalcouncil@parliament.lk எனும் மின்னஞ்சல் முகவரிக்கோ அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

கடிதவுறையின் இடதுபக்க மேல் மூலையில் அல்லது மின்னஞ்சலின் விடயத் தலைப்பில் ''இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துரைகளைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு உறுப்பினர் பதவிக்கான விதப்புரை'' எனக் குறிப்பிடப்படல் வேண்டும்.

அரசியலமைப்புப் பேரவையின் கட்டளைப்படி பிரசுரிக்கப்படுகிறது.

அரசியலமைப்புப் பேரவையின் பதில் செயலாளர் நாயகம்,
அரசியலமைப்புப் பேரவை - அலுவலகம்,
இலங்கை பாராளுமன்றம்,
ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே,
2026, ஒற்றோபர் 01.

10 - 403

---

**அபாயகர அவுடதங்கள் தேசிய கட்டுப்பாட்டு சபை வெற்றிடம்**

அபாயகர அவுடதங்கள் கட்டுப்பாட்டு தேசிய சபையின் கீழ் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்காக இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| பதவி | வெற்றிட எண்ணிக்கை |
|---|---|
| பணிப்பாளர் (நிதி) (HM I-1) | 01 |

01. **பதவிப் பெயர் பணிப்பாளர் (நிதி) :**

சேவைப் பிரிவு "சிரேஷ்ட முகாமையாளர்" HM I-1

**வெற்றிட எண்ணிக்கை - 01**

Gazette.lk SINCE 2014 AMBITIONS REALIZED

1.1 **தகைமைகள் :**

1.1.1 **வெளிவிண்ணப்பதாரர்கள் (கீழ் குறிப்பிடப் பட்ட 01 அல்லது 02)**

01. பல்கலைக்கழக மானிங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிதி / கணக்கீட்டு வர்த்தகவியல் ஆகிய பாடத்துறைகளில் பட்டத்தினைப் பெற் றிருத்தல்.

அல்லது

இலங்கை பட்டய கணக்காளர் நிறுவகத்தில் அங்கத் துவத்தினைப் பெற்றிருத்தல் அல்லது ஐக்கிய இராச்சியத்தில் பட்டய முகாமைத்துவ கணக்காளர் நிறுவகத்தில் (CIMA) அங்கத்துவத்தினைப் பெற் றிருத்தல் அல்லது பட்டய கணக்காளர் நிறுவகத்தில் (ACCA) அங்கத்துவத்தினைப் பெற்றிருத்தல்.

உடன்

பல்கலைக்கழக மானிங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பதவியிற்கு உரியதான விடயத் துறைக்கு பொருத்தமான பட்டப்பின் படிப்பு பட்டத்தினைப் பெற்றிருத்தல்.

மற்றும்

மேற்கூறப்பட்ட முதலாவது பட்டத்தின் தகை மையினை பெற்றுக் கொண்டதன் பின்னர் அரசாங்கத்தின், அரச கூட்டுத்தாபனம் / நிலை யியற்சபை நிறுவனம் சபை திணைக்களம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனத்தில் முகா மைத்துவ மட்டத்தில் குறைந்தபட்சம் உரிய துறையில் 13 வருடகால அனுபவத்தினைப் பெற்றிருத்தல்.

02. இலங்கை பட்டய கணக்காய்வாளர் நிறுவனத்தில் முழு நேர அங்கத்துவம்.

மற்றும்

அரசாங்கத்தின் அரச கூட்டுத்தாபனத்தில் / நிலை யியற் சபை நிறுவனம்/ சபை/ திணைக்களத்தில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனத்தில் முகாமைத்துவ மட்டத்திலான பதவியில் குறைந்தபட்சம் உரிய துறையில் 13 வருடகால அனுபவத்தினைப் பெற்றிருத்தல்.

1.1.2 **உள்ளக விண்ணப்பதாரர்கள்**

மேற்கூறப்பட்ட வெளி விண்ணப்பதாரர்களுக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல்.

அல்லது

அபாயகர ஔடதங்கள் தேசிய கட்டுப்பாட்டு சபையின் நடுத்தர முகாமைத்துவ சேவை (MM) பிரிவில் 1 ஆம் தரத்தில் குறைந்தபட்சம் 3 வருடங்களுக்கு உரியதாக விடய துறையில் திருப்பதிகரமான சேவைக் காலத்தினைப் பூர்த்தி செய்திருத்தல்.

1.2 **வயது :**

35 வயதினை விட குறையாது மற்றும் 55 வயதினைவிட மேற்படாதிருக்க வேண்டும். உள்ளக விண்ணப்பதாரர்களுக்காக உயர்ந்தபட்ச வயதெல்லை உரியதல்ல.

1.3 **சம்பள குறியீட்டு இலக்கம் -** HM 1-1

1.4 **மாதாந்த சம்பள அளவு** - HM 1-1 மு. சு. 01/2025 (ரூபா 140,640- 15 x 4,100- ரூ. 202,140.00)

(சம்பளத்திற்கு மேலதிகமாக அரசாங்கத்தின் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகள் மற்றும் வரப்பிரசாதங்கள் உரித்தாகின்றது)

**குறிப்பு :** இதற்கு மேலதிகமாக உத்தியோகபூர்வ வாகன உரிமை கிடைப்பதுடன் அரச வர்த்தக சுற்றறிக்கை 1/2015 (i) மற்றும் (ii) இற்கமைய எரிபொருள் கொடுப்பனவு மற்றும் அதற்கு மேலதிகமாக தொடர்புசாதனக் கொடுப்பனவு PED 2/2022 சுற்றறிக்கைக்கு அமைய மற்றும் தொழில்சார் கொடுப்பனவு மு. சுற்றறிக்கை 01/2025 இற்கமைய தொடர்புபட்டதாகும்.

**மேற்கூறப்பட்ட பதவியிற்கான பொதுவான தகைமைகள் :**

அனைத்து விண்ணப்பதாரர்களும் இலங்கைப் பிரசையாக இருக்க வேண்டியதுடன், பதவிக்கு உரியதாக பொறுப்பளிக்கப்படும் பணிகளை சிறந்த முறையில் மேற்கொள்வதனைப் போன்று நாட்டின் எந்தப் பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்கு பொருத்தமான உடல் மற்றும் உள பொருத்தம் கொண்ட சிறந்த பிரசையாக இருக்க வேண்டும்.

விண்ணப்பப்படிவம் ஏற்றுக் கொள்ளும் இறுதித் தினமன்று அனைத்து முறைகளிலும் தகைமைகளைப் பூர்த்தி செய்திருக்க வேண்டும்.

**விண்ணப்பப்படிவத்தினை சமர்ப்பிக்கும் மொழி:**

அனைத்து விண்ணப்பதாரர்களும் விண்ணப்பப் படிவத்தினை ஆங்கில மொழியில் மாத்திரம் சமர்பிக்கப்பட வேண்டும்.

**ஆட்சேர்ப்பு மேற்கொள்ளும் முறைகள் :**

நியமனப் பொறுப்பாளரினால் தீர்மானிக்கப்படக் கூடியவாறு எழுத்து மூல பரீட்சை மற்றும் /அல்லது கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை யின் பெறுபேறுகளுக்கு அமைய சேர்த்துக் கொள்ளப் படும்.

Gazette.lk SINCE 2014 AMBITIONS REALIZED

**நியமனத்தின் தன்மை :**

நிரந்தரமானது ஊழிய சேமலாப நிதியத்திற்கு மற்றும் ஊழியர் பொறுப்பு நிதியத்திற்கு உரிமை கொண்டதாகும்.

**விண்ணப்பக் கட்டணம் :**

வெளி விண்ணப்பதாரர்கள் மாத்திரம் விண்ணப்பக் கட்டணமாக ரூபா 500 பணத்தினை எந்தவொரு இலங்கை வங்கிக் கணக்கிலும் "அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டு தேசிய சபை" என்ற பெயரில் இலங்கை வங்கியின் 1643 இன் இலக்கத்தில் உள்ள கணக்கில் வைப்பிலிட்டு நிதியினை வைப்பிலிட்டமைக்கான பத்திரத்தின் பிரதியினை வைத்துக் கொண்டு முதல் பிரதியினை (Deposit slip) விண்ணப்பப்படிவத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும். விண்ணப்பக் கட்டணம் மீள செலுத்தப்பட மாட்டாது.

தங்களது தகவல்களை "A4" அளவின் பக்கத்தில் இரு பக்கங்களையும் பயன்படுத்தி சபையின் இணையத்தளத்தில் (www. nddcb.gov.lk) பிரசுரிக்கப்பட்டுள்ள விண்ணப்பப்படிவத்தினை பூர்த்தி செய்து (கடித உரையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியினை தெளிவாக குறிப்பிடவும்) உரிய சான்றிதழ்களின் பிரதியுடன் 2026.10.23 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் பதிவுப் தபாலில் தலைவர், அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டு தேசிய சபை இலக்கம் 383, கோட்டே வீதி, ராஜகிரிய என்ற முகவரியிற்கு கிடைக்கச் செய்யவும். அரசாங்கத்தின் கூட்டுத்தாபன அல்லது நிலையியற் சபைகளில் சேவையாற்றும் ஊழியர்கள் தமது விண்ணப்படிவத்தினை நிறுவன/ திணைக்களப் பொறுப்பாளர் ஊடாக அனுப்பவும்.

விண்ணபடிவத்தினை பொறுப்பேற்கும் இறுதித் தினமன்று உரிய தகைமைகளை பூர்த்தி செய்யாதுள்ள / முறையாக பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பப்படிவங்கள் / பண வைப்பு பத்திரத்தின் முதல் பிரதியினை இணைக்காத விண்ணப்பப்படிவங்கள்/ மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஒவ்வாதன, விண்ணப்பப்படிவங்கள் மற்றும் விண்ணப்பப்படிவத்தினை ஏற்றுக் கொள்ளும் இறுதித் தினத்திற்கு பின்னர் கிடைக்கும் விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும்.

ஆட்சேர்ப்பு தொடர்பில் சபையினால் எடுக்கப்படும் தீர்மானம் இறுதித் தீர்மானமாகும்.

தலைவர்.

அபாயகர ஔடதங்கள் தேசிய கட்டுப்பாட்டுச் சபை,
383, கோட்டே வீதி,
ராஜகிரிய,
2026.10.02.

10 - 410

---

## தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம்

(கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு)

**பதவி : நிருவாக உத்தியோகத்தர் 01**

1. **வயதெல்லை** : விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி திகதியன்று 22 வயதுக்குக் குறையாத 45 வயதுக்கு மேற்பட்டிருத்தல் வேண்டும். (உள்வாரி விண்ணப்பதாரிகளுக்கு உயர்ந்தபட்ச வயதெல்லை உட்படாது).

2. **கல்வித் தகைமை** : **வெளிவாரி விண்ணப்பதாரிகள்**

   1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட மனிதவள முகாமைத்துவம் / வணிகம் / அரச நிருவாகம்/ அரச முகாமைத்துவம்/ முகாமைத்துவப் பட்டம் பெற்றிருத்தல்.

   **உள்வாரி விண்ணப்பதாரிகள் (கீழே 1 அல்லது 2)**

   1. மேற்படி வெளிவாரி விண்ணப்பதாரர்களுக்கான தகைமைகளைப் பெற்றிருத்தல்.
   2. முகாமைத்துவ உதவியாளர்- தொழில்நுட்பம் அல்லாத (MA 1) சேவைப்பிரிவில் II ஆம் தரத்திற்கு உட்பட்ட பதவி ஒன்றில் குறைந்தபட்சம் ஐந்து (05) வருடங்கள் திருப்திகரமான சேவையை நிறைவு செய்திருத்தல்.

Gazette.lk SINCE 2014 AMBITIONS REALIZED

3. நேர்முகப் பரீட்சைக்கான புள்ளிகள் வழங்கல் :

| | |
|---|---|
| உரிய மேலதிக அனுபவங்கள் | 30 புள்ளிகள் |
| உரிய மேலதிக தகைமைகள் | 30 புள்ளிகள் |
| ஏனைய திறன்கள் மற்றும் செயல் முன்னேற்றங்கள் | 15 புள்ளிகள் |
| நேர்முகப் பரீட்சையில் வெளிப்படுத்தும் திறன்கள் | 25 புள்ளிகள் |
| **மொத்தம்** | **100 புள்ளிகள்** |

4. சம்பள அளவுத்திட்டம் : JM 1-1 - 2025 – ரூபா 72,650.00 - 10 x1360 – 18x2040 – ரூபா 122,970.00
2027.01.01 ஆந் திகதியிலிருந்து இச்சம்பளம் உரித்துடையது.
(2026, திசெம்பர் 31 வரை அடிப்படைச் சம்பள அளவுத்திட்டம் ரூபா 65,633.00)

பதவி : **ஆங்கில போதனாசிரியர் 02**

1. **வயதெல்லை** : விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று 22 வயதுக்குக் குறையாத 45 வயதுக்கு கூடாதிருத்தல். (உள்வாரி விண்ணப்பதாரிகளுக்கு உயர்ந்தபட்ச வயதெல்லை உட்படாது).

2. **கல்வித் தகைமை** : **வெளிவாரி விண்ணப்பதாரர்கள் (1 அல்லது 2 அல்லது 3)**

1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஆங்கில மொழியை கற்பித்தல் தொடர்பான இளமாணிப் பட்டம் / ஆங்கிலம் தொடர்பான பட்டம்

அல்லது

2. மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தொழிற் பயிற்சி நிறுவனத்தினால் வழங்கப்படும் தேசிய தொழில்சார் தகைமை (NVQ) ஆறாம் (06) தரத்திற்கு குறையாத தரத்திலான ஆங்கில புலமைச் சான்றிதழ் பெற்றிருத்தல்.

மற்றும்

தகைமையினை பெற்ற பின்னர் அரசாங்க, அரசாங்க கூட்டுத்தாபனம், சபை அல்லது நியதி நிறுவனமொன்றில் ஆகக்குறைந்தது உரிய துறையில் 05 வருட அனுபவம் பெற்றிருத்தல்.

3. மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தொழிற் பயிற்சி நிறுவனத்தினால் வழங்கப்படும் தேசிய தொழில்சார் தகைமை (NVQ) ஐந்து (05) தரத்திற்கு குறையாத தரத்திலான ஆங்கில புலமைச் சான்றிதழ் பெற்றிருத்தல்.

மற்றும்

தகைமையினை பெற்ற பின்னர் அரசாங்க, அரசாங்க கூட்டுத்தானம், சபை அல்லது நியதி நிறுவனமொன்றில் ஆகக்குறைந்தது உரிய துறையில் 10 வருட அனுபவம் பெற்றிருத்தல்.

: **உள்வாரி விண்ணப்பதாரிகள்**

1. மேற்குறித்த வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்குரிய தகைமையைப் பூர்த்திசெய்திருத்தல்.

3. நேர்முகப் பரீட்சைக்கான புள்ளிகள் வழங்கல் :

| | |
|---|---|
| உரிய மேலதிக அனுபவங்கள் | 30 புள்ளிகள் |
| உரிய மேலதிக கல்வித் தகைமைகள் | 30 புள்ளிகள் |
| ஏனைய திறன்கள் / செயல் முன்னேற்றங்கள் | 15 புள்ளிகள் |
| நேர்முகப் பரீட்சையின் செயலாற்றுகை | 25 புள்ளிகள் |
| **மொத்தம்** | **100 புள்ளிகள்** |

Gazette.lk SINCE 2014 AMBITIONS REALIZED

4. சம்பள அளவுத்திட்டம் : MA 4 - 2025 – ரூபா 64,320 – 10 x 1360 – 15 x 1670 - 5 x 2040 - ரூபா 113,170.00
2027.01.01 ஆம் திகதியிலிருந்து இச்சம்பளம் உரித்துடையது.
(2026, திசெம்பர் 31 வரை அடிப்படைச் சம்பள அளவுத்திட்டம் ரூபா 58,598.00 )

5. அனைத்து பதவிகளுக்குமான ஆட்சேர்ப்பு நிபந்தனைகள்

**ஒவ்வொரு விண்ணப்பதாரரும்**

1. அனைத்து விண்ணப்பதாரிகளும் இலங்கைப் பிரசைகளாக இருத்தல் வேண்டும்.
2. பதவிக்கு ஒப்படைக்கப்படும் கடமைகளைச் சிறப்பாக நிறைவேற்றுவதற்கும், நாட்டின் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்கும் தேவையான உடல் மற்றும் உள ரீதியான தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.
3. அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட வீதங்களுக்கு அமைவாக ஊழியர் சேமலாப நிதியத்திற்கு (EPF) பங்களிப்புகளை செலுத்த வேண்டும்.
4. மூன்று (03) வருட பரீட்சார்த்த காலத்திற்கு உட்படுத்தப்படும்.

**சேவை நிபந்தனைகள்**

1992 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும், அரசாங்கத்தினால் அவ்வப்போது விதிக்கப்படும் சட்டங்கள், விதிமுறைகள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கும் உட்பட்டிருத்தல் வேண்டும்.

**ஆட்சேர்ப்பு முறை**

நியமன அதிகாரியினால் தீர்மானிக்கப்படும் முறைக்கு அமைவாக, நேர்முகப் பரீட்சைக் குழுவொன்றினால் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை நடத்தப்படும். அதிகூடிய புள்ளிகளைப் பெற்ற விண்ணப்பதாரர்களில் இருந்து தகுதி வரிசையின் அடிப்படையில் தெரிவு செய்யப்படும்.

விண்ணப்பதாரர்கள் தமது முழுமையான சுயவிபரத் தகவல்களை உள்ளடக்கிய விண்ணப்பங்களை, கீழே குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு 2026.10.16 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடிய வகையில், பதிவுத் தபால் மூலம் அனுப்ப வேண்டும். விண்ணப்பிக்கும் பதவி, கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிடப்பட வேண்டும். முழுமையற்ற, தெளிவற்ற அல்லது காலதாமதமாகக் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுவதோடு கட்டமைக்கப்பட்ட (Shortlist) நேர்முகப் பரீட்சைக்கான புள்ளிகள் வழங்கப்படும் முறைகளினூடாக பட்டியல்படுத்தப்படும் (அரசாங்கத் துறையில் பணியாற்றும் உத்தியோகத்தர்கள் தமது விண்ணப்பங்களை தமது திணைக்கள/ நிறுவனத் தலைவரின் ஊடாக சமர்ப்பிக்க வேண்டும்.)

பணிப்பாளர் நாயகம்

தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம்,
லியனகேமுல்லை,
சீதுவை,
2026.10.02.

10 - 434

Gazette.lk SINCE 2014 AMBITIONS REALIZED

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## திருத்தம்

### கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சு

### காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்

### காணி ஆணையாளர் நாயகம் திணைக்களத்தின் மேற்பார்வை முகாமைத்துவ உதவித் தொழில்நுட்ப சேவை வகுதியைச் சேர்ந்த குடியேற்ற உத்தியோகத்தர் பதவியின் III ஆம் தரத்திற்கு உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்புச் செய்தவற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2026

2026 ஆம் ஆண்டு யூன் மாதம் 26 ஆந் திகதிய 2,495 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட "காணி ஆணையாளர் நாயகம் திணைக்களத்தின் மேற்பார்வை முகாமைத்துவ உதவித் தொழில்நுட்ப சேவை வகுதியைச் சேர்ந்த குடியேற்ற உத்தியோகத்தர் பதவியின் III ஆம் தரத்திற்கு உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப்பரீட்சை - 2026" எனும் பரீட்சை அறிவித்தலின் 02 ஆம் மற்றும் 04 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டவாறு பின்வருமாறு திருத்தப்படுகின்றன.

02. **தகைமைகள் :**

I. **கல்வித் தகைமைகள் :** உயிரியல் (Biology), இரசாயனவியல் (Chemistry), பௌதிகவியல் (Physics), விவசாய விஞ்ஞானம் (Agricultural Science), விவசாய தொழில் நுட்பவியல் (Agro Technology) உயிரியல் முறைமைகள் தொழிநுட்பவியல் (Biosystems Technology ) மற்றும் தொழிநுட்ப வியலுக்கான விஞ்ஞானம் (Science for Technology) ஆகிய பாடங்களில் ஏதேனும் மூன்று (03) பாடங்களில் கல்விப் பொதுத் தராதர (உயர் தர)ப் பரீட்சையில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

மற்றும்

சிங்களம்/தமிழ்/ஆங்கில மொழி, விஞ்ஞானம், கணிதம் மற்றும் மேலும் ஒரு பாடத்தில் விசேட (சாதாரண) சித்தியுடன் ஒரே அமர்வில் ஆறு (06) பாடங்களில் கல்விப் பொதுத் தராதரப் (சாதாரண தர) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

04. **வயது எல்லை :**

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று 18 வயதுக்கு குறையாமலும் 35 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (அதற்கமைய 2008.10.02 ஆம் திகதியிலோ அல்லது அதற்கு முன்னரோ மற்றும் 1991.10.02 ஆம் திகதியிலோ அல்லது அதன் பின்னரோ பிறந்த திகதியை உடையவர்களுக்கு மாத்திரமே இதற்காக விண்ணப்பிக்கத் தகைமையுண்டு).

மேலும் இப்பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்ப்படுவதற்குத் தேவையான சகல தகைமைகளும், 2026, யூன் மாதம் 26 ஆந் திகதிய 2,495 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள 2026.07.31 ஆந் திகதியில் அனைத்து விதத்திலும் பூர்த்தி செய்யப் பட்டிருத்தல் வேண்டும்.

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி - 2026, நவெம்பர் 02

மேற்குறிப்பிட்ட திருத்தங்கள் தவிர்ந்து, அவ்வர்த்த மானிப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட ஏனைய அனைத்து விடயங்களும் மாற்றமின்றிச் செல்லுபடி யாகும். (2.495 ஆம் இலக்க 2026, யூன் மாதம் 26 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமான அறிவித்தலின் பிரகாரம் ஏற்கனவே விண்ணப்பித்துள்ள விண்ணப்பதாரிகள் மீண்டும் விண்ணப்பிக்கத் தேவையில்லை).

சந்தன ரணவீர ஆரச்சி,
காணி ஆணையாளர் நாயகம்.
காணி ஆணையாளர் திணைக்களம்.

1200/6, மிஹிகத மெதுர,
ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்ல,
2026, செத்தெம்பர் 28.

10- 408

---

## திருத்தம்

### இலங்கை புகையிரத திணைக்களத்தில் சார்ந்த உத்தியோகத்தர் சேவை பிரிவில் போக்குவரத்து கிரய உத்தியோகத்தர் பதவியில் III ஆம் தர பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - (2026)

மேற்கூறப்பட்ட விடயம் தொடர்பில் விண்ணப்பங்கள் கோரப்பட்ட இலக்கம் 2502 மற்றும் 2026.08.14 ஆம் திகதிய அரச வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள 3.4 மற்றும் 7 (இ) பந்தியினை பின்வருமாறு திருத்தியமைக்கின்றேன்.

3.4 இல. 18/2020 மற்றும் 2020.10.16 திகதிய அரச நிர்வாக சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கமைய ஏற்புடைய வகையில் தாங்கள் அரச கரும மொழி தொடர்பிலான தேர்ச்சியினை பெற்றுக்கொள்ள வேண்டும்.

Gazette.lk SINCE 2014 AMBITIONS REALIZED

7. (இ) பரீட்சை தொடர்பில் சரியாக நிரப்பப்பட்ட விண்ணப் பங்கள் கீழ்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் 2026.10.10 ஆம் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடிய வகையில் அனுப்பி வைக்கப்பட வேண்டும். விண்ணப்பத்தினை இடும் உறையின் இடது பக்க மேல் மூலையில் "இலங்கை புகையிரத திணைக்களத்தின் போக்குவரத்து கிரய உத்தியோகத்தர் பதவியில் III ஆம் தர பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்தப் போட்டிப் பரீட்சை - 2026" என தெளிவாக குறிப்பிட வேண்டும். அத் திகதிக்கு பின்னர் கிடைக்கப் பெறும் எந்தவொரு விண்ணப்பமும் பொறுப்பேற்கப்பட மாட்டாது.

இந்த திருத்தத்தின் காரணமாக இலக்கம் 2502 மற்றும் 2026.08.14 ஆம் திகதிய வர்த்தமானியில் வெளியிடப்பட்ட விண்ணப்ப கோரல் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகள் நிறைவு செய்யப்பட்டிருக்க வேண்டிய திகதியான 2026.09.14 என்பது திருத்தியமைக்கப்பட மாட்டாது என்பதை கருத்திற் கொள்க. ஏற்கனவே, விண் ணப்பங்களை முன்வைத்த விண்ணப்பதாரிகள் மீண்டும் விண்ணப்பத்தினை முன்வைக்க வேண்டியதில்லை.

ரவிந்திர பத்மபிரிய,
புகையிரத பொதுமுகாமையாளர்,

இலங்கை புகையிரத திணைக்களம்,
இல. 355, ஒல்கொட் மாவத்தை,
கொழும்பு 10,
2026.09.23.

10-362

---

**திருத்தம்**

**கணக்காய்வு சேவை ஆணைக்குழு**

**இலங்கை அரச கணக்காய்வு சேவையின் களவேலை/ அலுவலக வேலை சேவைப் பிரிவின் III ஆம் வகுப்பின் II ஆம் தரத்தின் கணக்காய்வு உத்தியோகத்தர் பதவிக்கு ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2026**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2026.09.11 ஆந் திகதிய 2506 ஆம் இலக்க வர்த்தமானியில் பிரசித்தப் படுத்தப்பட்ட "இலங்கை அரச கணக்காய்வு சேவையின் களவேலை/ அலுவலக வேலை சேவைப் பிரிவின் III ஆம் வகுப்பின் II ஆம் தரத்தின் கணக்காய்வு உத்தியோகத்தர் பதவிக்கு ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2026" தொடர்பான பரீட்சை அறிவித்தலின், தொடர் இலக்கம் 4 இன் தகைமைகளின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள (iii) வயது தொடர்பான நிபந்தனை பின்வருமாறு திருத்தம் செய்யப்படுகிறது.

"விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதியன்று வயது 22 வருடங்களுக்குக் குறையாமலும் 35 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்."

02. மேலும், தொடர் இலக்கம் 12 இன் (i) ஆம் உபபந்தியில்,

"7.2.1.1.1 (அ) பிரிவின் கீழ் விண்ணப்பிக்கும் விண்ணப்ப தாரர்கள், நிதி கணக்கியல் அல்லது கணக்காய்வு மற்றும் பொது நுண்ணறிவு ஆகிய இரண்டு பாடங்களில் இருந்து ஒரு பாடம் உட்பட 03 வினாத்தாள்களுக்குத் தோற்ற வேண்டும்" என்பது, பின்வருமாறு திருத்தம் செய்யப்படுகிறது.

"7.2.1.1.1 (அ) பிரிவின் கீழ் விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்கள், நிதி கணக்கியல் அல்லது கணக்காய்வு ஆகிய இரண்டு பாடங்களில் இருந்து குறைந்தபட்சம் ஒரு பாடமும், மற்றும் பொது நுண்ணறிவு உட்பட 03 வினாத்தாள்களுக்குத் தோற்ற வேண்டும்"

03. இந்த ஆட்சேர்ப்பிற்காக, விண்ணப்பதாரர்கள் தகைமைகளைப் பூர்த்தி செய்திருக்க வேண்டிய திகதியில் எந்தவித மாற்றமும் இல்லை. அதற்கமைய, இவ்வாட்சேர்ப்பிற்காகக் கருத்தில் கொள்ளப்படும் அனைத்துத் தகைமைகளும், முதலில் வெளியிடப்பட்ட விண்ணப்பங்கள் கோரப்படும் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள 2026, ஒற்றோபர் 12 ஆந் திகதியன்று பூர்த்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

04. மேலும், 2026.09.11 ஆம் திகதிய விண்ணப்பங்கள் கோரப்படும் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய அனைத்து ஏற்பாடுகளும் எதுவித மாற்றமுமின்றி நடைமுறையில் இருக்கும் என்பதுடன், இந்த திருத்தத்தின் காரணமாக, விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்வதற்கான இறுதித்திகதி 2026, நவெம்பர் மாதம் 12 ஆந் திகதி வரை நீடிக்கப்படுகிறது.

05. இப்பரீட்சைக்காக ஏற்கனவே விண்ணப்பித்துள்ள விண்ணப்பதாரர்கள் மீண்டும் விண்ணப்பங்களை சமர்ப்பிக்க வேண்டிய அவசியமில்லை.

கணக்காய்வு சேவை ஆணைக்குழுவின் கட்டளைக்கிணங்க,

டி.கே. விஜேசிங்க,
செயலாளர்,
கணக்காய்வு சேவை ஆணைக்குழு.

10 - 409

Gazette.lk SINCE 2014 AMBITIONS REALIZED

## இலங்கை புகையிரத திணைக்களத்தில் சார்ந்த உத்தியோகத்தர் சேவை பிரிவில் பெறுகை உத்தியோகத்தர் பதவியில் III ஆம் தர பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - (2026)

இலங்கை புகையிரத திணைக்களத்தில் சார்ந்த உத்தியோகத்தர் சேவை பிரிவில் பெறுகை உத்தியோகத்தர் பதவியில் ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டி பரீட்சை தொடர்பில் தகுதி வாய்ந்த இலங்கை பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1.1 இப் பரீட்சையின் மூலம் ஆட்சேர்ப்பு செய்யப்படுவது இலங்கை புகையிரத திணைக்களத்தைச் சார்ந்த உத்தியோகத்தர் சேவை பிரிவில் பெறுகை உத்தியோகத்தர் பதவியில் III ஆம் தரத்திற்காகும்.

1.2 விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதி திகதி 2026.10.26 ஆகும்.

**குறிப்பு** .- விண்ணப்பம் அல்லது அது தொடர்பிலான கடிதமொன்று தபாலில் தொலைதல் மற்றும் தாமதமாதல் தொடர்பில் மேற்கொள்ளப்படுகின்ற முறைப்பாடுகள் கருத்திற் கொள்ளப்பட மாட்டாது. இறுதி திகதி வரை விண்ணப்பத்தினை தாமதிப்பதினால் ஏற்படும் நட்டங்கள் மற்றும் சேதங்கள் விண்ணப்பதாரியினாலேயே ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும்.

**எழுத்து மூல பரீட்சை :**

இப் பரீட்சையானது கீழ்வரும் இரு வினாத்தாள்களை கொண்டமைந்துள்ளது.

i. நுண்ணறிவுப் பரீட்சை
ii. பெறுகை மற்றும் முகாமைத்துவம்

**பரீட்சை திகதி** :

இப் பரீட்சை 2027 சனவரி மாதத்தில் புகையிரத பொதுமுகாமையாளரினால் அங்கீகரிப்பு வழங்கப்பட்ட நிறுவனமொன்றின் மூலம் நடாத்தப்படும். அப் பரீட்சையை பிற்போடுவதற்கு மற்றும் இரத்து செய்வதற்கான அதிகாரம் புகையிரத பொது முகாமையாளருக்கு உள்ளது.

02. நியமிக்கப்படும் எண்ணிக்கை 04 ஆகும். இறுதி வெற்றிடத்திற்காக அல்லது இறுதி வெற்றிடங்கள் சிலவற்றிற்காக சம புள்ளிகளை பெற்றுக் கொண்ட விண்ணப்பதாரிகள் வெற்றிடங்களை விஞ்சி காணப்படும் போது அவ்வெற்றிடங்களை நிரப்புவது தொடர்பில் நடைமுறைக் விதிக் கோவையின் 91 ஆவது பிரிவின் பிரகாரம் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளையின் படி தீர்மானங்கள் மேற்கொள்ளப்படும்.

03. **சேவை நிபந்தனைகள் :**

3.1 அரசாங்க சேவையில் நியமனங்கள் கட்டுப்படுத்தப்படுகின்ற பொது நிபந்தனைகளுக்கும் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் இலக்கம் PSC/EST/04-01-43/02/2015 மற்றும் 2016.04.19 ஆம் திகதிய அங்கீகரிக்கப்பட்ட இலங்கை புகையிரத திணைக்களத்தைச் சார்ந்த உத்தியோகத்தர் சேவை பிரிவு தொடர்பில் ஆட்சேர்ப்பு திட்டத்தில் விதிக்கப்பட்டுள்ள நியமங்கள் மற்றும் நிபந்தனைகளுக்கு அவ் ஆட்சேர்ப்பு திட்டத்திற்கு மேற்கொள்ளப்பட்ட மற்றும் இன்னகத்தும் மேற்கொள்ளப்படுகின்ற திருத்தங்களுக்கு தாபன விதிக்கோவை மற்றும் நிதி பிரமாணங்களின் ஏற்பாடுகளுக்கும், இலக்கம் 2310/29 மற்றும் 2022.12.14 ஆம் திகதி அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடைமுறை விதியின் சட்டதிட்டங்களின் கீழ் தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரியொருவர் சேவையில் III ஆம் தரத்திற்கு நியமிக்கப்படுவர்.

3.2 இப்பதவி நிரந்தரமானது. ஓய்வூதியத்திற்குரியது. மேலும் விதவைகள் அநாதைகள் ஓய்வூதிய நிதியத்துக்கு/தபுதாரர் அநாதைகள் ஓய்வூதிய நிதியத்துக்கு பங்களிப்புச் செய்தல் வேண்டும். அரசினால் காலத்திற்கு காலம் பிரகடனப்படுத்தும் விதத்தில் தங்களால் அதற்கான உதவுத் தொகைகள் செலுத்தப்பட வேண்டும்.

3.3 இப் பதவியானது மூன்று வருட தகுதிகூர் நிலை காலத்திற்கு கீழ்படிவானது. இலங்கை புகையிரத பெறுகை உத்தியோகத்தர் III ஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்டு 03 வருட காலத்திற்குள் ஆட்சேர்ப்பு திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு முதலாவது வினைத்திறன் காண் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைய வேண்டும்.

3.4 இலக்கம் 18/2020 மற்றும் 2020.10.16 ஆம் திகதிய பொது நிர்வாக சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கமைய தாங்கள் ஏற்புடைய அரசகரும மொழியில் தேர்ச்சியினை பெற்றுக்கொள்ள வேண்டும்.

3.5 தங்களுக்கு வழங்கப்பட்ட பதவியில் கடமைகளை ஏற்புடைய காலத்தில் பொறுப்பேற்பதற்கு தாங்கள் தவறும் பட்சத்தில் மற்றும் /அல்லது நியமிக்கப்பட்ட பதவியில் அல்லது நியமிக்கப்பட்ட பிரதேசத்தில் கடமைகளை பொறுப்பேற்பதை நிராகரிக்கும் அல்லது கைவிடும் விண்ணப்பதாரிகளின் நியமனங்களை இரத்து செய்வதற்க்கான அதிகாரம் புகையிரத பொதுமுகாமையாளருக்கு உள்ளது.

04. **மாதாந்த சம்பள அளவுத்திட்டம் :**

2025.03.25 ஆம் திகதிய 10/2025 உடைய பொது நிர்வாக சுற்றறிக்கையின் II ஆம் உப அட்டவணைக்கமைய இப் பதவிற்குரிய சம்பள அளவுதிட்டம் ரூ. 53,060.00 - 10 x 800 - 11 x 1,190 - 10 x 1,320 - 5 x 1,350 - ரூ. 94,100.00 (MN4-2025) ஆகும். அச் சுற்றறிக்

Gazette.lk SINCE 2014 AMBITIONS REALIZED

கையின் ஏற்பாடுகளுக்கமைய அதன் உப அட்டவணை III இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறே தங்களுக்கு சம்பளம் செலுத்தப்படும். இதற்கு மேலதிகமாக அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு அரசாங்கத்தினால் அவ்வப் போது செலுத்தப்படுகின்ற வேறுபடிகளுக்கும் நீங்கள் உரித்துடையவர் ஆவீர்கள்.

05. **ஆட்சேர்ப்பு செய்வதற்கான தகைமைகள் /அனுபவம் :**

i. இலங்கை பிரசையாக இருத்தல் வேண்டும்.

ii. விண்ணப்பதாரிகள் சிறந்த நன்னடத்தையை கொண்டவர்களாய் இருத்தல் வேண்டும்.

iii. இலங்கையில் எந்தவொரு பிரதேசத்திலும் சேவை புரிவதற்கும் பதவியில் கடமையாற்றவும் போதியளவு உடல் உளசார் தகைமைகளை கொண்டவராய் இருத்தல் வேண்டும்.

(அ) **கல்விசார் தகைமைகள் :**

i. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழு வினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழக மொன்றில் கணிதம், விஞ்ஞானம், முகாமைத் துவம், தகவல் தொழில்நுட்பம், வணிக, வர்த்தக முகாமைத்துவம், பொருளியல், புள்ளி விபரவியல் போன்ற பாடங்களில் ஏதேனு மொரு பாடத்துடன் பட்டப்படிப்பினை பெற் றிருத்தல்.

அல்லது

ii. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழு வினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழக மொன்றில் ஏதேனும் பாடத்துறையில் பெற்றுக் கொண்ட பட்டப்படிப்புடன் பெறுகைத் துறை தொடர்பில் 02 வருட அனுபவத்தினை கொண் டிருத்தல்.

குறிப்பு :

பட்டப்படிப்புச் செல்லுபடியாகும் திகதியானது விண்ணப்பங்களை கோருகின்ற இறுதி திகதிக்கு அல்லது அதற்கு முன்னரான திகதி யாக இருத்தல் வேண்டும்.

**வயது** :

விண்ணப்பதாரியின் வயது விண்ணப்பத்தினை கோரும் திகதிக்கு இருபத்தொரு வருடங்களை (21) விட குறையாதவாறும் முப்பத்தைந்து (35)வருடங்களை விட விஞ்சாதவாறும் இருத்தல் வேண்டும்.

(ஆ) **வேறு**

i. பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கு தேவை யான மேலே குறிப்பிடப்பட்ட அனைத்து தகைமைகளும் விண்ணப்பக்கோரல் அறிவித் தலில் / வர்த்தமானியில்/ வலைத்தளத்தளத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பங்களை பொறுப்பேற்கும் இறுதித் திகதியான 2026.10.26 இற்கு அனைத்து வகையிலும் நிறைவு செய்திருத்தல் வேண்டும்,

ii. எந்தவொரு மத குருமாருக்கும் இந்த போட்டி பரீட்சைக்கு விண்ணப்பிக்க அல்லது தோற்றுவதற்கு அனுமதி இல்லை.

iii. விடய இல 5. அ.11 இல் குறிப்பிடப்படுகின்ற தகைமைகளை உறுதிப்படுத்துவது தொடர்பில் ஏற்புடைய நிறுவனத்தினால் முறையாக வழங்கப்பட்ட ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

06. **பரீட்சைக் கட்டணம்** :

பரீட்சைக் கட்டணம் ரூ. 1200.00 ஆகும். இக் கட்டண மானது விண்ணப்பங்களை ஏற்கின்ற இறுதித் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் புகையிரத பொது முகாமையாளரது மக்கள் வங்கியின் நகர மத்திய கிளையில் கணக்கு இல. 176-1001-090-27313 எனும் கணக்கிற்கு வரவு வைக்கப்படும் வகையில் எந்தவொரு மக்கள் வங்கி கிளைக்கும் செலுத்தப்படலாம். அதற்காக வழங்கப்பட்ட பற்றுச்சீட்டினை ஏற்புடைய விண்ணப்பத்தில் குறித்த கூட்டினுள் கழறாத வண்ணம் ஒட்ட வேண்டும். காசுக் கட்டளைகள் மற்றும் முத்திரைகள் பொறுப்பேற்கப்படமாட்டாது. பரீட்சை தொடர்பில் செலுத்தப்பட்ட தொகையானது எந்தவொரு காரணத்தினை முன்னிட்டும் மீள திருப்பியளிக்கப்பட மாட்டாது என்பதோடு வேறொரு பரீட்சை தொடர்பில் மாற்றம் செய்யப்படவும் முடியாது. பற்றுச்சீட்டின் நகற்பிரதியினை தம்வசம் வைத்திருத்தல் நன்மை பயக்கும்.

07. **விண்ணப்பிக்க வேண்டிய முறை :**

(அ) விண்ணப்பமானது இவ்வறிவித்தலின் இறுதியில் காட்டப்பட்டுள்ள மாதிரி படிவத்திற்கமைய தயாரிக் கப்படவேண்டுமென்பதுடன் அனைத்து விண்ணப்ப படிவங்களும் A4 அளவிலான கடதாசியின் இரு புறங்களையும் பாவனைக்கு உட்படுத்தி. விண்ணப்பத்தில் இலக்கம் 1.0 தொடக்கம் 2.12 வரையான தலைப்புக்கள் முதலாவது பக்கத்திலும் 3.0 தொடக்கம் 7.0 வரையிலானவை இரண்டாம் பக்கத்திலும் உள்ளடங்கும் வகை யில் விண்ணப்பமானது தயாரிக்கப்பட வேண்டும் என்பதை விசேடமாக கவனிக்கவும். இதற்காக கணினியில் தயாரிக்கப்பட்ட/தட்டச்சு இயந் திரத்தில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் பாவிக் கப்படலாம். விண்ணப்பத்தில் குறிப்பிடப் பட்டுள்ள தகவல்கள் தமது கையெழுத்திலேயே தெளிவாக நிரப்பப்பட வேண்டுமென்பதோடு மாதிரிக்கு ஒவ்வாத விண்ணப்பங்கள், பூரணமற்ற முறையில் தகவல்கள் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பங்கள்

Gazette.lk SINCE 2014 AMBITIONS REALIZED

என்பன எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப் படுவதால் விண்ணப்பத்தினை முன்வைப்பதற்கு முன்னர் அது பரீட்சை அறிவித்தலில் குறிப் பிடப்பட்டுள்ள மாதிரி படிவத்திற்கு ஒத்து காணப் படுகின்றதா மற்றும் அனைத்து தகவல்களும் உள் ளடக்கப்கப்பட்டு விண்ணப்பமானது முறையாக பூரணப்படுத்தப்பட்டுள்ளதா என்பதையும் குறித்த பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டு அதன் விபரங்கள் விண்ணப்பத்தில் உள்ளடக்கப்பட்டு பற்றுச்சீட்டு ஒட்டப்பட்டுள்ளதா என்பது தொடர்பில் மீண்டும் பரீசிலித்து பார்க்க வேண்டும். மேலும் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பத்தின் நகல் மற்றும் ஏற்புடைய பற்றுச்சீட்டின் நகற்பிரதியினை தம்வசம் வைத்திருத்தல் நன்மை பயக்கும்.

(ஆ) விண்ணப்பதாரிகள் பரீட்சைக்கு தோற்ற எதிர்பார்க்கும் மொழி மூலத்திலேயே விண்ணப் பத்தினை நிரப்ப வேண்டும். விண்ணப்பத்தினை தயாரிக்கையில் விண்ணப்ப தலைப்பில் குறிப் பிடப்பட்டுள்ள பரீட்சையின் பெயர் சிங்கள விண்ணப்பத்தில் சிங்கள மொழிக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் தமிழ் விண்ணப்பங்களில் தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் இடப்படுதல் அத்தியாவசியமாகும்.

(இ) பரீட்சை தொடர்பில் சரியாக நிரப்பப்பட்ட விண்ணப்பங்கள் கீழ்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் 2026.10.26 ஆம் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் அனுப்பி வைக்கப்பட வேண்டும். விண்ணப்பத்தினை இடும் உறையின் இடது பக்க மூலையின் மேல் "இலங்கை புகையிரத திணைக்களத்தின் பெறுகை உத்தியோகத்தர் பதவியில் III ஆம் தர பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்தப் போட்டிப் பரீட்சை – 2026" என குறிப்பிட வேண்டும். அத் திகதிக்கு பின்னர் கிடைக்கப் பெறும் எந்தவொரு விண்ணப்பமும் பொறுப்பேற்கப்பட மாட்டாது.

புகையிரத பொதுமுகாமையாளர்,
இலங்கை புகையிரத திணைக்களம்,
த.பெ. 355
ஓல்கொட் மாவத்தை,
கொழும்பு 10.

(ஈ) விண்ணப்பத்தில் மற்றும் பரீட்சை தொடர்பிலான நுழைவுச்சீட்டில் விண்ணப்பதாரியின் கையொப்ப மானது அரசாங்க பாடசாலையொன்றின் அதிப ரொருவர், சமாதான நீதவானொருவர், சத்தியப் பிரமாணம் செய்த ஆணையாளரொருவர், சட்டத் தரணியொருவர், பிரசித்தி பெற்ற நொத்தாரிஸ் ஒருவர், முப்படையில் அதிகாரமுடைய உத்தி யோகத்தரொருவர், பொலிஸ் சேவையில் வர்த்த மானியில் பிரசுரிக்கப்பட்ட பதவியையுடைய உத்தியோகத்தரொருவர் அல்லது ரூ. 71,240.00 வினை விஞ்சிய மாதாந்த சம்பளத்தினை பெறு கின்ற நிரந்தர பதவியினையுடைய பதவிநிலை உத்தியோகத்தர் ஒருவரைக் கொண்டு உறுதிப் படுத்தப்பட்டிருக்க வேண்டும்.

(உ) அனைத்து வகையிலும் பூரணமற்ற விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். தபாலிடுகையில் விண்ணப்ப மொன்று தொலைதல் மற்றும் தாமதமாதல் தொடர்பில் எந்தவித முறைப்பாடுகளும் கருத்திற் கொள்ளப்பட மாட்டாது.

(ஊ) விண்ணப்பங்கள் கிடைக்கப் பெற்றமை தொடர்பில் அறிவிக்கப்பட மாட்டாது. பரீட்சை நுழைவுச் சீட்டுக்கள் வழங்கப்பட்ட உடனே அதைப்பற்றி குறிப்பிட்டு அறிவித்தலொன்று இலங்கை புகையிரத திணைக்களத்தின் www.railway.gov.lk எனும் இணையத்தளத்தில் அறிவிக்கப்படும். அறிவித்தல் வெளியாகி 02 அல்லது 3 நாட்கள் சென்ற பிறகும் தமது நுழைவுச்சீட்டு கிடைக்கப் பெறாதிருப்பின் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு இது குறித்து இலங்கை புகையிரத திணைக்களத்திற்கு அறிவிக்க வேண்டும். அவ்வாறு அறிவிக்கையில் விண்ணப்பதாரி தாம் விண்ணப்பித்த பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரியின் முழுப் பெயர்,தேசிய அடையாள அட்டை இலக்கம், மற்றும் முகவரி என்பவற்றை குறிப்பிடுதல் வேண்டும். விண்ணப்பதாரி கொழும்பிற்கு வெளியே வசிப்பவரெனின் அவ் விடயங்களுடன் தொலைநகல் ஊடாக பரீட்சை நுழைவுச்சீட்டின் பிரதியொன்றினை அனுப்பி வைக்கக்கூடிய வகையில் விண்ணப்பதாரியின் வட்ஸ்அப் (Whatsapp) இலக்கம் குறிப்பிடப்பட்ட கோரல் கடிதமொன்றினை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தொலைநகல் இலக்கத்திற்கு புகையிரத திணைக்களத்திற்கு முன் வைப்பதன் மூலம் உசாவுதலை மேற்கொள்வது மிகவும் செயற்திறன் மிக்கதாக அமையும். மேலும் இலங்கை புகையிரத திணைக்களத்தினால் கோரப்படும் ஏதேனுமொரு தகவலினை உறுதிபடுத்துவதற்கு நிரப்பப்பட்ட விண்ணப்பத்தின் பிரதியொன்றினை, பரீட்சை கட்டணத்தினை செலுத்தி பெறப்பட்ட பற்றுச்சீட்டின் பிரதியினை மற்றும் விண்ணப்பத்தை தபாலிலிடுகையில் பதிவு செய்த பற்றுச்சீட்டினை தயாராக தம்வசம் வைத்திருப்பது பயன் தரும்.

08. **பரீட்சைக்கு பிரவேசித்தல் :**

(அ) விண்ணப்பக் கோரல் அறிவித்தலில் குறிப்பிடப் பட்டுள்ள தகைமைகளை கொண்டவர்கள் மாத்திரமே விண்ணப்பித்துள்ளார்கள் எனும் எடுகோலின் அடிப்படையில் விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வயதெல்லைக்குள் விண்ணப் பங்களை பொறுப்பேற்கும் இறுதி திகதிக்கு அல்லது அதற்கு முன்னர்ஏற்புடைய பரீட்சைகட்டணத்தினை செலுத்தி அதற்குரிய பற்றுச்சீட்டுடன் முறை யாக நிரப்பப்பட்ட விண்ணப்பங்களை

Gazette.lk SINCE 2014 AMBITIONS REALIZED

முன்வைத்துள்ள விண்ணப்பதாரிகளுக்கு புகையிரத பொதுமுகாமையாளரினால் பரீட்சை நுழைவுச் சீட்டுக்கள் வழங்கப்படும். தமது நுழைவுச் சீட்டுக்களை முன்வைக்க தவறுகின்ற விண்ணப்ப தாரிகளுக்கு பரீட்சைக்கு தோற்றுவதற்கு அனுமதி யளிக்கப்பட மாட்டாது.

(ஆ) விண்ணப்பதாரியொருவர் தமக்கு நியமிக்கப்பட்ட பரீட்சை மண்டபத்தில் பரீட்சைக்கு தோற்ற வேண்டும். அனைத்து விண்ணப்பதாரிகளும் குறித்த பரீட்சை மண்டபத்திற்கு ஏற்புடைய அனுமதி நுழைவுச்சீட்டில் கையொப்பத்தினை உறுதிப்படுத்திக் கொண்டு அப் பரீட்சை மண்டபத்தில் தோற்றுகின்ற முதல் நாளே அதன் மண்டலாதிபதியிடம் கையளிக்க வேண்டும். அனைத்து விண்ணப்பதாரிகளும் பின்பற்ற வேண்டிய சட்டதிட்டங்கள் இவ் வர்த்தமானியில் தொடக்கத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளன. பரீட்சை நடாத்துதல் தொடர்பில் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் விதிக்கப்படுகின்ற சட்டதிட்டங்களுக்கு பரீட்சை விண்ணப்பதாரிகள் கீழ்படிய வேண்டும். அச் சட்டங்களை மீறினால் புகையிரத பொது முகாமை யாளரினால் விதிக்கப்படுகின்ற தண்ட னைக்கு கீழ்படிய அவருக்கு நேரிடும்.

குறிப்பு:

விண்ணப்பதாரியொருவருக்கு பரீட்சை பிரவேச அனுமதி பத்திரத்தினை வழங்குதல், அவர் பரீட்சைக்கு தோற்றுவதற்கான தகைமையினை பூர்த்திசெய்துள்ளார்என ஏற்றுக்கொள்ளப்பட்டதாக கருதப்பட மாட்டாது.

09. **விண்ணப்பதாரியின் ஆளடையாளத்தை உறுதிப் படுத்தல் :**

விண்ணப்பதாரி பரீட்சை மண்டபத்தினுள் தாம் தோற்றுகின்ற அனைத்து பாடங்கள் தொடர்பிலும் பரீட்சை மண்டலாதிபதி திருப்தியடையும் வகையில் தனது ஆளடையாளத்தை உறுதிப்படுத்த வேண்டும். அது தொடர்பில் பின்வரும் ஏதேனுமொரு ஆவணம் மாத்திரம் ஏற்றுக் கொள்ளப்படும்.

1. ஆட்களை பதிவு செய்யும் திணைக்களத்தினால் வழங்கப்படுகின்ற தேசிய அடையாள அட்டை
2. செல்லுபடியாகும் வெளிநாட்டு கடவுச்சீட்டு
3. செல்லுபடியாகும் சாரதி அனுமதிப் பத்திரம்

10. **பொய்யான தகவல்களை வழங்குவதற்கான தண்டனைகள்:**

இப் பரீட்சைக்கு ஏற்புடைய விதிகளுக்கமைய எவரேனும் விண்ணப்பதாரியொருவர் அதற்கு தோற்றுவதற்கு தகைமையற்றவர் என தெரிய வருமிடத்து பரீட்சைக்கு முன்னதாக அல்லது பரீட்சை நடைபெறுகையில் அல்லது அதன் பின்னர் அல்லது ஏதேனுமொரு சந்தர்ப்பத்தில் அவரது எதிர்பார்க்கை இரத்து செய்யப்படலாம்.

11. இவ் அறிவித்தலில் குறிப்பிடப்படாத ஏதேனும் விடயம் காணப்படுமிடத்து அது தொடர்பிலான புகையிரத பொதுமுகாமையாளரால் மேற்கொள்ளப்படும் தீர்மானத் திற்மைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

12. **பரீட்சை முறை மற்றும் பரீட்சை மொழி மூலம் :**

(அ) பரீட்சைகள் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் எனும் மொழிகள் மூலம் நடாத்தப்படும்.

(ஆ) விண்ணப்பதாரி தகுதி பெற்ற பட்டபடிப்பினை பெற்றுக் கொண்ட மொழியில் அல்லது அரசகரும மொழியொன்றில் பரீட்சைக்கு தோற்ற வேண்டும்.

(இ) விண்ணப்பதாரியொருவர் தகுதிபெற்ற பட்டப் படிப்பில் பாடங்களை இரு மொழிகளில் அல்லது அதிக எண்ணிக்கையில் சித்திபெற்றுள்ளார் எனின் அப் பட்டபடிப்பில் அவர் சித்திபெற்ற பாடங்களில் அதிகளவான பாடங்களுக்கு தோற்றிய மொழி மூலம் அல்லது அரசகரும மொழியொன்றில் பரீட்சைக்கு தோற்ற வேண்டும்.

(ஈ) பிரதான பாடங்களை ஒரு மொழியிலும் மேலதிக பாடங்களை வேறோரு மொழியிலும் தேர்ச்சி பெற்றுள்ள விசேட பட்டப்படிப்பினை உடைய விண்ணப்பதாரியொருவர் பிரதான பாடத்தினை தேர்ச்சி பெற்ற மொழியில் அல்லது அரசகரும மொழியொன்றில் பரீட்சைக்கு தோற்றமளிக்க வேண்டும்.

குறிப்பு -

i. மேலே (ஆ) மற்றும் (இ) இல் உள்ள தகுதி பெற்ற பட்டப்படிப்பு எனும் பதத்தினால் கருதப்படுவது யாதெனில் 5 (அ) பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள பட்டப்படிப்பு தகைமை யாகும்.

ii. விண்ணப்பதாரி பரீட்சைக்கு தோற்றுகின்ற அனைத்து வினாப் பத்திரங்களுக்கும் ஒரே மொழி மூலமே விடையளிக்க வேண்டும்.

iii. தமது விண்ணப்பத்தில் குறிப்பிட்டப்பட்ட பரீட் சைக்கு தோற்றும் மொழி மூலத்தை பின்னர் மாற்றுவதற்கு விண்ணப்பதாரிக்கு அனுமதி வழங் கப்படமாட்டாது

13. **ஆட்சேர்ப்பு செய்வதற்கான முறைமை :**

13.1 **எழுத்து மூல பரீட்சை :**

கீழ்வரும் பாடங்களை உள்ளடக்கிய 02 வினாத் தாள்களை கொண்டமைந்த எழுத்து மூல பரீட்சை நடைப்பெறும். பாடங்கள் மற்றும் ஒவ்வொவ்வொரு

Gazette.lk SINCE 2014 AMBITIONS REALIZED

பாடங்களிலும் சித்தியடைவதற்கு பெற்றுக் கொள்ள வேண்டிய குறைந்தப் பட்ச புள்ளிகளின் எண்ணிக்கை கீழ்வருமாறு :

| *பாடம்* | *அதிக்கூடிய புள்ளி* | *சித்திபெற பெற்றுக் கொள்ள வேண்டிய புள்ளிகளின் அளவு* |
|---|---|---|
| 01. நுண்ணறிவுப் பரீட்சை | 100 | 40 |
| 02. பெறுகை மற்றும் முகாமைத்துவம் | 100 | 40 |

விண்ணப்பதாரிகள் அனைத்து வினாத்தாள்களுக்கும் தோற்ற வேண்டும்.

எழுத்து மூல பரீட்சைக்கான பாட விதப்புரை

01. **நுண்ணறிவு பரீட்சை**

விண்ணப்பதாரியின் மொழித்திறன் , வாத திறமை, தீர்மானத்தினை மேற்கொள்ளும் ஆற்றல் மற்றும் கணித திறமையினை பரீட்சிக்கக்கூடிய வகையில் பல்வினா மற்றும் குறுகிய விடைகளை வழங்கும் வடிவிலான 50 வினாக்களை கொண்ட வினாப் பத்திரமாகும். அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும். (காலம் 01 மணித்தியாலம்)

02. **பெறுகை மற்றும் முகாமைத்துவம்**

**விண்ணப்பதாரியின்**

I. அரச பெறுகை செயன்முறை மற்றும் பெறுகை அறிவுறுத்தல் நடைமுறை விதிகள் பற்றிய அறிவு
II. பெறுகை திட்டமிடல் மற்றும் பெறுகை ஆவணங்களை தயாரித்தல் பற்றிய அறிவு
III. களஞ்சிய முகாமைத்துவம்
IV. விலை மதிப்பீட்டு செயன்முறை
V. வழங்கல் முகாமைத்துவம்
VI. விலை மனுக்களை மதிப்பிடல்
VII. ஒப்பந்த முகாமைத்துவம்
VIII. உடன்படிக்கை நிர்வாகம்
IX. பெறுகை செயன்முறை மற்றும் அர்த்தமுள்ளதான அரச பெறுகை செயன்முறையை நிறைவேற்றுதல்
X. இடர் முகாமைத்துவம், அரசாங்க சொத்துக்களை அகற்றல் மற்றும் ஒப்பந்தங்களை நிறைவு செய்வதற்கான செயன்முறைகள் .தொடர்பிலான அறிவினை பரீட்சிப்பது தொடர்பிலான குறுகிய பதில்களை வழங்கல் மற்றும் கட்டமைக்கப்பட்ட மாதிரியிலான வினாப்பத்திரமாகும். அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும். (காலம் 03 மணித்தியாலங்கள்)

13.2 **கட்டமைக்கப்பட்ட நேர்முக பரீட்சை:**

i. எழுத்து மூல பரீட்சைகளில் சித்தி பெறுகின்ற விண்ணப்பதாரிகளை திறமை முறைக்கமைய வெற்றிடங்களின் எண்ணிக்கையில் இருமடங்கு எண்ணிக்கைக்கு சமமான அளவில் கட்டமைக்கப்பட்ட நேர்முக பரீட்சைக்கு உட்படுத்தி அதில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்றுக் கொண்ட முறைக்கமைய விண்ணப்பங்கள் கோரப்பட்ட இறுதி திகதிக்கு நிலவுகின்ற வெற்றிட எண்ணிக்கைக்கு சமமான எண்ணிக்கையில் ஆட்சேர்ப்பு செய்யப்படுவர்.

ii. கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை சபையானது புகையிரத பொதுமுகாமையாளரினால் நியமிக்கப்படுவதுடன் அப்பரீட்சை நடைப் பெறும் திகதி புகையிரத பொதுமுகாமையாளரினால் தீர்மானிக்கப்படும்.

iii. அங்கு புள்ளிகள் வழங்கப்படும் பிரதான தலைப்புக்கள் கீழ்வருமாறு

| | *புள்ளிகள் வழங்கப்படும் பிரதான தலைப்புக்கள்* | *அதிகூடிய புள்ளி அளவு* |
|---|---|---|
| 01 | மேலதிக கல்வி தகைமைகள் | 10 |
| 02 | தொழிற்சார் தகைமைகள் | 20 |
| 03 | அனுபவம் | 25 |
| 04 | தகவல் தொழிநுட்பம் தொடர்பிலான அறிவு | 20 |
| 05 | ஆங்கில மொழி புலமை | 20 |
| 06 | நேர்முக பரீட்சையில் காட்டுகின்ற திறமை | 05 |
| | மொத்த புள்ளிகள் | 100 |

Gazette.lk SINCE 2014 AMBITIONS REALIZED

**குறிப்பு :**

அனுபவத்தின் கீழ் புள்ளிகள் வழங்கப்படும்போது 5(அ)(ii) இன் கீழ் காட்டப்பட்டுள்ள தகைமைகளின் கீழ் ஆட்சேர்ப்பு செய்யப்படுகின்ற போது ஆட்சேர்ப்பிற்காக கவனத்திற் கொள்ளப்படுகின்ற 02 வருடத்திற்கு மேலதிகமான அனுபவத்திற்கு மாத்திரம் கட்டமைக்கப்பட்ட நேர்முக பரீட்சையில் புள்ளிகள் வழங்கப்படும்,

**கருத்திற் கொள்ள வேண்டியவை** :

கட்டமைக்கப்பட்ட நேர்முக பரீட்சைக்கு பங்கேற்பது நியமனம் வழங்குவதற்கான தகைமையினை பூர்த்தி செய்வதாக கருதப்பட முடியாது

14. பரீட்சைக்கு தோற்றிய அனைத்து விண்ணப்பதாரிகளுக்கும் தனிப்பட்ட ரீதியில் பெறுபேறுகள் அறிவிக்கப்படுவதற்கோ அல்லது www.railway.gov.lk எனும் இணையத்தளத்தில் பகிரங்கப்படுத்துவதற்தோ இலங்கை புகையிரத திணைக்களத்தினால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

15. சிங்கள மற்றும் தமிழ் மொழியில் பிரசுரிக்கப்படும் இவ் அறிவித்தலில் மொழிகளுக்கிடையில் ஏதேனும் வேறுபாடு காணப்படுவதாக தோன்றுமிடத்து அவ்வாறான சந்தர்ப்பத்தில் சிங்கள மொழியில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலின் படி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்

ரவிந்திர பத்மபிரிய,
புகையிரத பொதுமுகாமையாளர்.

இலங்கை புகையிரத திணைக்களம்,
இல 355, ஓல்கொட் மாவத்தை,
கொழும்பு 10,
2026, செத்தெம்பர் 23.

அலுவலக பாவனைக்கு மாத்திரம்

**இலங்கை புகையிரத திணைக்களத்தைச் சார்ந்த உத்தியோகத்தர் சேவை பிரிவில் போக்குவரத்து கிரய உத்தியோகத்தர் பதவியில் III ஆம் தர பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - (2026)**

1.0 மொழி
பரீட்சைக்கு தோற்றும் மொழி மூலம்
சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4

(ஏற்புடைய இலக்கத்தை கூட்டினுள் எழுதுக) பரீட்சைக்கு தோற்றுகின்ற மொழி மூலத்திலேயே விண்ணப்பம் பூர்த்தி செய்யப்பட வேண்டும்

2.0 **தனிப்பட்ட தகவல்கள்**

2.1 முழுப்பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்)

.....................................................................................................................................

(உதா : HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA KARUNARATHNE)

2.2 முழுப்பெயர் (சிங்களத்தில்/தமிழில்)

.....................................................................................................................................

2.3 முதலெழுத்துக்களுடன்பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்)

(உதா : KARUNARATHNE H.M.S.K.)

Gazette.lk SINCE 2014 AMBITIONS REALIZED

2.4 முதலெழுத்துக்களுடன் பெயர் (சிங்களத்தில்/தமிழில்).

........................................................................................................................................

2.5 நிரந்தர முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்)

........................................................................................................................................
(நுழைவுச்சீட்டுக்கள் இவ் முகவரிக்கு தபாலிடப்படும்)

2.6 பெண்/ஆண் பால் (ஏற்புடைய இலக்கத்தை கூட்டினுள் எழுதுக)

பெண் - 1

ஆண் - 0 ☐

2.7 தேசிய அடையாள அட்டை இலக்கம் : ☐☐☐☐☐☐☐☐☐☐☐☐

2.8 விவாகமானவர்/விவாகமாகாதவர் (ஏற்புடைய இலக்கத்தை கூட்டினுள் எழுதுக)

2.9 இனம் (சிங்களவர்-1/இலங்கை தமிழர்- 2/ இந்திய தமிழர் 3 /முஸ்லிம்கள்-4/வேறு5

(ஏற்புடைய இலக்கத்தை கூட்டினுள் எழுதுக)

2.10 பிறந்த திகதி : ஆண்டு : ☐☐☐☐ மாதம் : ☐☐ திகதி : ☐☐

2.11 விண்ணப்பம் கோரப்படும் திகதிக்கு வயது -

ஆண்டு : ☐☐ மாதம் : ☐☐ திகதி : ☐☐

2.12 கையடக்க தொலைபேசி இலக்கம் : ☐☐☐☐☐☐☐☐☐☐

3.0 பட்டம் பெற்ற திகதி : ........................................................................................................

பல்கலைக்கழகம் /நிறுவனம் : ........................................................................................

பதிவு எண் : ...........................................................................................................

உள்வாரி/வெளிவாரி : ..............................................................................................

பட்டப்படிப்பு : .......................................................................................................

பாடங்கள் : ...........................................................................................................

வகுப்பு : ..............................................................................................................

மேல்/கீழ் : ...........................................................................................................

பட்டம் செல்லுப்படியாகும் தினம் : ..........................................................................

பரீட்சைக்கு தோற்றிய மொழி மூலம் : .....................................................................

4.0 பரீட்சைக் கட்டணத்தை செலுத்துதல் :

i. கட்டணம் செலுத்தப்பட்ட மக்கள் வங்கிக் கிளை :.......................................................

ii. செலுத்தப்பட்ட பணத் தொகை :.............................................................................

iii. செலுத்தப்பட்ட திகதி :........................................................................................

| |
|---|
| பணவைப்புப் சீட்டின் முதற் பிரதியை இங்கு ஒட்டவும்.<br>(பண வைப்புப் சீட்டின் நகற்பிரதியை தம் வசம் வைத்திருப்பது நன்மை பயக்கும்) |

Gazette.lk SINCE 2014 AMBITIONS REALIZED

**5.0 விண்ணப்பதாரியின் உறுதிப்படுத்தல்**

இந்த விண்ணபபத்தில் முன்வைக்கப்பட்டுள்ள தகவல்கள் நான் அறிந்த மற்றும் விசுவாசிக்கின்ற வரையில் உண்மை யானவை எனவும் பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட பணவைப்புச் சீட்டு இதனுடன் இணைக்கப்பட்டிருப்பதையும் அறியத் தருகின்றேன். பரீட்சை சட்டதிட்டங்களுக்கு இணங்கி செயற்படவும் இப் பரீட்சைத் தொடர்பிலான ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ள சேவை அமைப்பிற்கமைய பொருத்தமற்றவர் என தெரியவருமிடத்து பரீட்சைக்கு முன்னரோ அல்லது அது நடைபெறுகையில் தெரியவருமிடத்தினை தொடர்ந்து பரீட்சைக்கான எனது எதிர்பார்க்கை இரத்து செய்யப்படுவதற்கும் நான் இணங்குகின்றேன். மேலும் பரீட்சை நடாத்துவது தொடர்பில் புகையிரத பொதுமுகாமையாளரினால் விதிக்கப்படுகின்ற சட்டதிட்டங்களுக்கு நான் கீழ்படிவதையும் இத்தால் நான் அறயத் தருகின்றேன்.

திகதி : .................................................. ...................................................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்

**6.0 விண்ணப்பதாரியின் கையொப்பத்தினை உறுதிப்படுத்தல் :**

இவ் விண்ணப்பத்தை முன்வைத்துள்ள ..........................................................................(முழுப் பெயர்) அவர்களை தனிப்பட்ட முறையில் நான் நன்கறிவேன் என்றும் பரீட்சை கட்டணம் முறையாக கட்டப்பட்டுள்ளது என்பதையும் அப்பற்றுச் சீட்டு முறையாக ஒட்டப்பட்டுள்ளது என்பதையும் ................................................ ஆம் திகதி அவர் என் முன்னிலையில் கையொப்பமிட்டார் என்பதையும் இத்தால் நான் உறுதிப்படுத்துகிறேன்.

திகதி : .........................................

கையொப்பத்தினை உறுதிப்படுத்துபவரின் முழுப் பெயர் : ...................................................................................................

பதவி : ...........................................................................................................................................................................

முகவரி : .......................................................................................................................................................................

(உத்தியோகபூர்வ இலட்சினையை கொண்டு உறுதிப்படுத்தப்பட வேண்டும்)

**7.0 திணைக்கள பிரதானியின் உறுதிப்படுத்தல் (அரச/உள்ளூராட்சி/அரசகூட்டுத்தாபனங்களில் சேவையில் ஈடுப்பட்டுள்ள விண்ணப்பதாரிகளுக்காக மாத்திரம்)**

இவ் விண்ணபத்தை முன்வைத்துள்ள திரு/திருமதி/செல்வி ........................................... அவர்கள், இவ் அமைச்சில்/ திணைக்களத்தில்/நிறுவனத்தில் ......................... ஆக சேவை புரிவதோடு, அவரது விண்ணபத்தினை பரிந்தருத்து முன்வைக்கிறேன். இப்பதவிக்கு தெரிவு செய்யப்படுமிடத்து இந் நிறுவனத்தின் சேவையிலிருந்து விடுவிப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும் என்பதையும் அறியத் தருகின்றேன்.

...............................................................................................

நிறுவன பிரதானியின் கையொப்பம்

பெயர் : ...................................................................................
பதவிப் பெயர் : ...................................................................
திகதி : .....................................................................................
(உத்தியோகபூர்வ இலட்சினையை கொண்டு உறுதிப்படுத்தப்பட வேண்டும்)

10 - 336

Gazette.lk SINCE 2014 AMBITIONS REALIZED

## நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாடு அமைச்சு

## சிறைச்சாலைகள் திணைக்களம்

## இலங்கை சிறைச்சாலைகள் திணைக்களத்தின் முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்பவியல் தொகுதி - 2 சேவை வகுதி மருந்துக் கலவையாளர் தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2026

இலங்கைச் சிறைச்சாலைகள் திணைக்களத்தில் வெற்றிட மாகக் காணப்படுகின்ற மருந்துக் கலவையாளர் (பெண்/ ஆண்) பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்யும் திறந்த போட்டிப் பரீட்சைக்கு தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

I. இப்பரீட்சையின் மூலம் ஆட்சேர்ப்புச் செய்யப்படுவது இலங்கை சிறைச்சாலைகள் திணைக்களத்தின் மருந்துக் கலவையாளர் பதவியில் தரம் III இற்கு ஆகும்.

II. எழுத்து மூலமான பரீட்சை :- இப்பரீட்சை பின்வரும் 02 வினாத்தாள்களைக் கொண்டதாக இருக்கும்.

(I) நுண்ணறிவு பரீட்சை

(II) விடயம்சார் பொது அறிவு பரீட்சை

2. **பரீட்சைத் திகதி மற்றும் பரீட்சையை நடாத்தல் :**

இப்பரீட்சை 2026, திசெம்பர் மாதம் கொழும்பு நகரத்தில் தாபிக்கப்படுகின்ற பரீட்சை நிலையங்களில் நடாத்தப் படும்.

3. நியமனம் செய்யப்படும் மொத்த வெற்றிடங்களின் எண்ணிக்கை 27 ஆகும். (தரம் III இன் மருந்துக் கலவையாளர் (ஆண்) – 19 ம் மற்றும் தரம் III இன் மருந்துக் கலவையாளர் (பெண்) – 08 ம் ஆகும். இறுதி வெற்றிடத்திற்கு அல்லது ஒரு சில வெற்றிடங்களுக்கு சமமான புள்ளிகளைப் பெற்றுக் கொண்டுள்ள பரீட்சார்திகள் வெற்றிடங்களின் எண்ணிக்கையை விஞ்சி இருக்கின்ற சந்தர்ப்பத்தில், அந்த வெற்றிடங்களின் எண்ணிக்கையை நிரப்புவது தொடர்பாக நடைமுறை விதிகள் கோவையின் 92 ஆவது பிரிவுக்கு அமைய, அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளைக்கு அமைய தீர்மானிக்கப்படும். நியமனத்தை அமுல்படுத்தும் திகதி சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகத்தினால் தீர்மானிக்கப்படும்.

4. **சேவை நிபந்தனைகள் :**

4.1 அரசாங்க சேவையின் நியமனங்களை கட்டுப் படுத்தும் பொதுவான நிபந்தனைகளுக்கும், தாபன விதிக்கோவை மற்றும் நிதிப் பிரமாணங்களின் ஏற்பாடுகளுக்கும், 2310/29 ஆம் இலக்க மற்றும் 2022.12.14 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட அரசாங்க சேவை கள் ஆணைக்குழுவின் நடைமுறை விதிகளுக்கும் உட்பட்டு பரீட்சார்த்தி ஒருவர் மேற்படி பதவிக்கு நியமனம் செய்யப்படுவார்.

4.2 இப்பதவி நியமனம் நிரந்தரமானது. ஓய்வூதிய சம்பளத்திற்கு உரித்துடையது. ஆகும். உங்களுக் குரிய ஓய்வூதியச் சம்பளத் திட்டம் தொடர்பாக அரசாங்கத்தினால் எதிர்காலத்தில் மேற்கொள்ளும் கொள்கைசார் தீர்மானங்களுக்கு நீங்கள் கட்டுப்படுதல் வேண்டும். மேலும், விதவைகள, அநாதை ஓய்வூதியத்திட்டத்திற்கு/ தபுதாரர் அநாதை ஓய்வூதியத் திட்டத்திற்குப் பங்களிப்புச் செய்தல் வேண்டும். அரசாங்கத்தினால் அவ்வப்போது நிர்ணயிக்கப்படுகின்றவாறு நீங்கள் அதற்கான பங்களிப்புத் தொகைகளைச் செலுத்தல் வேண்டும்.

4.3 இந்நியமனம் 03 வருட தகுதிகாண் காலத்திற்கு உட்பட்டதாகும். மருந்துக் கலவையாளர் தரம் III இன் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டு 03 வருட காலப்பகுதிக்குள் I ஆவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சையிலும், II ஆவது தரத்திற்கு நியமனம் பெற்று 03 வருட காலப் பகுதிக்குள் II ஆவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சையிலும், தரம் I இற்கு நியமனம் பெற்று 05 வருட காலப்பகுதிக்குள் III ஆவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சையிலும் சித்தியடைதல் வேண்டும்.

4.4 அரசாங்க நிருவாக சுற்றறிக்கை இலக்கம் 18/2020 இற்கமைய மற்றும் அதற்கான விளை வாய்ந்தன்மை வாய்ந்த சுற்றறிக்கைகளுக்கமைய உரிய அரசகரும மொழித் தேர்ச்சியை பூர்த்தி செய்துகொள்ளல் வேண்டும்.

4.5 தமக்கு பொறுப்பளிக்கப்படுகின்ற பதவியின் கடமைகளை குறித்த திகதியில் பொறுப்பேற்றுக் கொள்ளத் தவறும் மற்றும் / அல்லது நியமனம் செய்யப்பட்டதொரு பதவியில் அல்லது நியமனம் செய்யப்பட்ட பிரதேசமொன்றில் கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொள்வதை நிராகரிக்கின்ற விண்ணப்பதாரிகளின் நியமனத்தை இரத்துச் செய்வதற்கு சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகத்திற்கு தத்துவமுண்டு.

5. **சம்பள அளவுத்திட்டம்** :

இப்பதவிக்கு, அரசாங்க நிருவாக சுற்றறிக்கை இலக்கம் 10/2025 இற்கு அமைவாக MT - 2- 2025 சம்பள வகுதி உரித்தாகும்.

மேற்படி சம்பள வகுதிக்கு உரித்தான சம்பள அளவுத் திட்டம் பின்வருமாறாகும்.

ரூபா 50,630.00 -10 x 630 – 11 x 670 – 10 x 1,010 -10 x 1,190 – 86,300.00 (மாதாந்தம்)

(2025.03.25 ஆம் திகதிய அரசாங்க நிருவாக சுற்றறிக்கை இலக்கம் 10/2025 இன் ஏற்பாடுகளுக்கு

Gazette.lk SINCE 2014 AMBITIONS REALIZED

அமைய அதன் அட்டவணை II இல் குறிப்பிடப் பட்டுள்ளவாறு ரூபா 50,630.00 இற்கு இசைவாக ஆரம்ப சம்பள படிநிலையில் வைத்து சம்பளம் செலுத்தப்படும்.)

6. (அ) **ஆட்சேர்ப்புச் செய்வதற்கான தகைமைகள் :**

(i) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

(ii) விண்ணப்பதாரி சிறந்த தேகாரோக்கியம் உள்ளவராக இருத்தல் வேண்டும்.

(iii) சிறந்த நன்னடத்தை உடையவராகவும் இருத்தல் வேண்டும். இதனை பொலிஸ் விடுவிப்பு அறிக்கை மூலம் உறுதி செய்துகொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

(iv) நாட்டின் எப்பகுதியிலும் சேவையாற்றுவதற்கும், பதவியில் கடமைகளை நிறைவேற்றுவதற்கும் போதுமான உடல் மற்றும் உள ஆரோக்கியத்தை கொண்டவராக இருத்தல் வேண்டும்.

(v) ஆண் - ஆகக் குறைந்த உயரம் 5 அடி 4 அங்குலத்திற்கு குறையாது இருத்தல் வேண்டும் (162.5 cm)

(vi) பெண் - ஆகக் குறைந்த உயரம் 5 அடி 2 அங்குலத்திற்கு குறையாது இருத்தல் வேண்டும் (157.5 cm)

(vii) ஆண் - நெஞ்சு மூச்சு உள்வாங்காத நிலையில் 32 அங்குலத்திற்கு குறையாதவறாக இருத்தல் வேண்டும். (81.25 cm)

(viii) ஒழுக்கக்கேடு தொடர்பான குற்றமொன்று தொடர்பில் எந்தவொரு நீதிமன்றத்தாலும் குற்றவாளியாக தீர்மானிக்கப்பட்டிருப்பது இப் பதவிக்கு நியமிக்கப்படுவதற்கு ஒரு முழுமை யான தகுதியின்மையாகும்.

(ஆ) **கல்வித் தகைமைகள் :**

i. இரசாயனவியல் அடங்கலாக விஞ்ஞான பாடத்துறையில் மூன்று (03) பாடங்களில் (பொது பரீட்சை தவிர்ந்த) கல்விப் பொது தராதர (உயர்தர) பரீட்சையில் ஒரே அமர்வில் சித்தி யடைதல்.

மற்றும்

ii. சிங்களம்/தமிழ், ஆங்கில மொழி, கணிதம் விஞ்ஞானம் மற்றும் மேலும் ஒரு பாடத்திற்கு திறமைச் சித்தியுடன் ஒரே அமர்வில், ஆறு (06) பாடங்களில் கல்வி பொது தராதர (சாதாரண தர பரீட்சையில்) சித்தியடைதல்.

(இ) **தொழில்சார் தகைமைகள் :**

மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தேசிய தொழில்சார் தகைமை (NVQ) மட்டம் 06 இற்கு உரிய மருந்துக் கலவையாளர் பயிற்சி நெறியினைப் பூர்த்தி செய்து சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்.

**குறிப்பு**: போதுமான தொழில்சார் தகுதிகளைக் கொண்ட விண்ணப்பதாரிகள் இல்லாத சந்தர்ப் பங்களில், மேலே 6(ஆ) இல் குறிப்பிடப்பட்டுள்ள கல்வித்தகுதிகளைக்கொண்டவிண்ணப்பதாரிகளை பயிற்சி தரத்திற்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்டு, சுகாதார அமைச்சினால் நடாத்தப்படும் 01 வருட கால முழுநேரக் கோட்பாடு மற்றும் பயிற்சிக்கால மருந்துக் கலவையாளர் பயிற்சி நெறியில் அவர்கள் இணைக்கப்பட்டு, அப்பயிற்சியின் முடிவில் நடாத்தப்படும் பரீட்சையில் சித்தியடைந்த பின்னர் மருந்துக் கலவையாளர் தரம் III இற்கு நியமிக்கப்படுவர்.

(ஈ) **தகுதிகள் தொடர்பான கட்டுப்பாடுகள் :**

I. சமயரீதியாக துறவறம் பூண்டுள்ள எவர் ஒருவருக்கும் இப்பரீட்சைக்கு விண்ணப்பிப்ப தற்கோ தோற்றுவதற்கோ அனுமதி அளிக்கப் படமாட்டாது.

II. இப்பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்குத் தேவை யான அனைத்துத் தகுதிகளும் விண்ணப்பங்கள் கோரப்படும் முடிவு திகதியிலோ அதற்கு முன்னரோ முழுமையாகப் பூர்த்தி செய்யப் பட்டிருத்தல் வேண்டும்.

III. தரம் III இற்கு மருந்துக் கலவையாளர் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்யப்படும் வரை மேலே 06 (அ) இல் குறிப்பிடப்பட்டுள்ள தகுதிகள் செல்லுபடியாகும்.

(உ) **வயது** :

விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதி திகதியில் 18 வயதுக்குக் குறையாதவறாகவும், 35 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

(அதற்கமைய, 2008.10.25 ஆம் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் மற்றும் 1991.10.25 ஆம் திகதி அல்லது அதற்குப் பின்னரான பிறந்த திகதியைக் கொண்டுள்ளவர்கள் மாத்திரம் இதற்கு விண்ணப்பிக்க தகைமை பெறுவார்கள்.)

7. **பரீட்சைக் கட்டணம் :**

பரீட்சைக் கட்டணம் ரூபா 600.00 ஆகும். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு முன்னர், சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகத்தின் உத்தியோகபூர்வ கணக்கு இலக்கமான இலங்கை வங்கி கிளையின் பொரளை சிறப்பு தரக் கிளையின்; 7041491 ஆம் இலக்க கணக்கிற்கு, நாட்டில் அமைந்துள்ள எந்தவொரு இலங்கை வங்கி கிளையிலும் பணம் செலுத்தி விண்ணப்பத்தாரியின்

Gazette.lk SINCE 2014 AMBITIONS REALIZED

பெயரில் பெற்றுக்கொள்ளும் பற்றுச்சீட்டை, அதன் ஒரு விளிம்பை மாத்திரம் விண்ணப்பப் படிவத்தின் உரிய இடத்தில் ஒட்டுதல் வேண்டும். எக் காரணம் கொண்டும் பரீட்சைக் கட்டணம் திரும்பச் செலுத்தப்படமாட்டாது அல்லது வேறு பரீட்சைக் கட்டணம் மீள செலுத்தப்படுதலோ வேறு பரீட்சைக்கு மாற்றப்படுதலோ மேற்கொள்ளப்படமாட்டாது. பற்றுச் சீட்டின் நிழற்படப் பிரதி ஒன்றை தம்வசம் வைத்துக் கொள்ளுதல் பயனுள்ளதாக இருக்கும்.

8. **விண்ணப்பிக்கும் முறை :**

8.1 விண்ணப்பப்படிவமானது இத்துடன் சமர்ப்பிக்கப் பட்டுள்ள மாதிரிபடிவத்திற்கு அமைவானதாக இருத்தல் வேண்டும். அது காகிதத்தின் இரு பக்கங்களையும் பயன்படுத்தி 8.27" x 11.69" (A4) அளவுடைய காகிதத்தில் தயாரிக்கப்பட்டு, விண்ணப்பத்தாரரினால் தனது சொந்தக் கையெழுத்தில் பூர்த்தி செய்யப்படுதல் வேண்டும். இதற்காகக் கணினி மூலம் தயாரிக்கப்பட்ட அல்லது தட்டச்சு செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களையும் பயன்படுத்த முடியும். தலைப்பு இலக்கம் 01 முதல் 10 வரை முதலாம் பக்கத்திலும், 11 முதல் 15 வரை இரண்டாம் பக்கத்திலும், 16 முதல் 18 வரை மூன்றாம் பதக்கத்திலும் அமையுமாறு தயாரிக்கப்படுதல் வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு இணங்க தயாரிக்கப்படாத விண்ணப்பங்களும் மற்றும் முழுமையற்ற அடிப்படையில் தகவல்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ள விண்ணப்பங்களும் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். (விண்ணப்பப் படிவத்தின் நிழற்படப் பிரதியொன்றைத் தம்வசம் வைத்திருப்பது பயனுடையதாக இருக்கும்.) மேலும், பூர்த்தி செய்யப்பட்டுள்ள விண்ணப்பப் படிவமானது பரீட்சை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு இணங்குகிறதா என்பதை விண்ணப்பத்தாரர் சரிபார்த்தல் வேண்டும். அவ்வாறில்லாத விண்ணப்பங்கள் நிராகரிக் கப்படும்.

8.2 விண்ணப்பப் படிவம் பரீட்சார்த்தி தோற்றுவதற்கு கருதுகின்ற மொழிமூலத்திலேயே பூர்த்தி செய்து சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

8.3 பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2026.10.25 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் "சிறைச் சாலைகள் ஆணையாளர் நாயகம், நிறுவனக் கிளை, சிறைச்சாலைகள் தலைமையகம், இல. 150, பேஸ்லைன் வீதி, கொழும்பு 09" எனும் முகவரிக்குக் பதிவுத் தபாலில் அனுப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பம் அடங்கிய கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "சிறைச்சாலைகள் திணைக்களத்தின் மருந்துக் கலவையாளர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2026" எனக் குறிப்பிடுதல் வேண்டும். விண்ணப்பத்தைத் தயாரிக்கும் போது, அதன் தலைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சையின் பெயரைச் சிங்கள விண்ணப்பங்களில் சிங்கள மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும், தமிழ் விண்ணப்பங்களில் தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் குறிப்பிடுவது கட்டாயமாகும்.

8.4 விண்ணப்பப்பத்திரத்தில் விண்ணப்பதாரின் கையொப்பம் அரசாங்கப் பாடசாலையொன்றின் அதிபர், சமாதான நீதவான், சத்தியப்பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, பிரசித்திபெற்ற நொத்தாரிசு, முப்படைகளின் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர், பொலிஸ் சேவையின் வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்ட உத்தியோகத்தர் ஒருவர் அல்லது அரசாங்கத்தின் நிரந்தரப் பதவியையுடைய பதவி நிலை தரத்திலான உத்தியோகத்தர் ஒருவர் அல்லது அரசாங்கத்தின்/ மாகாண அரசாங்க சேவையில் கடமையாற்றுபவராயின் நிறுவனத் தலைவரினால் சான்றொப்பமிடப்பட்டிருத்தல் வேண்டும். தற்போது அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர்கள் தமது விண்ணப்பங்களை, விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் முடிவுத் திகதிக்கு முன்னர் தமது திணைக்களத் தலைவர்கள் ஊடாகச் சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகத்திற்குச் சமர்ப்பித்தல் வேண்டும். இத்தகைய உத்தியோகத்தர் ஒருவர் தெரிவுசெய்யப்பட்டால், அவரைத் தற்போதைய நிறுவனத்திலிருந்து விடுவிக்க முடியும் என நிறுவனத் தலைவர் உறுதிப் படுத்தியிருத்தல் வேண்டும்.

8.5 தேவையான தகுதிகள் இல்லாத விண்ணப் பதாரிகளின் விண்ணப்பங்கள், கோரப்பட்டுள்ள தகுதிகளை உறுதிப்படுத்தும் சான்றிதழ்களின் நிழற்படப் பிரதிகளை இணைத்து சமர்ப்பிக்கப் படாத விண்ணப்பங்கள், குறிப்பிட்ட திகதிக்குள் பரீட்சைக் கட்டணங்களை செலுத்தாத மற்றும் முழுமைபெறாத விண்ணப்பங்கள் மற்றும் தாமதமாகி சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பப் படிவங்களை முறைப்படி பூர்த்தி செய்யாமையினால் ஏற்படும் இழப்பினை விண்ணப்பதாரர்களே ஏற்றுக்கொள்ள வேண்டும். தபாலில் அனுப்பும்போது விண்ணப்பப் படிவம் காணாமற்போதல் அல்லது தாமதமாதல் தொடர்பாக எவ்வித முறைப்பாடுகளும் கவனத்திற் கொள்ளப்படமாட்டாது.

8.6. விண்ணப்பப்படிவங்கள் கிடைக்கப்பெற்றமை தொடர்பாக அறிவிக்கப்படமாட்டாது. விண்ணப்ப தாரர்களுக்கு அனுமதிச்சீட்டுகள் விநியோகிக்கப் பட்டவுடனே அது தொடர்பான அறிவித்தல் ஒன்று பத்திரிகைகளில் அல்லது சிறைச்சாலைகள் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத் தளத்தில் பிரசுரிக்கப்படும். அறிவித்தல் பிரசுரிக்கப்

SINCE 2014 Gazette.lk AMBITIONS REALIZED

பட்டு 2 அல்லது 3 நாட்கள் கழிந்த பின்னரும் அனுமதிச்சீட்டு கிடைக்கப்பெறாவிடின், விளம்பரத்தில் குறிப்பிட்டுள்ளவாறு அது தொடர்பாக இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்திற்கு அறியத்தரல் வேண்டும். அவ்வாறு விசாரிக்கும் போது, உங்களது முழுப் பெயர், முகவரி, தேசிய ஆளடையாள அட்டையின் இலக்கம் மற்றும் விண்ணபித்த பரீட்சையின் பெயர் என்பன குறிப்பிடப்படல் வேண்டும். நீங்கள் கொழும்புக்கு வெளியேயுள்ள பிரதேசத்தைச் சேர்ந்த விண்ணப்பதாரராயின், உங்களது மேற்கண்ட விபரங்கள் அடங்கிய கடிதமொன்றை, பரீட்சை அனுமதிச்சீட்டின் பிரதியை உங்களுக்கு அனுப்புவதற்காக உங்களது தொலைநகல் (Fax) இலக்கத்தையும் குறிப்பிட்டு, குறித்த விளம்பரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தொலைநகல் இலக்கத்திற்கு அனுப்பி விசாரிப்பது பொருத்தமானதாகும் இதன் போது தேவையான விபரங்களை உறுதிப் படுத்துவதற்காக, உங்களிடம் உள்ள விண்ணப்பப் படிவத்தின் பிரதி, பரீட்சைக் கட்டணத்திற்கான பற்றுச்சீட்டின் பிரதி மற்றும் விண்ணப்பப் படிவத்தை தபாலில் அனுப்பும்போது பெறப்பட்ட பதிவுசெய்தமைக்கான இரசீது என்பவற்றைத் தயார் நிலையில் வைத்திருப்பது மிகவும் பயனுள்ளதாக அமையும்.

9. **பரீட்சைக்குத் தோற்றல் :**

(அ) விண்ணபதாரர் ஒருவர் தனக்கு ஒதுக்கப்பட்ட பரீட்சை மண்டபத்திலேயே பரீட்சைக்குத் தோற்ற வேண்டும். ஒவ்வொரு விண்ணப்பதாரரும் பரீட்சை அனுமதிச்சீட்டில் தனது கையொப்பத்தை சான்றுப் படுத்தி, முதன்முறையாக அம்மண்டபத்தில் தோற்றும் நாளில் அதனை மண்டபப் பொறுப் பதிகாரியிடம் ஒப்படைத்தல் வேண்டும். அனுமதிச் சீட்டு இல்லாமல் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதிக்கப்படமாட்டாது. ஒவ்வொரு விண்ணப் பதாரரும் பின்பற்ற வேண்டிய விதி முறைகள் இந்த வர்த்தமானிப் பத்திரிகையின் ஆரம்பத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளன. பரீட்சை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுதல் தொடர்பில் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் விதிமுறைகளுக்கு பரீட்சார்த்திகள் கட்டுப்பட வேண்டும். அவ்விதிமுறைகளை மீறினால், பரீட் சார்த்திகளின் பரீட்சைப் பெறுபேறுகளை இடை நிறுத்துவதற்கோ, இரத்துச் செய்வதற்கோ அல்லது நியமனங்களை வழங்குவதற்காகக் கருத்திற் கொள்ளா திருப்பதற்கோ சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் தீர்மானிப்பார்.

(ஆ) விண்ணபதாரர் ஒருவருக்கு பரீட்சை அனுமதிச்சீட்டு விநியோகிக்கப்படுவதானது, அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அல்லது பதவிகளுக்கான தகுதிகளைப் பூர்த்தி செய்துள்ளார் என்பதற்கான ஏற்றுக் கொள்ளலாகக் கருதப்பட மாட்டாது.

10. **அபேட்சகரின் ஆளடையாளம் :**

பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்தில் தாம் தோற்றும் ஒவ்வொரு பாடத்திற்கும் பரீட்சை மண்டப பொறுப்பாளர் திருப்தியடையும் வகையில் தமது ஆளடையாளத்தை உறுதி செய்தல் வேண்டும். அதற்காக பின்வரும் யாதாயினுமொரு ஆவணம் ஏற்றுக் கொள்ளப்படும்.

I. தேசிய ஆளடையாள அட்டை;

II. செல்லுபடியான வெளிநாட்டுக் கடவுச்சீட்டு;

III. செல்லுபடியான இலங்கை சாரதி அனுமதிப்பத்திரம்.

11. **பொய்யான தகவல்களை வழங்குவதற்கான தண்டனை** :

விண்ணப்பப்படிவங்களை நிரப்பும் போது மிகவும் கவனமாக சரியான தகவல்களை வழங்க வேண்டும். இந்தப் பரீட்சையின் சட்டங்கள், விதிகளுக்கு அமைய யாராயினும் அபேட்சகர் ஒருவர் தகுதியற்றவர் என்பது வெளிப்படுத்தப்படும் பட்சத்தில், பரீட்சைக்கு முன்னர் அல்லது பரீட்சை நடைபெறும் போது அல்லது பரீட்சைக்குப் பின்னர் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவரின் அபேட்சகர் அந்தஸ்து இரத்துச் செய்யப்பட முடியும். விண்ணப்பதாரியினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஏதெனுமொரு விடயம் உண்மைக்கு முரணானது என்பதை அறிந்துகொண்டே சமர்ப்பித்துள்ளமை தெரியவரும் பட்சத்தில், அல்லது யாதாயினுமொரு முக்கியமான விடயம் அவரினால் வேண்டுமென்றே மறைக்கப்பட்டிருப்பின் அவரின் நியமனத்தை இரத்துச் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

12. **பரீட்சை முறை மற்றும் பரீட்சை மொழிமூலம் :**

(அ) பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடாத்தப்படும்.

(ஆ) தமது விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடும் பரீட் சைக்கான மொழிமூலத்தை பின்னர் மாற்றம் செய்ய அபேட்சகருக்கு இடமளிக்கப்பட மாட்டாது.

13. **ஆட்சேர்ப்புச் செய்யும் முறை :**

(I) **எழுத்து மூலமான பரீட்சை :**

விண்ணப்பத்தாரிகளால் பின்வரும் அனைத்து வினாத்தாள்கள் பொருட்டும் தோன்றுதல் வேண்டும்.

| *பாடங்கள்* | *ஆகக்கூடிய புள்ளிகள்* | *சித்தியடைய வேண்டிய புள்ளிகள்* |
|---|---|---|
| (01) நுண் அறிவு | 100% | 40% |
| (02) விடயம்சார் பொது அறிவு | 100% | 40% |

(II) **பாடவிதானம் :**

| *வினாத்தாளின் பெயர்* | *பாடவிதானம்* |
|---|---|
| (01) நுண் அறிவு | காலம்: 01 மணித்தியாலம். மொத்தப் புள்ளிகள்: 100. தர்க்கரீதியான சிந்தனைத் திறன், பகுப்பாய்வு சிந்தனை நிலைமைகள், தீர்மானமெடுக்கும் ஆற்றல் மற்றும் கணிதத்திறன் என்பவற்றை அளவிடுவதற்காக 50 பல் தேர்வு வினாக்களைக் கொண்ட வினாத்தாள் ஆகும். |
| (02) விடயம்சார் பொது அறிவு | காலம்: 01 மணித்தியாலம். மொத்தப் புள்ளிகள்: 100. விடயத்திற்கு ஏற்புயைடதான தொழில்நுட்ப அறிவு, தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த காலத்திற்குப் பொருத்தமான விடயங்கள், அறிவியல் மற்றும் தொழிற்துறை அபிவிருத்தி தொடர்பான அறிவைப் பரிசோதிப்பதற்காகத் தயாரிக்கப்பட்ட வினாத்தாள் ஆகும். |

(III) **பொது நேர்முகப்பரீட்சை** :- புள்ளிகள் வழங்கப்படமாட்டாது. உடற்தகுதி மற்றும் ஏனைய அடிப்படைத் தகுதிகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளனவா எனப் பரிசோதிக்கப்படும். சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகத்தினால் நேர்முகப் பரீட்சைச் சபையொன்று நியமிக்கப்படும்.

14. மேற்குறிப்பிடப்பட்ட எழுத்துப் பரீட்சையின் பாடங்களைக் கொண்ட 02 வினாத்தாள்களின் மொத்தப் புள்ளிகளின் அடிப்படையில் காட்டப்படும் திறமையின் ஒழுங்குமுறைக்கு அமைவாக இப்பதவிக்காக நிலவும் வெற்றிடங்கள் நிரப்பப்படும்.

15. குறிப்பிட்ட மாதிரிப் படிவத்திற்கு அமைய விண்ணப்பப் படிவம் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். அதற்கு அமைவாக இல்லாத மற்றும் சரியாகப் பூர்த்தி செய்யப்படாத முழுமை பெறாத நிலையிலுள்ள விண்ணப்பப் படிவங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப் படும். உரிய வகையில் விண்ணப்பப் படிவங்களை பூர்த்தி செய்யாமையினால் ஏற்படும் இழப்பினை விண்ணப் பதாரர்களே ஏற்றுக்கொள்ள வேண்டும்.

16. அவ்விண்ணப்பதாரர்கள் எழுத்துப் பரீட்சையில் பெற்ற மொத்தப் புள்ளிகளின் அடிப்படையில் முறையே அதிக புள்ளிகளைப் பெற்ற விண்ணப்பதாரர்கள் மருந்துக் கலவையாளர் பதவிக்காக ஆட்சேர்ப்பு செய்யப்படுவர்.

**குறிப்பு** :- நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுவதானது நியமனம் வழங்குவதற்கான தகைமைகளை பூர்த்தி செய்வதாகக் கருதப்பட மாட்டாது.

- ❖ யாதாயினும் எண்ணிக்கையிலான வெற்றிடங்களை அல்லது சகல வெற்றிடங்களையும் நிரப்பாதிருப்பதற்கு நியமன அதிகாரிக்கு தத்துவமுண்டு.

- ❖ உரிய வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு அமைவாக ஆட்சேர்ப்புச் செய்யப்படுவதற்கு போதியளவிலான பெண் விண்ணப்பத்தாரிகள் தெரிவு செய்யப்படாவிடின், எஞ்சிய வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு ஆண் விண்ணப்பத்தாரிகளைக் கொண்டு நிரப்பப்படும்.

- ❖ இதில் குறிப்பிடப்படாத ஏதெனுமொரு விடயம் இருப்பின், அது பற்றி சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் தீர்மானம் மேற்கொள்வார். சகல விண்ணப்பதாரிகளும் இந்த வர்த்தமானப் பத்திரிகையில் குறிப்பிடப்பட்டுள்ள பொதுவான பரீட்சை சட்டங்கள், விதிகளுக்கு அமைய நடவடிக்கை மேற்கொள்வதற்குக் கட்டுப்பட்டுள்ளார்கள்.

- ❖ இந்த அறிவித்தலின் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளிலான உரைகளுக்கு இடையே ஏதேனும் இணங்காமை அல்லது ஒவ்வாமை எழும் பட்சத்தில், சிங்கள மொழிமூலமான அறிவித்தல் சரியானதெனக் கருதி நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும்.

ஆர்.பிரசாத் ஹேமந்த குமார,
சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் (க.நி).

சிறைச்சாலைகள் தலைமையகம்,
இலக்கம் 150, பேஸ்லையின் வீதி,
கொழும்பு 09,
2026 செப்தெம்பர்.

Gazette.lk SINCE 2014 AMBITIONS REALIZED

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கை சிறைச்சாலைகள் திணைக்களத்தின் முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்பவியல் தொகுதி - 2 சேவை வகுதி மருந்துக் கலவையாளர் தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2026**

**The Open Competitive Examination for Recruitment to the Post of Dispenser- Grade III in Management Assistant Technical Segment 2 at the Department of Prisons -2026**

பரீட்சைக்குத் தோற்றும் மொழிமூலம் முன்பாக ✓ அடையாளத்தை இடவும்.

சிங்களம் ☐ தமிழ் ☐ ஆங்கிலம் ☐

01. i. முழுப் பெயர் :..............................................................................

ii. முதலெழுத்துக்களுடன் பெயர் (தமிழ்) : ..............................................................................

iii. முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கிலத்தில்) :..............................................................................

02. i. நிரந்தர முகவரி (தமிழ்) : ..............................................................................

ii. நிரந்தர முகவரி (ஆங்கிலத்தில்) :..............................................................................

03. தேசிய ஆளடையாள அட்டையின் இலக்கம் : ..............................................................................

04. i. தொலைபேசி இலக்கம் : கைப்பேசி ............................ நிலையான ...........................

ii. மின்அஞ்சல் முகவரி : ..............................................................................

05. வதிவிட முகவரி

i. மாவட்டம் :............................................

ii. பொலிஸ் நிலையம் : ...........................................

06. பிறந்த திகதி : ஆண்டு : ☐☐☐☐ மாதம் : ☐☐ திகதி : ☐☐

07. 2026.10.25 ஆம் திகதியில் வயது : வருடங்கள் : ☐☐ மாதங்கள் : ☐☐ நாட்கள் : ☐☐

08. பாலினம் : ஆண்: ☐ பெண் : ☐

09. பிரசாவுரிமை (பரம்பரை மூலமா/பதிவு செய்வதன் மூலமா என்பது) : .........................

10. திருமணமானவர்/திருமணமாகாதவரா : ☐ திருமணமானவர் -1 திருமணமாகாதவர் - 2

( உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதுக.)

Gazette.lk SINCE 2014 AMBITIONS REALIZED

11. கல்வித் தகைமைகள் (தெளிவாக குறிப்பிடுதல் வேண்டும்)

க.பொ.த. (சா.த.) பரீட்சை - பரீட்சை பெறுபேறுகள் (சான்றிதழ்களின் நிழற்பட பிரதி இணைக்கவும்)

பரீட்சை சுட்டிலக்கம் : ஆண்டு :

| *தொடர் இலக்கம்* | *பாடம்* | *சித்தி* |
|---|---|---|
| 01 | | |
| 02 | | |
| 03 | | |
| 04 | | |
| 05 | | |
| 06 | | |
| 07 | | |
| 08 | | |
| 09 | | |
| 10 | | |

12. க.பொ.த. (உ.த.) பரீட்சை - பரீட்சை பெறுபேறுகள் (சான்றிதழ்களின் நிழற்பட பிரதி இணைக்கவும்)

பரீட்சை சுட்டிலக்கம் : ஆண்டு :

| *தொடர் இலக்கம்* | *பாடம்* | *சித்தி* |
|---|---|---|
| 01 | | |
| 02 | | |
| 03 | | |

13. i. அனுபவம் (ஆண்டுகள்) :............................................................................

ii. சிறப்பு தகைமை :.........................................................................

14. தொழில்சார் தகைமைகள் : ..............................................................................................................................

(சான்றிதழ்களின் நிழற்பட பிரதி இணைக்கவும்)

**கவனிக்கவும்** : தகைமைகளை உறுதிப்படுத்தும் சான்றிதழ்களின் நிழற்பட பிரதி ஒன்று என்ற வகையில் கட்டாயமாக இணைக்கவும். சான்றிதழ்களின் நிழற்பட பிரதிகள் இணைக்காது சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.

15. உடற் தகுதிகள்

I. உயரம் : அடி: ...............அங்குலம்: .............

II. நெஞ்சு மூச்சு உள்வாங்காத நிலையில்: அங்குலம் :................. (ஆண் விண்ணப்பத்தாரிகளுக்காக)

16. யாதாயினுமொரு தவறு தொடர்பில் தாங்கள் நீதிமன்றத்தில் குற்றவாளியாக்கப்பட்டிருப்பின் அது பற்றிய சகல விபரங்கள்:-

.....................................................................................................................................................................

17. பரீட்சைக் கட்டணம் செலுத்தல்:

| *செலுத்திய பணத்தொகை* | *செலுத்திய வங்கி கிளை* | *செலுத்திய திகதி* | *பற்றுச்சீட்டு இலக்கம்* |
|---|---|---|---|
| | | | |

பற்றுச்சீட்டினை இங்கு ஒட்டவும்.

Gazette.lk SINCE 2014 AMBITIONS REALIZED

18. விண்ணப்பத்தாரியின் உறுதியுரை :-

இவ்வின்னப்பப் படிவத்தில் என்னால் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானவை என்றும் துல்லியமானவை என்றும் இத்தால் சான்றளிக்கின்றேன். என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் பொய்யானவை அல்லது தவறானவை எனப் பரீட்சை நடாத்தப்படுவதற்கு முன்னர் தெரியவந்தால், நான் பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தகுதியற்றவராவேன் என்பதையும், நியமனத் திகதியின் பின்னர் வெளிப்பட்டால் எவ்வித இழப்பீடுமின்றி எனது நியமனம் இரத்துச் செய்யப்படும் என்பதையும் நன்கு அறிவேன்.

திகதி: .......................................... ..............................................

விண்ணப்பதாரியின் கையொப்பம்

19. கையொப்பத்தை சான்றுப்படுத்தல் :

இந்த விண்ணப்பப்படிவத்தை சமர்ப்பிக்கின்ற திரு./திருமதி/செல்வி………………………………………………………… என்பவரை நான் தனிப்பட்ட வகையில் அறிவேன் என்றும், அவர் என் முன்னிலையில் ………… ஆம் திகதி தமது கையொப்பத்தை பதிவு செய்தார் என்றும், உரிய பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டு, அதற்கான பற்றுச்சீட்டு ஒட்டப் பட்டுள்ளது என்றும் சான்றுபடுத்துகின்றேன்.

…………………………………………………………

சான்றுபடுத்துபவரின் கையொப்பம்

திகதி :……………………………………………………

சான்றுபடுத்துபவரின் முழுப் பெயர் :…………………………………………………….............................................................
பதவி :……………………………………………………...........................................................................................................
முகவரி :…………………………………………………….......................................................................................................
(தயவு செய்து பதவி முத்திரை இடுக.)

20. அரசாங்க/மாகாண அரசாங்க சேவையில் ஈடுபட்டுள்ள விண்ணப்பதாரிகளுக்கு மாத்திரம்:

திரு./திருமதி/செல்வி ……………………………………………………… என்பவர் இந்த நிறுவனத்தில் ……………………. சேவையாற்றி வருகின்றார் என்றும், அவரின் கடமை மற்றும் நடத்தை திருப்திகரமானது என்றும், அவருக்கு ஒழுக்காற்று விசாரணை / அவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது/எடுக்கப்படவில்லை என்றும், அவர் இப்பதவிக்குத் தெரிவு செய்யப்படும் பட்சத்தில் விண்ணப்பத்தாரி தற்போது வகிக்கும் பதவியிலிருந்து விடுவிக்க முடியும் / முடியாது என்றும் தெரிவிக்கின்றேன்.

திகதி:………… …………………………………………………………

திணைக்களத் /நிறுவனத் தலைவரின் கையொப்பம்

10 - 392

SINCE 2014 Gazette.lk AMBITIONS REALIZED

## கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு

## திறந்த அடிப்படையில் கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சின் பொதுக்கல்விப் பிரிவின் முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பமல்லாத) தொகுதி - 02 சேவை வகையின் உதவி மாணவர் விடுதிக் காப்பாளர் தரம் III இற்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான போட்டிப் பரீட்சை - 2026

01. விண்ணப்பப்படிவம் இலங்கைப் பரீட்சைத் திணைக் களத்தின் www.doenets.lk எனும் இணையத் தளத்தில் "Our Service" என்பதன் கீழ் உள்ள "Online Applications – Recruitment Exams/E.B. Exams" ஊடாக வெளியிடப்பட்டுள்ளதுடன், விண்ணப்பப் படிவங்கள் நிகழ்நிலை (Online) முறையில் மட்டுமே சமர்ப்பிக்க முடியும். நிகழ்நிலை விண்ணப்பப் படிவங்களை ஏற்றுக்கொள்ளும் பணிகள் 2026, ஒற்றோபர் மாதம் 05 ஆந் திகதி மு. ப. 9.00 மணிக்கு ஆரம்பமாவதுடன், 2026, நவெம்பர் மாதம் 02 ஆம் திகதி பி.ப. 9.00 மணியுடன் நிறைவடையும். விண்ணப்பப்படிவத்தை நிகழ்நிலை ஊடாக சமர்ப்பித்த பின்னர், அதனைப் பதிவிறக்கம் செய்து, அச்சிடப்பட்ட பிரதியில் உரிய பகுதிகளை கையெழுத்தால் பூர்த்தி செய்து, விண்ணப்பதாரரின் கையொப்பத்தை உறுதிப்படுத்தி, விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திற்குக் கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்பிவைக்கப்பட வேண்டும்.

    தற்போது அரசாங்க / மாகாண அரசாங்க சேவையில் உள்ள உத்தியோகத்தர்கள் விண்ணப்பப்படிவத்தின் பிரதியொன்றைத் தமது தனிப்பட்ட கோவையில் சேர்ப்பதற்காக நிறுவனத் தலைவர்களிடம் ஒப்படைக்க வேண்டும் என்பதுடன், நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும் சந்தர்ப்பத்தில் நிறுவனத் தலைவரால் உறுதிப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவத்தின் பிரதி மற்றும் சேவை உறுதிப்படுத்தல் கடிதம் என்பவற்றைச் சமர்ப்பிக்க வேண்டும்.

02. பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும் எழுத்து மூலப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில், திறமையின் கீழ் தகுதி பெற்ற விண்ணப்பதாரர்கள், தகைமை மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சையின் பின்னர் உதவி மாணவர் விடுதிக் காப்பாளர் தரம் III பதவிகளுக்காகத் தெரிவு செய்யப்படுவர்.

03. நியமிக்கப்படும் எண்ணிக்கை மற்றும் நியமனங்கள் நடைமுறைப்படுத்தப்படும் திகதி என்பன அமைச்சின் செயலாளரால் தீர்மானிக்கப்படும்.

    (அ) அரசாங்க சேவையின் நியமனங்களைக் கட்டுப் படுத்தும் பொதுவான நிபந்தனைகளுக்கும், கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சின் பொதுக் கல்விப் பிரிவின் முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பமல்லாத) தொகுதி - 02 சேவை வகைக்கான ஆட்சேர்ப்பு நடைமுறைக்கும் மற்றும் 2022.12.14 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானிப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகளுக்கும் உட்பட்டுத் தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரர் ஒருவர் உதவி மாணவர் விடுதிக் காப்பாளர் தரம் III பதவிக்கு நியமிக்கப்படுவார்.

    (ஆ) நியமனத்திற்காகத் தெரிவு செய்யப்பட்டால், முதலாம் நியமனம் பெறப்பட்ட சேவை நிலையத்தில் குறைந்தபட்சம் மூன்று (03) ஆண்டுகள் கட்டாயமாகச் சேவையாற்ற வேண்டும். எனினும், நியமன அதிகாரியினால் தீர்மானிக்கப்படும் ஏதேனும் விசேட காரணங்களின் அடிப்படையில், அக்காலம் நிறைவடைவதற்கு முன்னர் உத்தியோகத்தர் ஒருவரை இடமாற்றம் செய்ய வேண்டியேற்படின், நியமன அதிகாரிக்கு அதற்கான அதிகாரம் உள்ளது.

    (இ) இந்நியமனம் 03 ஆண்டுகள் தகுதிகாண் காலத்திற்கு உட்பட்டதாகும். முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பமல்லாத) தொகுதி - 02 சேவை வகையின் ஆட்சேர்ப்பு நடைமுறையில் குறிப்பிட்டுள்ளவாறு, ஆட்சேர்ப்பு செய்யப்பட்டு மூன்று (03) ஆண்டுகளுக்குள் முதலாம் வினைத்திறன்காண் தடைத்தாண்டல் பரீட்சையில் சித்தியடைய வேண்டும்.

    (ஈ) நியமனத்திற்குத் தெரிவுசெய்யப்பட்டால், தகுதி பெற்ற மொழி மூலத்திற்கமைய, 2020.10.16 ஆம் திகதிய பொது நிருவாகசுற்றுநிருப இலக்கம் 18/2020 மற்றும் அதனுடன் சார்ந்த சுற்றறிக்கைகளில் குறிப்பிட்டுள்ள ஏற்பாடுகளுக்கமைய, தாங்கள் உரியவாறு அரசாங்க கரும மொழித் தேர்ச்சியைப் பூர்த்தி செய்ய வேண்டும்.

04. 2025.03.25 ஆம் திகதியுடைய 10/2025 ஆம் இலக்க பொது நிருவாக சுற்றறிக்கையின் MN 01-2025 என்ற சம்பளக் குறியீடு இப்பதவிக்கு உரித்தாவதுடன், அதற்குரிய சம்பள அளவுத்திட்டம் ரூபா 45,230.00 - 10x540 - 11x630 - 10x890 - 10x1,190 - ரூபா 78,360.00 ஆகும். அச்சம்பளம் தங்களுக்கு 2027.01.01 ஆம் திகதி முதல் உரித்தாகும். நியமனம் நடைமுறைப்படுத்தப்படும் திகதியிலிருந்து இச்சுற்றறிக்கையின் அட்டவணை III இன் ஏற்பாடுகளுக்கமைய தங்களுக்குச் சம்பளம் வழங்கப்படும்.

05. இந்நியமனம் ஓய்வூதிய உரிமையுடையது. மேலும், தாங்கள் விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு/ தபுதாரர், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்குப் பங்களிப்புச செய்ய வேண்டும். அரசாங்கத்தினால் அவ்வப்போது நிர்ணயிக்கப்படும் விதத்தில் தாங்கள் அதற்காகப் பங்களிப்புப் பணத்தைச் செலுத்த வேண்டும்.

Gazette.lk SINCE 2014 AMBITIONS REALIZED

06. **பதவிக்குரிய கடமைப் பொறுப்புகள்:**

I. விடுதி மாணவர்களின் ஒழுக்கம், பாதுகாப்பு, நலன்புரி மற்றும் உணவு வழங்கல் ஆகிய நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்லல் மற்றும் அதிநடவடிக்கைகளை நிறைவேற்றுவதில் மாணவர் விடுதிக் காப்பாளருக்கு உதவியளித்தலும், விடுதி மாணவ மாணவிகளின் நலனோம்பல், விடுதி மாணவ மாணவிகளின் காப்பாளராக செயற்படுதல், ஒழுக்கத்தைப் பேணுதல், உணவுப் பொருட்களைக் கொள்வனவு செய்வதற்குரிய புத்தகங்கள் மற்றும் ஆவணங்களைப் பேணுதல், உணவுப் பொருட்களைக் கொள்வனவு செய்தல், பாதுகாத்தல், சமையவறைக்கு விடுவிப்பது தொடர்பான நடவடிக்கைகள், உணவு தயாரித்தல் குறித்தும் பரிசிவித்தல், சமையலறை உபகரணங்களின் தூய்மை, விடுதியைத் தூய்மையாக வைப்பதற்கு ஏற்பாடுகளைச் செய்தல், விடுதி மாணவர்களின் பாதுகாப்பு, நோயுற்ற மாணவர்கள் தொடர்பான நடவடிக்கைகள், அரசாங்கத்திற்குரிய சொத்துக்கள் மற்றும் மாணவர்களுக்குரிய சொத்துக்களைப் பாதுகாப்பது தொடர்பான நடவடிக்கைகள், தூய்மையைப் பேணுவதற்குரிய நடவடிக்கைகள், நோயுற்ற மாணவர்களைக் கண்டறிந்து கவனித்தல், உணவுப் பொருட்களை ஆயத்தம் செய்வது தொடர்பான நடவடிக்கைகள், உணவு உண்ணும் வேளையில் மேற்பார்வை நடவடிக்கைகள் விடுதிகளில் நீர், மின்சாரம் என்பவற்றை முறைப்படி வழங்குவதற்குரிய நடவடிக்கைகள், விடுதியில் தங்கியிருப்பவர்கள் விடுதியை விட்டு வெளியேறுதல் மற்றும் வருகை தருதல் தொடர்பான கடமைகள்;

II. பதவிக்கு அமைவாக நிறுவனத் தலைவர்களால் ஒப்படைக்கப்படும் ஏனைய கடமைகள்.

07. **தகைமைகள்:**

உதவி மாணவர் விடுதிக் காப்பாளர் தரம் III இற்கு ஆட்சேர்ப்பு செய்யப்படுவதற்குப் பின்வரும் தகைமைகள் உரித்தாகும்:

(அ) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

(ஆ) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று வயது 25 இற்கு குறையாமலும் 35 இற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

(இ) நற்பண்பு மிக்கவராக இருத்தல் வேண்டும்.

(ஈ) ஒவ்வொரு விண்ணப்பதாரரும் இலங்கையில் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்கும், பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்கும் போதுமான உடற்தகுதி மற்றும் மனத்தகுதிநிலைக் கொண்டிருந்தல் வேண்டும்.

(உ) பின்வரும் கல்வித் தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்:

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சையில் குறைந்தபட்சம் ஒரு பாடத்திலேனும் (01) (பொது அறிவுப் பரீட்சை மற்றும் சாதாரண ஆங்கிலம் தவிர்ந்து) சித்தியடைந்திருத்தல்.

மற்றும்

சிங்கள/தமிழ்/ஆங்கில மொழி, கணிதம் மற்றும் மேலும் இரு பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஒரே அமர்வில் ஆறு (06) பாடங்களில் கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சையில் சித்தியடைத்திருத்தல்.

குறிப்பு-

I. கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சையில் திறமைச் சித்தி பெற்றிருக்க வேண்டிய மொழியானது, விண்ணப்பதாரர் இப்போட்டிப் பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலமாகும்.

II. கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர) மற்றும் கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சையில் திறமைச் சித்தி அல்லது வேறு உள்நாட்டு அல்லது வெளிநாட்டு கல்வி நிறுவனங்களால் நடாத்தப்படும் பரீட்சைக்குத் தோற்றிப் பெற்றுள்ள தகைமையினை நியமனம் வழங்குவதற்காகப் பயன்படுத்திக் கொள்வது தொடர்பான இறுதித் தீர்மானம், உரிய நிறுவனங்கள் மற்றும் பரீட்சை ஆணையாளர் நாயகத்திடமிருந்து உறுதிப்படுத்திய பின்னர் அமைச்சின் செயலாளரால் எடுக்கப்படும்.

கவனத்தில் கொள்க :

ஒவ்வொரு விண்ணப்பதாரரும் பதவிக்குரிய அனைத்துக் தகைமைகளையும் விண்ணப் பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ பூர்த்தி செய்திருப்பது கட்டாயமாகும்.

08. **பரீட்சை நடைமுறை :**

இப்பரீட்சை சிங்களம், தமிழ் ஆகிய மொழிகளில் நடாத்தப்படும். விண்ணப்பதாரர் ஒருவர் தனக்குரிய ஒரு மொழி மூலத்தைத் தெரிவுசெய்தல் வேண்டும் என்பதுடன், பரீட்சைக்குரிய அனைத்து வினாத் தாள்களுக்கும் அம்மொழி மூலத்திலேயே விடையளிக்க வேண்டும். விண்ணப்பிக்கும் மொழி மூலத்தைப் பின்னர் மாற்றுவதற்கு அனுமதிக்கப்படமாட்டாது. பரீட்சையானது இரண்டு வினாத்தாள்களைக் கொண்டிருக்கும்.

Gazette.lk SINCE 2014 AMBITIONS REALIZED

09. **மதிப்பீட்டுச்செயன்முறை :** மொத்தப் புள்ளிகள்

| | |
|---|---|
| பொது அறிவு (எழுத்துப் பரீட்சை) | 100 (காலம் 01 மணித்தியாலம்) |
| நுண்ணறிவுப் பரீட்சை (எழுத்துப் பரீட்சை) | 100 (காலம் 01 மணித்தியாலம்) |
| தகைமை மதிப்பீட்டு நேர்முகப்பரீட்சை | 100 |

I. பொது அறிவு (காலம் 01 மணித்தியாலம், 100 புள்ளிகள்)

உதவி மாணவர் விடுதிக் காப்பாளர் (ஆண்) / உதவி மாணவர் விடுதிக் காப்பாளர் (பெண்) பதவிக்குரிய கடமைகள் மற்றும் பதவிக்குரிய நிறுவனத் தலைவர்களால் ஒதுக்கப்படும் ஏனைய கடமைகளை நிறைவேற்றுவதற்குத் தேவையான பொது அறிவைப் பரிசோதிப்பதற்காகத் தயாரிக்கப்படும் பல்தேர்வு மாதிரியான வினாத்தாளாகும்.

II. நுண்ணறிவுப் பரீட்சை (காலம் 01 மணித்தியாலம், 100 புள்ளிகள்)

අපේක්ෂකයන්ගේ සංඛ්‍යාමය හැකියාව, තර්කන ශක්තිය හා සාමාන්‍ය බුද්ධිය මැනෙන අයුරින් සකස් කර ඇති බහුවරණ මාදිලියේ ප්‍රශ්න පත්‍රයකි. விண்ணப்பதாரர்களின் நுண்ணறிவு திறமை, தர்க்க சக்தி மற்றும் பொது நுண்ணறிவை அளவிடும் வகையில் தயாரிக்கப்பட்ட பல்தேர்வு வினாத்தாளாகும்.

III. தகைமை மதிப்பீட்டு நேர்முகப்பரீட்சை (100 புள்ளிகள்)

கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சின் செயலாளரால் நியமிக்கப்படும் பரீட்சைக் குழுவினால் இவ்வறிவித்தலின் 10 ஆம் பத்தியின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள முக்கிய துறைகளின் கீழ்புள்ளிகள் வழங்கப்படும். புள்ளிகள் வழங்குவதற்காகச் கவனத்திற் கொள்ளப்படும் தகைமைகள் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் முடிவுத் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ பூர்த்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும். இங்கு வேண்டுமென்றே பொய்யான தகவல்கள் சேர்க்கப்பட்டுள்ளமை தெரியவரும் பட்சத்தில், அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அறிவுறுத்தல்களுக்கு உட்பட்டு அவ்விண்ணப்பதாரர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும்.

இப்போட்டிப் பரீட்சை மூலம் நியமனங்களைப் பெறுவதற்குத் தகுதிபெறுவதற்கு எழுத்துமூலப் பரீட்சையின் ஒவ்வொரு பாடத்திற்கும் குறைந்தபட்சம் 40 புள்ளிகள் வீதம் பெற்றும் சித்தியடைதல் வேண்டும். பரீட்சையின் திறமை வரிசைக்கு ஏற்ப நிரப்பப்படவுள்ள வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு அமைவாக வெற்றிடங்களின் எண்ணிக்கையைப் போல் இருமடங்கானோர் தகைமை மதிப்பீட்டு நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படுவர். (எழுத்துமூலப் பரீட்சையின் புள்ளிகள் அல்லது திறமை வரிசை என்பன தகைமை மதிப்பீட்டு நேர்முகப்பரீட்சைக் குழுவிற்கு வழங்கப்படமாட்டாது). அதற்கமைய நேர்முகப்பரீட்சைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட புள்ளி வழங்கும் நடைமுறைக்கு ஏற்ப புள்ளிகள் வழங்கப்படும் என்பதுடன் அடிப்படைத் தகைமைகளும் பரிசோதிக்கப்படும். பெற்ற புள்ளிகள் மற்றும் தகைமை மதிப்பீட்டு நேர்முகப்பரீட்சையில் பெற்ற புள்ளிகளின் கூட்டுத் தொகையின் அடிப்படையில் ஒவ்வொரு விண்ணப்பதாரியினதும் திறமை தீர்மானிக்கப்படும்.

10. முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பமல்லாத) தொகுதி 02 சேவை வகைக்கான ஆட்சேர்ப்புப் நடைமுறைக்கமைய உதவி மாணவர் விடுதிக் காப்பாளர் பதவிக்கு திறந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்வதற்கான தகைமை மதிப்பீட்டு நேர்முகப்பரீட்சை புள்ளி வழங்கும் நடைமுறை - 2026

<table>
<tr><td colspan="4">புள்ளிகள் வழங்கப்படும் பிரதான தலைப்புகள்</td><td>அதிகபட்ச புள்ளி</td><td>தெரிவு செய்வதற்கும் பரிசீலிக்கப்படும் குறைந்தபட்ச புள்ளி அளவு</td></tr>
<tr><td colspan="4">01. மேலதிக கல்வித் தகைமைகள்<br>(a) கல்விப் பொதுத் தராதரப்பத்திர (சாதாரண தரம்)</td><td rowspan="7">25</td><td rowspan="7">பொருத்தமின்மை</td></tr>
<tr><td rowspan="2">சித்தி</td><td colspan="3">ஒரு பாடத்திற்குரிய புள்ளிகள்</td></tr>
<tr><td>அடிப்படைத் தகைமைகள் அல்லாத பாடங்களுக்கு</td><td>அடிப்படைத் தகைமை S ஆக இருக்கும்போது</td><td>அடிப்படைத் தகைமை C ஆக இருக்கும்போது</td></tr>
<tr><td>விசேட சித்தி (A)</td><td>05 புள்ளிகள்</td><td>03 புள்ளிகள்</td><td>02 புள்ளிகள்</td></tr>
<tr><td>அதி திறமை சித்தி (B)</td><td>04 புள்ளிகள்</td><td>02 புள்ளிகள்</td><td>01 புள்ளிகள்</td></tr>
<tr><td>திறமை சித்தி (C)</td><td>03 புள்ளிகள்</td><td>01 புள்ளிகள்</td><td>0 புள்ளிகள்</td></tr>
<tr><td>சாதாரண சித்தி (S)</td><td>02 புள்ளிகள்</td><td>0 புள்ளிகள்</td><td>0 புள்ளிகள்</td></tr>
</table>

Gazette.lk SINCE 2014 AMBITIONS REALIZED

<table>
<tr><th colspan="3">புள்ளிகள் வழங்கப்படும் பிரதான தலைப்புகள்</th><th>அதிகபட்ச புள்ளி</th><th>தெரிவு செய்வதற்கும் பரிசீலிக்கப்படும் குறைந்தபட்ச புள்ளி அளவு</th></tr>
<tr><td colspan="3">(b கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தரம்)</td><td rowspan="7"></td><td rowspan="11"></td></tr>
<tr><td rowspan="2">சித்தி</td><td colspan="2">ஒரு பாடத்திற்குரிய புள்ளிகள்</td></tr>
<tr><td>அடிப்படைத் தகைமைகள் அல்லாத பாடங்களுக்கு</td><td>அடிப்படைத் தகைமை S ஆக இருக்கும்போது</td></tr>
<tr><td>விசேட சித்தி (A)</td><td>08 புள்ளிகள்</td><td>06 புள்ளிகள்</td></tr>
<tr><td>அதி திறமை சித்தி (B)</td><td>06 புள்ளிகள்</td><td>04 புள்ளிகள்</td></tr>
<tr><td>திறமை சித்தி (C)</td><td>04 புள்ளிகள்</td><td>02 புள்ளிகள்</td></tr>
<tr><td>சாதாரண சித்தி (S)</td><td>02 புள்ளிகள்</td><td>0 புள்ளிகள்</td></tr>
<tr><td colspan="3">02. கணினி அறிவு<br>* டிப்ளோமா சான்றிதழ் - 15<br>* சான்றிதழ் மட்ட - 10<br>* ஏனையவை - 05</td><td>15</td></tr>
<tr><td colspan="3">03. தாய்மொழி மற்றும் இரண்டாம் மொழி தவிர்ந்த ஏனைய மொழிகள் பற்றிய திறன்.<br>(a) உயர்தரப் பொது ஆங்கிலப் பாடம்<br>* விசேட சித்தி - ஒரு பாடத்திற்கு 06 புள்ளிகள் வீதம்<br>* அதி திறமைச் சித்தி ஒரு பாடத்திற்கு 05 புள்ளிகள் வீதம்<br>* திறமைச் சித்தி - ஒரு பாடத்திற்கு 04 புள்ளிகள் வீதம்<br>* சாதாரண சித்தி - ஒரு பாடத்திற்கு 03 புள்ளிகள் வீதம்<br>(b) ஆங்கில டிப்ளோமா -10<br>சான்றிதழ் மட்ட- 10<br>ஏனையவை - 02<br>(c) உயர்தரப் பாடமாக ஆங்கில மொழியைக் கற்றிருத்தல்<br>* விசேட சித்தி - ஒரு பாடத்திற்கு 08 புள்ளிகள் வீதம்<br>* அதி திறமைச் சித்தி ஒரு பாடத்திற்கு 06 புள்ளிகள் வீதம்<br>* திறமைச் சித்தி - ஒரு பாடத்திற்கு 04 புள்ளிகள் வீதம்<br>* சாதாரண சித்தி - ஒரு பாடத்திற்கு 03 புள்ளிகள் வீதம்<br>(d) வேறு ஏதேனும் மொழிகளுக்கு<br>* டிப்ளோமா/உயர்தர A சித்தி - 05<br>* சான்றிதழ்/ உயர்தர B சித்தி - 04<br>* ஏனையவை/உயர்தர C சித்தி - 03<br>* உயர்தர S சித்தி - 02</td><td>15</td></tr>
<tr><td colspan="3">04. தொழில் தொடர்பான முன்வைப்பு<br>* தொழில் பற்றிய புரிதல்<br>* அலுவலக முகாமைத்துவம் பற்றிய அறிவு<br>* முன்வைப்புத் திறமை<br>* ஆளுமை</td><td>20<br>10<br>10<br>5</td></tr>
<tr><td colspan="3">மொத்தப் புள்ளிகள்</td><td>100</td><td></td></tr>
</table>

(அனைத்துத் தகைமைகளும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ பூர்த்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.)

SINCE 2014 Gazette.lk AMBITIONS REALIZED

குறிப்பு 1

சான்றிதழ் சமர்ப்பிக்கப்படும் நிறுவனத்தின் அரச பதிவு இலக்கம் சான்றிதழில் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும். அவ்வாறு குறிப்பிடப்படாதிருப்பின், அரச பதிவு பெற்றுள்ளது என்பதற்கான பதிவு இலக்கம் குறிப்பிடப்பட்ட எழுத்துபூர்வமான உறுதிப்படுத்தலை உரிய நிறுவனத்திடமிருந்து பெற்றுச் சமர்ப்பிப்பது விண்ணப்பதாரியினால் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

குறிப்பு 2

மேலே குறிப்பிடப்பட்டுள்ள புள்ளி வழங்கும் நடைமுறையின் 04 ஆம் இலக்கத்தின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள முன்வைப்பிற்கு அதிக பட்சமாக 03 நிமிடங்கள் வரை முன்வைப்புச் செய்வதற்கான ஆயத்தத்துடன் சமூகமளிக்க வேண்டும்.

11. **தவறான தகவல்களை வழங்குவதற்கான தண்டனைகள்:**

I. விண்ணப்பப் படிவங்களைப் பூர்த்தி செய்யும்போது மிகவும் கவளமாகச் சரியான தகவல்களை வழங்க வேண்டும். இப்பரீட்சைக்குரிய ஒழுங்குவிதிகளுக்கு அமைவாக ஏதேனும் ஒரு விண்ணப்பதாரி அதற்குத் தோற்றுவதற்குத் தகுதியற்றவர் எனக் கண்டறியப்படும் பட்சத்தில், பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடைபெறும் போதோ அல்லது அதற்குப் பின்னரோ எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவரது அபேட்சகர் உரிமை இரத்துச் செய்யப்படலாம்.

II. விண்ணப்பதாரி ஒருவரால் வழங்கப்பட்ட தகவல்கள் பின்னர் தவறானவை எனத் தெரியவரின் அல்லது அவரே வேண்டுமென்றே ஏதேனும் ஒரு விடயத்தை மறைந்துள்ளார் என வெளிப்படுத்தப்படும் பட்சத்தில், அவருக்கு மேற்கொண்டு நியமனம் வழங்குவது குறித்துப் பரிசீலிக்கப்படமாட்டாது என்பதுடன், இப்பரீட்சையின் காரணமாக வழங்கப்பட்டிருந்த நியமனத்தை இரத்துச் செய்வதற்கோ அல்லது அரச சேவையிலிருந்து நீக்குவதற்கோ கூட அவர் உட்படுவார்.

12. **பரீட்சை நிபந்தனைகள் :**

நிகழ்நிலை (Online) விண்ணப்பப்படிவத்தை ஆங்கில மொழியில் மட்டுமே பூர்த்தி செய்தல் வேண்டும். நிகழ்நிலை விண்ணப்பப்படிவத்தைப் பூர்த்தி செய்வதற்கு முன்னர், பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்காகத் தயாரிக்கப்பட்டுள்ள பொது அறிவுறுத்தல் படிவத்தை (Common Instruction) பதிவிறக்கம் செய்து, வாசித்து, விண்ணப்பப்படிவத்தைப் பூர்த்தி செய்யும்போது அவ்வறிவுறுத்தல்களைக் கண்டிப்பான முறையில் பின்பற்றுதல் வேண்டும். விண்ணப்பதாரியினால் நிகழ்நிலை ஊடாக அனுப்பி வைக்கப்பட்ட மென் பிரதி செல்லுபடியாகும் விண்ணப்பப் படிவமாக இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் ஏற்றுக்கொள்ளப்படுகிறதா / ஏற்றுக்கொள்ளப்படவில்லையா என்பது நிகழ்நிலை முறைமையினை அணுகுவதற்குப் பயன்படுத்தப்பட்ட கையடக்கத் தொலைபேசி இலக்கத்திற்கு குறுஞ்செய்தி (SMS) மூலமாகவோ அல்லது மின்னஞ்சல் (E-mail) முகவரிக்கு அறியத்தரப்படும். (முழுமையாக பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்கள் முன்னறிவித்தலின்றி நிராகரிக்கப்படும்.)

13. பரீட்சைக் கட்டணம் ரூ. 600.00 ஆகும். பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தும்போது நிகழ்நிலை முறைமை ஊடாக வழங்கப்பட்டுள்ள பின்வரும் கட்டணம் செலுத்தும் வழிமுறைகளின் கீழ் மட்டுமே மேற்கொள்ளப்படல் வேண்டும்.

(அ) ஏதேனும் வங்கிக் கடன் அட்டை ஊடாக (Any Bank Credit Card)

(ஆ) இணையவழி செலுத்தல் வசதியைக் கொண்ட ஏதேனும் வங்கி பற்று அட்டை (Debit Card) மூலம் (Any Bank Debit Card With the Facility of Internet Transactions)

(இ) இலங்கை வங்கி நிகழ்நிலை வங்கி முறைமை / Flex செயலி மூலம் (Online Banking Method/Flex App of Bank of Ceylon)

(ஈ) ஏதேனும் இலங்கை வங்கிக் கிளையின் மூலம் (Any Branch of the Bank of Ceylon)

குறிப்பு:-

மேற்குறிப்பிட்ட முறைகளின் மூலம் செலுத் துகைகளை மேற்கொள்ளும் முறை பற்றிய அறிவுறுத்தல்கள் இணையத்தளத்தில் பரீட்சைக் குரிய தொழில்நுட்ப அறிவுறுத்தல்களின் கீழ் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

14. கொடுப்பனவு கிடைக்கப்பெற்றமை தொடர்பான குறுஞ்செய்தி (SMS) மூலமாகவோ அல்லது மின்னஞ்சல் மூலமாகவோ அறியத்தரப்படும். பரீட்சைக் கட்டணத்திற்கான முழுத் தொகையும் செலுத்தப்பட வேண்டியதுடன், பரீட்சைக் கட்டணத்தைக் குறைவாகவோ அல்லது அதிகமாகவோ செலுத்தியுள்ள விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். மேலே குறிப்பிடப்பட்டுள்ள கட்டணம் செலுத்தும் முறைகளின் மூலம் பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தும்போது ஏற்படும் தவறுகள் தொடர்பில் இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் பொறுப்பேற்கமாட்டாது.

15. பரீட்சைக்காகச் செலுத்தப்பட்ட பணம் எந்தவொரு காரணத்திற்காகவும் மீளளிக்கப்படமாட்டாது அல்லது வேறு பரீட்சைக்காக மாற்றப்படமாட்டாது.

Gazette.lk SINCE 2014 AMBITIONS REALIZED

16. விண்ணப்பப் படிவங்களை அனுப்பி வைப்பதை முடிவுத் திகதி வரை தாமதப்படுத்துவதால் ஏற்படும் ஏதேனும் பாதகமான சூழ்நிலைகளை விண்ணப்பதாரியே பொறுப்பேற்றல் வேண்டும்.

17. வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகள் மட்டுமே விண்ணப்பித்துள்ளனர் என்ற ஊகிப்பின் அடிப்படையில், விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப் படும் முடிவுத் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தி விண்ணப்பப்படிவங்களைச் சரியாக நிகழ்நிலை மூலமாக சமர்ப்பித்துள்ள விண்ணப்பதாரிகளுக்கு, பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நிகழ்நிலை ஊடாக மாத்திரம் பரீட்சை அனுமதி அட்டைகள் வெளியிடப்படும்.

18. விண்ணப்பதாரிகளுக்கு அனுமதி அட்டைகள் வெளியிடப்பட்ட உடனே அது பற்றிய அறிவித்தல் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் உத்தியோக பூர்வ இணையதளத்தில் பிரசுரிக்கப்படும் என்பதுடன், விண்ணப்பதாரிகளுக்கும் குறுஞ்செய்தி (SMS) மூலமாகவும் அறியத்தரப்படும். தனது அனுமதி அட்டை கிடைக்கப்பெறாத விண்ணப்பதாரி யாரேனும் இருப்பின், அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அது குறித்து இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் நிறுவனப் பரீட்சைகள் ஒழுங்கமைப்புக் கிளையிடம் வினவுதல் வேண்டும். அவ்வாறு வினவும்போது, விண்ணப்பதாரி தான் விண்ணப்பித்த பரீட்சையின் பெயர், தனது முழுப் பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் முகவரி ஆகியவற்றைச் சரியாகக் குறிப்பிட வேண்டும். விண்ணப்பதாரி கொழும்புக்கு வெளியேயுள்ள பிரதேசத்தில் வசிப்பவராயின், அத்தகவல்களுடன் தொலைநகல் (Fax) மூலமாக அனுமதி அட்டையின் பிரதியையொன்றை விரைவாகப் பெற்றுக்கொள்ளக்கூடிய விண்ணப்பதாரியின் தொலை நகல் இலக்கத்தைக் குறிப்பிட்டு தயாரிக்கப்பட்ட கோரிக்கைக்கடிதத்தை அறிவித்தலிலுள்ள தொலைநகல் இலக்கத்திற்கு அனுப்பி வினவுவது மிகவும் பயனுள்ளதாக அமையும். அவ்வாறு வினவும்போது இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் வினவும் ஏதேனும் தகவலை உறுதிப்படுத்துவதற்காகத் தம்மிடம் கைவசம் வைத்துள்ள விண்ணப்பப்படிவத்தின் பிரதி மற்றும் பரீட்சைக் கட்டணம் செலுத்தியமைக்கான பற்றுச்சீட்டின் பிரதி ஆகியவற்றை ஆயத்தமாக வைத்திருப்பதும் பயனுள்ளதாக இருக்கும்.

19. அனுமதி அட்டையைப் பரிசோதித்துப் பார்த்துத் திருத்தங்கள் ஏதேனுமிருப்பின் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தைத் தொடர்புகொண்டு விண்ணப்பத் திற்கு அமைவாக உரிய திருத்தங்களை மேற்கொள்வது அவசியமாகும். பரீட்சை மண்டபத்திலோ அல்லது நேர்முகப்பரீட்சையின் போதோ திருத்தங்களுக்காகக் கோரப்படும் கோரிக்கைகள் கவனத்திற் கொள்ளப்பட மாட்டாது.

20. பரீட்சைக்கான அனுமதி அட்டையில் விண்ணப்ப தாரியின் கையொப்பம் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். ஏதேனும் அரச நிறுவனத்திலிருந்து பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் ஒரு விண்ணப்பதாரி, தனது கையொப்பத்தை நிறுவனத் தலைவர் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட அதிகாரி ஒருவரைக் கொண்டும், ஏனைய விண்ணப்பதாரிகள் தமது கையொப்பத்தை அரச பாடசாலையொன்றின் அதிபர், ஓய்வுபெற்ற அதிகாரி, பிரிவின் கிராம உத்தியோகத்தர், சமாதான நீதவான், சத்தியப்பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, பிரசித்த நொத்தாரிஸ், முப்படையின் அதிகாரம் பெற்ற அதிகாரி, அரச அல்லது மாகாண அரச சேவையின் நிரந்தர பதவிநிலை உத்தியோகத்தர் அல்லது பௌத்த விகாரையின் விகாராதிபதி அல்லது தலைமைத் தேரர் அல்லது ஏனைய சமய வழிபாட்டுத் தலப் பொறுப்பாளர் அல்லது சமயப் பெரியார்களுள் குறிப்பிடத்தக்க அந்தஸ்துடைய ஒருவர் மூலமாக உறுதிப்படுத்தல் வேண்டும்.

21. பரீட்சையை நடாத்துவது சம்பந்தமாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும். விதிமுறைகளுக்குப் பரீட்சை விண்ணப்பதாரிகள் கட்டுப்படுவர். அவ்விதிமுறைகளை மீறினால் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு உட்படுவதற்கு அவருக்கு நேரிடும். பரீட்சைப் பேறுகள் தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் தீர்மானமே இறுதியான தீர்மானமாகும்.

22. **பரீட்சைக்கு அனுமதித்தல் :**

(அ) பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்பதாரிகள் தமது கையொப்பம் உறுதிப்படுத்தப்பட்ட அனுமதி அட்டையை, முதன்முதலாகப் பரீட்சை மண்டபத்தில் தோற்றும் பரீட்சைத் திகதியன்று அங்குள்ள பரீட்சை நிலையப் பொறுப்பாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும். அத்தகைய அனுமதி அட்டையைச் சமர்ப்பிக்காத விண்ணப்பதாரி ஒருவருக்குப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதிக்கப்படமாட்டாது.

(ஆ) விண்ணப்பதாரி ஒருவர் தனக்கு ஒதுக்கப்பட்ட பரீட்சை மண்டபத்திலேயே பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும். ஒவ்வொரு விண்ணப்ப தாரியும் பின்பற்ற வேண்டிய விதிமுறைகள் இவ்வர்த்தமானப் பத்திரிகையின் ஆரம்பத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

குறிப்பு : விண்ணப்பதாரி ஒருவருக்குப் பரீட்சை அனுமதி அட்டை வெளியிடப்படுவது அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளார் என்பதற்கான அங்கீகாரமாக கருதப்படமாட்டாது.

Gazette.lk SINCE 2014 AMBITIONS REALIZED

23. **விண்ணப்பதாரிகளின் ஆளடையாளம் :**

பரீட்சை விண்ணப்பதாரிகள் பரீட்சை மண்டபத்தினுள் நாம் தோற்றும் ஒவ்வொரு பாடத்திற்கும் மண்டபப் பொறுப்பாளர் திருப்தியடையும் வகையில் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துதல் வேண்டும். அதற்காகப் பின்வரும் ஏதேனும் ஒரு ஆவணம் ஏற்றுக்கொள்ளப்படும்.

I. தேசிய ஆளடையாள அட்டை ;

II. செல்லுபடியாகும் வெளிநாட்டு கடவுச்சீட்டு;

III. செல்லுபடியாகும் இலங்கை சாரதி அனுமதிப் பத்திர உரிமம்.

பரீட்சை விண்ணப்பதாரிகள் ஆளடையாளத்தை உறுதிப் படுத்திக் கொள்ளக்கூடிய வகையில் முகத்தை மூடா மலும், இலத்திரனியல் தொடர்பாடல் சாதனங்களை அணிந்திருக்கவில்லை என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளக்கூடிய வகையில் இரு காதுகளையும் மூடாமலும் பரீட்சை மண்டபத்தினுள் பிரவேசித்தல் வேண்டும். அதற்கு உடன்படாத விண்ணப்பதாரிகள் பரீட்சைமண்டபத்திற்குள் அனுமதிக்கப்படமாட்டார்கள். மேலும் பரீட்சை மண்டபத்தினுள் பிரவேசித்த சந்தர்ப்பம் முதல் பரீட்சை நிறைவடைந்து அங்கிருந்து வெளியேறும் வரை முகத்தையும் இரு காதுகளையும் மூடாமல் இருத்தல் வேண்டும்.

24. நியமன அதிகாரியினால் பெறுபேறுகளை வெளியிடுவதற்குப் பொருத்தமான திகதி அறிவிக்கப்பட்ட பின்னர், எழுத்துப் பரீட்சையில் ஒவ்வொரு பாடத்திற்கும் பெற்ற புள்ளிகள் / மொத்தப் புள்ளிகள் குறிப்பிடப்பட்ட பெறுபேற்றுப் படிவத்தைப் பரீட்சைக்குத் தோற்றிய அனைத்து விண்ணப்பதாரிகளுக்கும் தபால் மூலம் அனுப்பி வைப்பதற்கு அல்லது www.results.exams.gov.lk என்ற இணையத் தளத்தினூடாகப் பெறுபேறுகளை வெளியிடுவதற்கு இலங்கை பரீட்சைத் திணைக்களத்தினால் நடவடிக்கை எடுக்கப்படும். பரீட்சைப் பேறுகள் தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் தீர்மானமே இறுதியான தீர்மானமாகும்.

25. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் பிரசுரிக்கப்படும் இவ்வறிவித்தலின் மொழி வசனங் களிடையே ஏதேனும் முரண்பாடு அல்லது பொருத்த மின்மை காணப்படின், அத்தகைய சந்தர்ப்பத்தில் சிங்கள மொழியிலான அறிவித்தலுக்கு அமைவாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

நாலக களுவெவ,
செயலாளர்.

கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு,
"இசுருபாய",
பத்தரமுல்ல,
2026.09.09.

10 - 344

Gazette.lk SINCE 2014 AMBITIONS REALIZED

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ்க் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப் பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

**அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்களை ஏற்றுக்கொள்வார்.**

**முக்கிய கவனிப்பு.**- இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான கட்டணங்கள் யாவும் **அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும்.**

*அட்டவணை - 2026*

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| **ஒற்றோபர** | .. | வெள்ளி | *02.10.2026* | .. | *நண்பகல் 12* | வெள்ளி | *18.09.2026* |
| | | வெள்ளி | *09.10.2026* | .. | *நண்பகல் 12* | வெள்ளி | *25.09.2026* |
| | | வெள்ளி | *16.10.2026* | .. | *நண்பகல் 12* | வெள்ளி | *02.10.2026* |
| | | வெள்ளி | *23.10.2026* | .. | *நண்பகல் 12* | வெள்ளி | *09.10.2026* |
| | | வெள்ளி | *30.10.2026* | .. | *நண்பகல் 12* | வெள்ளி | *16.10.2026* |
| **நவெம்பர** | .. | வெள்ளி | *06.11.2026* | .. | *நண்பகல் 12* | வெள்ளி | *23.10.2026* |
| | | வெள்ளி | *13.11.2026* | .. | *நண்பகல் 12* | வெள்ளி | *30.10.2026* |
| | | வெள்ளி | *20.11.2026* | .. | *நண்பகல் 12* | வெள்ளி | *06.11.2026* |
| | | வெள்ளி | *27.11.2026* | .. | *நண்பகல் 12* | வெள்ளி | *13.11.2026* |
| **திசெம்பர** | .. | வெள்ளி | *04.12.2026* | .. | *நண்பகல் 12* | வெள்ளி | *20.11.2026* |
| | | வெள்ளி | *11.12.2026* | .. | *நண்பகல் 12* | வெள்ளி | *27.11.2026* |
| | | வெள்ளி | *18.12.2026* | .. | *நண்பகல் 12* | வெள்ளி | *04.12.2026* |
| | | வியாழன் | *24.12.2026* | .. | *நண்பகல் 12* | வெள்ளி | *11.12.2026* |

**பிரசன்ன ஜயரத்ன,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2026 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 02 ஆந் திகதி.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

SINCE 2014 Gazette.lk AMBITIONS REALIZED